தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

(TAMIL SHORTHAND MANUAL)

(சீனிவாசராவ் முறை)

எழுதியவர்:
ஜி. எஸ். அனந்தநாராயணன்,
தமிழ்நாடு சட்டமன்றத் தமிழ் நிருபர்

தமிழ்நாடு அரசாங்க எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால்
தமிழ்நாடு அரசாங்கத்திற்காக வெளியிடப் பெற்றது
1965 (சகம் 1887)

தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

(TAMIL SHORTHAND MANUAL)

(ஸ்ரீனிவாசராவ் முறை)

எழுதியவர் :
ஜி. எஸ். அனந்தநாராயணன்,
தமிழ்நாடு சட்டமன்றத் தமிழ் நிருபர்.

தமிழ்நாடு அரசாங்க எழுதுபொருள் அச்சுத்துறை நெறியாளரால்
தமிழ்நாடு அரசாங்கத்திற்காக வெளியிடப் பெற்றது.
1965 (சாகா 1887)

முதற் பதிப்பு – 1965 (சாகா 1887) – 5,000.

©
தமிழ்நாடு அரசாங்கம்
1965

விலை :

சாதாரண பைண்ட் : ரூ. 6·00.

காலிகோ பைண்ட் : ரூ. 7·00.

முகவுரை

1949-ல் நிறைவேறிய அரசியல் அமைப்புச் சட்டம் 345-ஆவது பிரிவின்படி, 1956-ல் தமிழ்நாடு சட்ட மன்றம் இம் மாநிலத்தின் ஆட்சி மொழி தமிழாகும் என்ற ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றியது. அதன் கீழ் எடுத்துக் கொள்ளப்பெற்ற பல நடவடிக்கைகளில் ஒன்று இத் தமிழ்ச் சுருக்கெழுத்து நூலை வெளியிடுவதாகும்.

பொருத்தமான தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்றைக் குறிப்பிட, இம் மாநில அரசாங்கம், 1954-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ஆம் தேதியில் கல்வித்துறை (பலவகை) அரசாணை எண். 996-ல் நிபுணர்க் குழு ஒன்றை நிறுவியது. இக் குழு, இரண்டு சுருக்கெழுத்து நூல்களைப் பரிசீலனை செய்து, தமிழ்நாடு சட்ட மன்றத்தின் தமிழ் நிருபர் திரு ஜி. எஸ். அனந்தநாராயணன் அவர்கள் தொகுத்த தமிழ்ச் சுருக் கெழுத்து நூலையே அரசாங்க வெளியீடாக மேற்கொள்ள சிபார்சு செய்தது. ஆட்சி மொழிக் குழுவும் இதை ஏற்க, தமிழ்நாடு அரசாங்கம் 1958-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ஆம் தேதியில் கல்வித்துறை (பலவகை) அரசாணை எண். 2222-ல் இந் நூலையே அரசாங்க வெளியீடாகப் பிரசுரிக்கவும் அதன் பிரதிகளைப் பொது மக்களுக்கு விற்பனை செய்யவும் ஏற்றுக்கொண்டது.

இந் நூல், பயிற்சிகளையும் விளக்கங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. இது தமிழ்மொழியில் ஆட்சி சிறப்புற நடைபெறப் பேருதவியாக இருக்கும் என்பதோடல்லாமல், தமிழ்ச் சுருக்கெழுத்து கற்போர் அனைவருக்கும் பாட புத்தகமாகவும் பயன்படும்.

பொருளடக்கம்

அத்தியாயம்	பக்கம்
1. மெய்யெழுத்துக்கள்	1
2. உயிரெழுத்துக்கள்	7
3. இடைப்படும் உயிர்களும் எழுதும் இடமும்	12
4. மாற்று உருவங்கள் ர/ற, ஹ, க்ஷ	16
5. கூட்டு உயிர்கள்	20
6. வேற்றுமைகள்	25
7. சுருக்கம்	28
8. சிறிய சுழி	34
9. பெரிய சுழி	41
10. நீண்ட சுழி	47
11. ர், ல் - கொக்கிகள்	52
12. குறுக்கிடும் உயிர்களும் கொக்கிகளுக்கு முன் சுழிகளும்	59
13. த - கொக்கி	65
14. ன், வ் - கொக்கிகள்	69
15. ள்/ழ் - கொக்கி	75
16. த, வ, ஷ, ள்ள - மாற்று உருவங்கள்	82
17. ல, ஷ - மேலும் கீழும்	86
18. பாதியாக்கும் முறை	89
19. இரட்டிப்பு முறை	96
20. எண்களும் பேச்சை எடுக்கும் முறையும்	101
21. வேறுபாட்டுக் குறிகள்	109
22. பிரத்தியேகச் சுருக்கங்கள் (பகுதி - 1)	118
23. பிரத்தியேகச் சுருக்கங்கள் (பகுதி - 2)	126
24. அடைமொழிகள்	147

அத்தியாயம் பக்கம்

25. பிரத்தியேகச் சுருக்கங்கள் (பகுதி - 3) 154

26. வெட்டும் முறை 165

27. பிரத்தியேகச் சுருக்கங்கள் (பகுதி - 4) 176

அநுபந்தம்

1. 1. ரெவின்யூ சம்பந்தமான வார்த்தைகள் .. 185

2. கோர்ட்டு சம்பந்தமான வார்த்தைகள் .. 185

3. சட்டசபை சம்பந்தமான வார்த்தைகள் .. 186

4. கிழமைகள் 186

5. மாதங்கள் 187

6. முக்கிய இடங்கள் 187

7. ஆங்கில மொழிச் சொற்கள் 187

8. வடமொழித் தொடர்கள் 188

2. தனிக்குறிச்சொற்கள் - அகர வரிசையில் .. 189

3. தனிக்குறிச்சொற்கள் - மெய்க்குறிகளின் வரிசையில் 192

4. குறி விளக்கம் 194

5. பொருள் குறிப்பு அகராதி 196

தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

(ஒலிக்குறி)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

அத்தியாயம் 1

மெய்யெழுத்துக்கள்

எழுத்து. (1) சொல்லிற்கு முதற்காரணமாக உள்ள ஒலியே எழுத்தெனப் படும். எழுத்திற்கு ஒலி வடிவம், வரி வடிவம் என இருவகை வடிவங்கள் உண்டு. எழுத்துக்கள் பேசப்படும்பொழுது ஒலி வடிவம் பெறும். எழுதப் படும்பொழுது வரிவடிவம் பெறும். பேசப்படும்பொழுது எழுத்துக்கள் பெறும் ஒலி வடிவத்திற்குத் தக்கபடியே சுருக்கெழுத்து அமையும்.

முதலெழுத்து. (2) எழுத்துக்கள் முதலெழுத்துக்கள், சார்பெழுத்துக் கள் என இரு வகைப்படும். மற்ற எழுத்துக்கள் உண்டாவதற்குக் காரணமாகவுள்ள எழுத்துக்கள் முதலெழுத்துக்களாம். அவை உயிரெழுத் துக்கள், மெய்யெழுத்துக்கள் என இரு வகைப்படும். உயிரெழுத்துக்களின் இலக்கணம் அடுத்த அத்தியாயத்தில் கூறப்படும்.

மெய்யெழுத்துக்கள். (3) க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்ற இப்பதினெட்டும், ஜ், ஷ், ஸ், ஹ், க்ஷ் என்ற வடமொழி எழுத்து ஐந்துமாகச் சேர்ந்து மெய்யெழுத்துக்கள் 23 ஆகும்.

மெய்க்குறிகள். (4) எல்லா மெய்யெழுத்து ஒலிகளுக்கும், (ழ், ண், ய், ள், ஹ், க்ஷ் இவை தவிர) கீழே வரும் படங்களில் உள்ள நேர்கோடு, வளைவு கோடுகளைக் கொண்டே மெய்க்குறிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதை மெய்க்குறிகள் அட்டவணையில் காண்க.



ஜோடி மெய்க்குறிகள். (5) பலகை, கம்பம் என்ற வார்த்தைகளில் வரும் 'ப' என்ற எழுத்தைக் கவனிக்க. வரிவடிவத்தில் இரண்டிற்கும்

தமிழில் வேறுபாடு இல்லையென்றாலும், ஒலி வடிவத்தில் ‘பலகை’ என்பதிலுள்ள ‘ப’வுக்கும், ‘கம்பம்’ என்பதிலுள்ள ‘ப’வுக்கும் வேறுபாடு உண்டு. இவ்வேறுபாட்டைக் குறிக்க, எழுதும்போது முன்னது மெல்லவும், பின்னது சற்று அழுத்தியும் எழுதப்படும். அழுத்தி எழுதப்படுகிற மெய்க்குறிக்குரிய எழுத்தின் அடியில் புள்ளி வைத்துக் காட்டப்படும்.





இவை ஜோடி மெய்க்குறிகள் எனப்படும்.

கொக்கியுள்ள மெய்க்குறிகள். (6) வளைவுகோடு, நேர்கோடு ஆகியவற்றின் ஆரம்பத்தில் சிறிய கொக்கியோ, பெரிய கொக்கியோ சேர்த்துச் சில மெய்க்குறிகளாகக் கொடுக்கப்பட்டிருப்பதைக் கீழே பார்க்க.



இந்த ஐந்தும் கொக்கியுள்ள மெய்க்குறிகள் எனப்படும். ஆனால் ஹ என்பதற்கு ஆரம்பத்தில் சிறிய சுழி இருப்பதைக் கவனிக்க.

(7) என்ற வட்டத்தின் மேல்புற இடது வளைவு ல. வலது வளைவு ர/ற. கீழ்ப்புற இடது, வலது வளைவுகள் ஷ. ‘ஷ’ வை அழுத்தி எழுதினால் ‘வ’ என்று ஆகும்.

(8) ‘ல’ பெரும்பாலும் எழுதும் வரியிலிருந்து மேல்நோக்கி எழுதப்பட்டாலும், சில சமயம் கீழ் நோக்கியும் எழுதப்படும்; அவ்வாறே ‘ஷ’ எழுதும் வரியை நோக்கி மேலிருந்து கீழ்ப்பக்கமாக எழுதப்பட்டாலும் சில சமயம் மேல் நோக்கியும் எழுதப்படும். அதற்கான விதிகள் பின்பு சொல்லப்படும்.

(9) ‘ள்’ என்பதோடு ‘ள’ சேர்ந்து ‘ள்ள’ என்று வந்தால் அதைக் காட்ட என்று குதிரை லாடம் போல இரண்டு விதமாக எழுதப்படும்; ‘ம்’ என்பதோடு ‘ப’ சேர்ந்து ‘ம்ப’ என்று வந்தால் அதைக் காட்ட ‘ம்’ என்பது அழுத்தி ம்ப என்று எழுதப்படும்.

(10) வ, த, ஷ, ர/ற, ஹ, க்ஷ, ள்ள ஆகியவற்றுக்கு இரு உருவங்கள் கொடுக்கப்பட்டிருப்பதை மெய்க்குறிகள் அட்டவணையில் காண்க. எந்த எந்த உருவத்தை எவ்வெப்போது எழுதுவது என்பதற்கான விதிகள் பின்பு சொல்லப்படும்.

மெய்க்குறிகளின் வகைகள். (11) மெய்க்குறிகள் எழுதும் வாகை யொட்டிக் கீழ்க் கோடுகள், மேற்கோடுகள், படுக்கைக் கோடுகள் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும்.

(12) எழுதும் வரியை நோக்கி மேலிருந்து கீழ்ப்பக்கமாக எழுதப்படு வனவெல்லாம் கீழ்க் கோடுகள்.



ப, பு, ட, டு, ச்ச, ஜ, ஷ, வ,



த, து, ச/ஸ, ர/ற, ஹ, க்ஷ.

(13) எழுதும் வரியிலிருந்து மேல் நோக்கி எழுதப்படுவனவெல்லாம் மேற்கோடுகள்.



ல, ர/ற, ய, ள, க்ஷ, ஹ.

(14) எழுதும் வரியிலேயே இடமிருந்து வலமாக எழுதப்படுவனவெல் லாம் படுக்கைக் கோடுகள்.

க, கு, ழ, ம, ம்ப, ந/ன,

ஞ, ங, ண, ள்ள.

(15) மெல்லிய கோடுகள் எழுதும் வரியிலிருந்து மேல் நோக்கியோ, எழுதும் வரியை நோக்கிக் கீழ் நோக்கியோ எழுதப்படுவதை மேலே பார்க்க. ஆனால் அழுத்தமான கோடுகள் கீழ் நோக்கியே எழுதப்படுவதன்றி மேல் நோக்கி எழுதப்படுவதில்லை.

மெய்க்குறிகளின் நீளம். (16) $\frac{1}{6}$ அங்குல நீளத்தில் ஒரே அளவாக மெய்க்குறிகளை எழுதிப் பழக வேண்டும். இந்த அளவைப் பாதியாக்கி எழுதும் முறையும், இரட்டிப்பாக்கி எழுதும் முறையும் பின்பு வரும். ஆதலால் வரையறையாக ஒரே அளவில் இருப்பது அவசியம்.

மெய்க்குறிகளின் பெயர்கள். (17) நன்றாகப் பழக்கம் ஆகும் வரையில் மெய்க்குறிகளை எழுதும்பொழுது அவற்றின் ஒலியையும் வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே எழுத வேண்டும். அதாவது \ என்பதை 'ப' என்று சொல்லிக் கொண்டே எழுத வேண்டும்.

மெய்க்குறிகள் அட்டவணை-1

மெய்யெழுத்து	ஒலி	குறி	எழுதும் வாகு	இவ்வொலிகள் வரும் வார்த்தைகள்	மெய்யெழுத்து	ஒலி	குறி	எழுதும் வாகு	இவ்வொலிகள் வரும் வார்த்தைகள்
ப்	ப			பலகை	ம்	ம			மலை
ப்	ப̣			பம்பாய்	ம்ப	ம்ப			தம்பி
ட்	ட			கட்டு	ந்/ன்	ந/ன			நடி, ஆனி
ட்	ட̣			படம்	ஞ்	ஞ			ஞானம்
ச்	ச்ச			பச்சை	ங்	ங			பாசாங்கு
ஜ்	ஜ			ஜாடி	ண்	ண			அணு
க்	க			கலம், வகை	ல்	ல			லாபம்
க்	க̣			கங்கை	ய்	ய			யானை
ஷ்	ஷ			வேஷம்	ள்	ள			வளம்
வ்	வ			வாக்கு	ள்ள	ள்ள			உள்ளம்
த்	த			தகப்பன்	ர்/ற்	ர/ற			ரதி, ஆறு
ச்/ஸ்	ச/ஸ			ஸரஸ்வதி, பசி.	ஹ்	ஹ			ஹாரம்
த்	த̣			அந்தம்	க்ஷ்	க்ஷ			மோக்ஷம்
ழ்	ழ			அழகு					





(18) ச்ச, ர/ற என்ற இரண்டும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகக் காணப்பட்டாலும் எழுதும் போக்கில் வேறுபாடு உண்டு. அதாவது ச்ச குத்துக் கோட்டிலிருந்து 30 டிகிரி கோணத்தில் என்று கீழ்நோக்கியே எழுதப்படும். படுக்கைக் கோட்டிலிருந்து 30 டிகிரி கோணத்தில் ர/ற (மேல்) என்று மேல் நோக்கியே எழுதப்படும்.

பயிற்சி - 1

1. அட்டவணை 1-ல் கண்ட மெய்க்குறிகளை அடிக்கடி எழுதிப் படிக்க.
2. கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க.



3. கீழ்க்கண்ட படங்களில் என்ன என்ன மெய்க்குறிகள் இருக்கின்றன? அவற்றைத் தனித்தனியாக எழுதிப் பழகுக.

சேர்க்கைக் கோடுகள். (19) கோடுகள் சேர்க்கப்படும்பொழுது கையை எடுக்காமலேயே சேர்த்து எழுதப்படும். அப்படிச் சேர்க்கும்பொழுது முன் கோட்டின் இறுதியும், பின் கோட்டின் தொடக்கமும் இணையும்படி சேர்த்து எழுதப்படுவதைக் கீழே காண்க.



(20) ஆனால் ஒரு வளைவு கோட்டு மெய் இரட்டிக்கும்பொழுது வளைவு கோட்டின் நீளம் இரட்டிப்பாக்கப்படும். உ-ம்,



பாடச் சுருக்கம்

1. சுருக்கெழுத்து, ஒலி வடிவத்திற்குத் தக்கபடி எழுதப்படும்.

2. மெய்யெழுத்து ஒலிகளுக்கு நேர்கோடு, வளைவு கோடுகளைக் கொண்டே குறிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

3. மெய்க்குறிகள் 34. அவை கீழ்க் கோடுகள் 17, மேற்கோடுகள் 6, படுக்கைக் கோடுகள் 11 என மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும்.

4. மெல்லிய கோடுகள் மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ எழுதப்படும். ஆனால் அழுந்திய கோடுகள் மேல் நோக்கி எழுதப்படுவதே இல்லை.

5. கோடுகள் $\frac{1}{6}$ அங்குல நீளத்திலே, ஒரே அளவாக எழுதப்படும்.

6. 'ச்ச' எப்பொழுதும் குத்துக் கோட்டிலிருந்து 30 டிகிரி கோணத்தில் கீழ்நோக்கியும், ர/ற (மேல்) படுக்கைக் கோட்டிலிருந்து 30 டிகிரி கோணத்தில் மேல் நோக்கியும் எழுதப்படும்.

7. கோடுகள் சேர்க்கப்படும்பொழுது கையை எடுக்காமல், முன் கோட்டின் இறுதியும், பின் கோட்டின் தொடக்கமும் இணையும்படி சேர்த்து எழுதப்படும்.

8. வளைவு கோட்டு மெய்கள் இரட்டிக்கும்பொழுது, வளைவு கோடுகளின் நீளம் இரட்டிப்பாக்கப்படும்.

[விதிகள் : 1-20]

அத்தியாயம் 2

உயிரெழுத்துக்கள்

உயிரெழுத்துக்கள். (21) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு.

(22) உயிரெழுத்துக்கள் குறில், நெடில் என இரு வகைப்படும். குறுகிய ஓசையையுடைய அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தெழுத்துக்களும் (குற்றெழுத்து) குறில்; நீண்ட ஓசையையுடைய ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் ஐந்தும் (நெட்டெழுத்து) நெடில். ஐ, ஔ இரண்டும் நெடிலாஞலும் இரண்டு உயிர்கள் இணைந்த கூட்டு உயிர்கள் ஆதலால் இவை பின்பு வரும்.

உயிர்க்குறிகள். (23) குறில், 'அ, எ, இ' மூன்றும் மெல்லிய புள்ளியாலும், 'ஒ, உ' இரண்டும் மெல்லிய குறுங்கோட்டாலும், நெடில் 'ஆ, ஏ, ஈ' மூன்றும் அழுந்திய புள்ளியாலும், 'ஓ, ஊ' இரண்டும் அழுந்திய குறுங் கோட்டாலும் காட்டப்படும்.

	குறில்				நெடில்			
1.	அ	·			ஆ	•		
2.	எ	·	–	ஒ	ஏ	•	▬	ஓ
3.	இ	·	–	உ	ஈ	•	▬	ஊ

உயிர்க்குறிகளின் இடம். (24) உயிர்க்குறிகளைப் போட ஒவ்வொரு கோட்டிற்கும் அருகில் முதல் இடம், இரண்டாம் இடம், மூன்றும் இடம் என மூன்று இடங்கள் உண்டு. அதனால் அவ்விடங்களில் போடப்படும் உயிர்கள் முதலிடத்து உயிர்கள், இரண்டாமிடத்து உயிர்கள், மூன்றுமிடத்து உயிர்கள் எனக் கூறப்படும். கோடு ஆரம்பமாகும் இடத்திலிருந்து உயிர்க்குறியின் இடங்கள் எண்ணப்படும். அதனல் கீழ்க் கோடானல் மேலிருந்து கீழும், மேற்கோடானல் கீழிருந்து மேலும், படுக்கைக் கோடானல் இடமிருந்து வலமும் எண்ணப்படும்.



உயிர்க்குறிகளின் உபயோகம். (25) மெல்லிய புள்ளியை முதலிடத்தில் போட்டால் அது உயிர் 'அ' என்பதையும், இரண்டாம் இடத்தில் போட்டால் அது உயிர் 'எ' என்பதையும், மூன்றுமிடத்தில் போட்டால் அது உயிர் 'இ' என்பதையும் காட்டும்; அவ்வாறே மெல்லிய குறுங்கோட்டை இரண்டா

மிடத்தில் போட்டால் அது உயிர் 'ஒ' என்பதையும், மூன்றுமிடத்தில் போட்டால் அது உயிர் 'உ' என்பதையும் காட்டும்.

(26) உயிர்க்குறிலுக்கு மெல்லிய உயிர்க்குறிகளை எந்த எந்த இடங்களில் போட்டோமோ அந்த அந்த இடங்களில் அழுந்திய உயிர்க்குறிகளைப் போட்டால் அவை அந்த அந்தக் குறிலுக்கு இனமான நெடிலையே காட்டும். எழுதும்போது மெய்க்குறிகளை எழுதிவிட்டே தனித்து உயிர்க்குறிகள் போடப்படும். உ-ம்.



பயிற்சி - 2

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க



ஆரம்ப உயிர்க்குறிகள். **(27)** உயிரெழுத்தை ஆரம்பத்தில் கொண்டு பல வார்த்தைகள் வருகின்றன. உ-ம். அடி, ஓடி, இடி. இவற்றைக் காட்ட முன்போலவே மெய்க்குறிகளுக்கு முன் ...... அடி, ... ஓடி, ... இடி என்று உயிர்க்குறிகளைப் போட்டுக் காட்டலாம். இருந்தாலும் பின்வரும் கோடுகளுடன் சேர்த்து எழுதி, சுலபமாகப் படிக்கும் சௌகர்யத்தை உத்தேசித்து, ஆரம்பத்தில் மெய்க்குறிகளுக்கு முன் வரும் உயிர்களுக்குப் புள்ளியல்லாத வேறு குறிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(28) உதாரணமாக, 'அ' அல்லது 'ஆ' என்பதற்கு ᑦ ᑐ என இரண்டு உருவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மெய்க்குறிகளோடு சேர்த்து எழுதும்போது இவற்றில் எந்த உருவம் அவற்றோடு வாகாகச் சேர்த்து எழுத வருகிறதோ அந்த உருவம் சேர்த்து எழுதப்படும். இக்குறிகளில் குறில், நெடில் இரண்டிற்கும் வேறுபாடு இல்லை. சந்தர்ப்பத்தைக் கொண்டே அவ்வேறுபாட்டை அறிய வேண்டும். உ-ம்.



(29) இந்த ஆரம்ப உயிர்க்குறிகளை எந்த எந்த மெய்க்குறிகளோடு சேர்த்து எழுதுவது வாகில்லாமல் இருக்கிறதோ அங்கெல்லாம் வாகாக எழுதுவதை உத்தேசித்து மெய்க்குறிகளுக்கு முன்னால் இயல்பான புள்ளி உயிர்க்குறிகளே போட்டுக் காட்டப்படும். உ-ம்.

ஆட்சேபி,  ஏற்க, ஓசி.

(30) இந்த வகையில் ஒரு கோட்டுக்கு முன்னால் போடும் உயிர்க்குறிகள் அந்தக் கோட்டினால் குறிக்கும் மெய்க்கு முன்னால் படிக்கப்படும்; பின்னால் வரும் உயிர்கள் அந்தக் கோட்டுக்குரிய மெய்க்குப் பின்னால் படிக்கப்படும்.

(31) கீழே வரும் அட்டவணையில் ஆரம்ப உயிர்க்குறிகளுக்குரிய புள்ளி யல்லாத வேறு குறிகளையும், அவற்றில் எந்த எந்த உருவம் எந்த எந்த மெய்க்குறியோடு சேர்க்க வாகானது என்பதையும் காண்க. மேலும், ஆரம்ப உயிர்க்குறிகளைச் சேர்க்க வாகில்லாத மெய்க்குறிகளுக்குமுன் புள்ளி உயிர்க் குறிகளே போடப்பட்டிருப்பதையும் காண்க.

ஆரம்ப உயிர்க்குறிகள் அட்டவணை-2

உயிர்	குறி	வாகாகச் சேர்த்து எழுதப்படும் விதம்
அ/ஆ		
இ/ஈ		
உ/ஊ	 மேல் அல்லது கீழ்	
எ/ஏ		
ஒ/ஓ		

(32) மெய்களுக்கு முன் வரும் உயிர்களுக்கு ஆரம்ப உயிர்க்குறிகளைச் சேர்த்து எழுதுவதையும், மெய்களுக்குப் பின்பு வரும் உயிர்களுக்கு புள்ளி உயிர்க்குறிகளே போடப்படுவதையும் கீழே வரும் பயிற்சியில் காண்க.

பயிற்சி - 3

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

ஆடி, ஓடி, ஏடு, இடி,
ஓது, அம்பி, ஏவி, ஆசி,
ஊழி, அக்கினி, உணவு, ஆவடி,
உடம்பு, ஏணி, அம்மா, அண்ணு,
அவா, ஏழு, அஞ்சலி, அழகு.

ஈற்று உயிர்க்குறிகள். (33) 'ஆ, ஏ, ஓ' ஆகிய மூன்று உயிர்களும் மிக அதிகமாக வார்த்தைகளின் ஈற்றில் வரும்.

வார்த்தைகளின் ஈற்றில் வரும் 'ஆ' என்னும் உயிர் வினப் பொருளையோ, வியப்புப் பொருளையோ அளிக்கும். 'ஏ' என்னும் உயிர் வினப் பொருள், சொல்லழுத்தம், எதிர்மறை முதலியவற்றைக் குறிக்கும். 'ஓ' என்னும் உயிர் வினப் பொருள், ஐயம் முதலியவற்றைப் புலப்படுத்தும். வார்த்தைகளின் ஈற்றில் வரும் 'ஆ, ஏ, ஓ' என்ற மூன்று உயிர்களும் வெவ்வேறு குறிகளால் குறிக்கப்படும். இவற்றைக் கீழே வரும் உதாரணங்களில் காண்க. உ-ம்.

ஹரியா, ஹரியே, ஹரியோ,
கோபுவா, கோபுவே, கோபுவோ,
காடா, காடே, காடோ.

(34) ஈற்று உயிர்க்குறி 'ஏ'க்குப் பிறகு மற்றும் ஓர் 'ஏ' வந்தால் 'ஏ' கொக்கிக்குள்ளேயே வேறொரு கொக்கி போடப்படும்; 'ஓ' வந்தால் சுழித்து விடப்படும். உ-ம்.

உள்ள, உள்ளே, உள்ளேயே, உள்ளேயோ.

பயிற்சி - 4

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

வழியோ, கவியோ, மாதோ,
உள்ளோ, உமாவா, காமுவா,
பாடாதோ, கேளாதோ, கேட்காதோ,
கேட்காதே, ஆடாதே, ஆடாதோ.

பாடச் சுருக்கம்

1. உயிர்க்குறில் ஐந்தில் மூன்று மெல்லிய புள்ளியாலும், இரண்டு மெல்லிய குறுங்கோட்டாலும், உயிர் நெடில் ஐந்தில் மூன்று அழுந்திய புள்ளியாலும், இரண்டு அழுந்திய குறுங்கோட்டாலும் காட்டப்படும்.

2. உயிர்க்குறிகளைப் போட ஒவ்வொரு கோட்டிற்கும் அருகில் மூன்று இடங்கள் உண்டு.

3. கோடுகள் ஆரம்பமாகும் இடத்திலிருந்து உயிர்க்குறியின் இடங்கள் எண்ணப்படும்.

4. எழுதும்போது கோடுகளை எழுதிவிட்டே உயிர்க்குறிகள் தனித்துப் போடப்படும்.

5. ஆரம்பத்தில் வரும் உயிர்களுக்கும், ஈற்றில் வரும் 'ஆ, ஏ, ஓ' ஆகிய மூன்று உயிர்களுக்கும், புள்ளியல்லாத வேறு குறிகள் கொடுக்கப்படும்.

6. ஆரம்ப உயிர்க்குறிகளில் குறில், நெடில் இரண்டிற்கும் வேறுபாடு இல்லை; சந்தர்ப்பத்தைக் கொண்டே அவ் வேறுபாடு அறியப்படும்.

[விதிகள் : 21 - 34]

அத்தியாயம் 3

இடைப்படும் உயிர்களும் எழுதும் இடமும்

இடைப்படும் உயிர்க்குறிகள். (35) இரண்டு கோடுகளினிடையே வரும் முதல் இடத்து, இரண்டாம் இடத்து உயிர்க்குறிகள் முதலில் வரும் கோட்டுக்குப் பின்னால் போடப்படும். உ-ம்.



காடு, கேடு, பாலு, போல.

ஆனால் மூன்றும் இடத்து உயிர்க்குறிகள் வந்தால் அவற்றை வாகாகக் குறிக்க, இரண்டாவது கோட்டின் முன்னே மூன்றும் இடத்தில் போடப்படும். உ-ம்.



கூடு, புலி, மிதி, முனி.

(36) இம் முறைப்படி உயிர்க்குறிகள் எப்படி மூன்றும் இடத்தில் போடப் படுகின்றன என்பதைக் கீழ்க்கண்ட படங்களில் காண்க.



எழுதும் இடம். (37) உயிர்க்குறிகளைப் போடுவதற்கு மூன்று இடங்கள் இருப்பது போலவே, வார்த்தைகளின் குறித்தொடரை எழுதுவதற்கும் மூன்று நிலைகள் உள்ளன. முதல் நிலை எழுதும் வரிக்கு மேல் அமையும். இரண்டாம் நிலை எழுதும் வரியை ஒட்டியது. மூன்றும் நிலை எழுதும் வரியினூடே அமையும். வார்த்தைகளின் முதலில் வரும் உயிரொலிதான் குறித்தொடரின் நிலையைச் சரியாக நிர்ணயிக்கிறது.

1. ஒரு வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி முதல் இடத்ததானால் குறித்தொடர் முதல் நிலையில் எழுதப்படும். உ-ம்.



பாமா, அளி, காடு, காலி.

2. ஒரு வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி இரண்டாம் இடத்ததானால் குறித்தொடர் இரண்டாம் நிலையில் எழுதப்படும். உ-ம்.

போக, ஒளி, கோடு, கோலி.

3. ஒரு வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி மூன்றும் இடத்த தானால் குறித்தொடர் மூன்றும் நிலையில் எழுதப்படும். உ-ம்.



பிடி, உளி, கூடு, கூலி.

(38) மேலே உள்ள உதாரணங்களிலிருந்து குறித்தொடரின் முதலில் வரும் மேற்கோடோ, கீழ்க்கோடோதான் எழுதும் நிலையைச் சரியாகக் காட்டுகிறது என்பது தெரிய வரும்.

(39) படுக்கைக்கோட்டை வரியின் ஊடே எழுதுவது சாத்தியம் அல்ல. ஆகையினால் படுக்கைக் கோடுகளை மாத்திரம் கொண்ட குறித்தொடர்கள், அவற்றின் முதலில் வரும் உயிரொலி முதல் இடத்ததானால் முதல் நிலையிலும், இரண்டாம் மூன்றும் இடத்ததானால் இரண்டாவது நிலையிலுமே எழுதப்படும். உ-ம்.

கனி, கூனி, கோழி, கிழி.

பயிற்சி - 5

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

ஷோக்கு, பூமி, கிலி, புலி,
நீதி, நெடி, மேனி, குறி,
கயிறு, உயிர், உறவு, துயர்,
திணி, வெளி, வெடி, பிணி,
ஆகியது, முந்தி, மோகினி, வாணி.

தனிக்குறிச் சொற்கள். (40) அடிக்கடி வரக்கூடிய சொற்கள் சுருக்கெழுத்தில் ஒரு தனிப்பட்ட குறியால் காட்டப்படும். உ-ம். அப்பொழுது. இத்தகைய வார்த்தைகளுக்குத் தனிக்குறிச் சொற்கள் என்று பெயர். அவற்றைக் குறிக்கும் சுருக்கெழுத்துக் குறிகளுக்குத் 'தனிக்குறிகள்' என்று பெயர். 'வரிக்குமேல், வரியை ஒட்டி, வரியினூடே,' அப்பொழுது, எப்பொழுது, இப்பொழுது என்று தனிக்குறிகள் மூன்று நிலைகளிலும் எழுதப்படும். இனிமேல் ஒவ்வொரு பயிற்சிக்கும் முன்பு சில தனிக்குறிச் சொற்கள் கொடுக்கப்படும். அவற்றை நன்றாகப் பலமுறை எழுதி எழுதிப் பழக்கம் செய்துகொள்ள வேண்டும்.

(41) தனிக்குறிச் சொற்களுக்கு ஈற்றில், 'ஆ, ஏ, ஓ' வந்தால் ஈற்று உயிர்க்குறிகள் போடப்படும். (விதி - 33.) உ-ம்.

அப்பொழுதா, அப்பொழுதே, அப்பொழுதோ.

நிறுத்தக் குறிகள். (42) பேச்சின் நடுவில் வரும் முற்றுப்புள்ளி × என்றும், இடைநிறுத்தம் ∠ என்றும், கேள்விக் குறி ?× என்றும், ஆச்சரியக் குறி !× என்றும் காட்டப்படும். காமா முதலிய மற்ற நிறுத்தக் குறிகள் அவற்றுக்குரிய உருவத்திலேயே எழுதப்படும். சிறப்புப் பெயர்கள், பிறமொழிச் சொற்கள் ஆகியவற்றுக்கு மட்டும் மற்றவற்றிலிருந்து அவற்றைப் பிரித்துக் காட்டத் தேவையானால் அவற்றின் அடியில் இரு சிறு கோடுகள் போடப்படும்.

தனிக்குறிச் சொற்கள்

\ அப்பொழுது/போது, \ எப்பொழுது/போது,

\ இப்பொழுது/போது; | அந்த, | எந்த, | இந்த;

— ஆகையால், — ஆகையினுல்; / ஆச்சரிய/மாய்,

/ எச்சரிக்கை/யாய், / உசித/மாய்; — ஐக்கிய/மாய்;

⌣ நமது, ⌣ நியாய/மாய், ⌣ அநியாய/மாய்;

⌣ அங்கு, ⌣ எங்கு, ⌣ இங்கு.

பயிற்சி - 6

சுருக்கெழுத்தில் எழுதுக

ராதா, இப்பொழுதே இங்கு வா. உன் பள்ளி எங்கே உள்ளது?

ராமு, உன்பால் பழி உள்ளது. ஆகையினுல் இனி எச்சரிக்கையாய், நியாயமாய் நீ போ. உசிதமாய்ப் பேசு.

மேகலா, இப்பொழுது அங்கே உனக்கு என்ன ஜோலி?

அந்த வழி நீ இனிப் போகாதே.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. இரண்டு கோடுகளினிடையே வரும் முதல் இடத்து, இரண்டாம் இடத்து உயிர்க்குறிகள் முதலில் வரும் கோட்டுக்குப் பின்னால் போடப்படும். மூன்றாம் இடத்து உயிர்க்குறிகள் இரண்டாம் கோட்டின் முன்னால் மூன்றாம் இடத்தில் போடப்படும்.

2. உயிர்க்குறிகளைப் போடுவதற்கு மூன்று இடங்கள் இருப்பது போலவே, வார்த்தைகளின் குறித்தொடரை எழுதுவதற்கும் மூன்று நிலைகள் உண்டு.

3. முதல் நிலை என்றால் எழுதும் வரிக்கு மேலும், இரண்டாம் நிலை என்றால் வரியை ஒட்டியும், மூன்றாம் நிலை என்றால் வரியினூடேயும் குறித்தொடர்கள் எழுதப்படும்.

4. வார்த்தைகளின் முதலில் வரும் உயிரொலிதான் குறித்தொடர்களின் நிலையைச் சரியாக நிர்ணயிக்கும்.

5. குறித்தொடரின் முதலில் வரும் மேற்கோடோ, கீழ்க்கோடோதான் எழுதும் நிலையைச் சரியாகக் காட்டும்.

6. ஒரு தனிப்பட்ட குறியால் காட்டப்படும், அடிக்கடி வரக்கூடிய வார்த்தைகளுக்குத் தனிக்குறிச் சொற்கள் என்று பெயர். அவற்றைக் குறிக்கும் சுருக்கெழுத்துக் குறிகளுக்குத் 'தனிக்குறிகள்' என்று பெயர்.

7. முற்றுப்புள்ளி × என்றும், இடைநிறுத்தம் ⌐¬ என்றும், கேள்விக் குறி ?/× என்றும், ஆச்சரியக் குறி !/× என்றும் காட்டப் படும்.

8. சிறப்புப் பெயர்கள், பிறமொழிச் சொற்கள் ஆகியவற்றை மற்றவற்றி லிருந்து பிரித்துக் காட்ட அவற்றின் அடியில் இரு சிறு கோடுகள் போடப்படும்.

[விதிகள் : 35 - 42]

அத்தியாயம் 4

மாற்று உருவங்கள் ர/ற, ஹ, க்ஷ

ர/ற, ஹ, க்ஷ ஆகிய மெய்களில் ஒவ்வொன்றுக்கும், மற்றொன்றோடு வாகாகச் சேர்த்து எழுதவும், ஆரம்ப, ஈற்று உயிரொலிகளைக் காட்டவும் மேற்கோடு, கீழ்க்கோடு என முறையே , , , இரண்டு உருவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மெய்யெழுத்து ர/ற. (43) உயிரை முன்னதாகக் கொண்டு ஆரம்பத்தில் ர/ற வந்தால் கீழ்க்கோடு எழுதப்படும். உ - ம்.

ஆற்காடு, ஊர்மாடு, ஊர்,  உறி.

(44) முடிவில் ர/ற வுக்குப் பின் உயிரொலி வந்தால் மேற்கோடும், உயிரொலி இல்லாதபோது கீழ்க்கோடும் எழுதப்படும். உ - ம்.

 பறி,  பார்,  நெறி,  நேர்.

(45) வாகான சேர்க்கையை உத்தேசித்து, ம வுக்கு முன் கீழ்க்கோடு ர/ற எப்பொழுதும் எழுதப்படும். உ - ம்.

ரமணி,  ராமநாதா, ஒருமிக்க.

(46) நேர்கோட்டு மேற்கோடுகளுக்குப் பின் ர/ற வந்தால், வாகான சேர்க்கையை உத்தேசித்து, மேற்கோடு எழுதப்படும். உ - ம்.

 தளிர்,  ஹரி,  கிளறி.

(47) வாகாக எழுதுவதே முக்கியமாகையால் ஆரம்ப உயிரொலியைக் கூடக் கவனிக்காமல் ச்ச, ச/ஸ, ஜ, ட, த, வ, ள, ய, ழ போன்றவற்றுக்கு முன் ர/ற வந்தால் மேற்கோடே எழுதப்படும். உ - ம்.

அரிசி,  அராஜக, ஆறடி,

எரிச்சல், அரிது,  அருவி,

 அரளி,  அறிய, உறழ்வு.

மெய்யெழுத்து ஹ. (48) உயிரொலியை முதலாகக் கொண்டு, தனித்து நின்றால் கீழ்க்கோடு எழுதப்படும். உ - ம்.

................ஆஹா, ஓ்ஹோ.

(49) ஹ வுக்குப் பிறகு க, ம, ல (மேல்) வந்தால், வாகு கருதிக் கீழ்க் கோடு எழுதப்படும். உ - ம்.

........ஹாக்கி, ஹேமலதா,............ஹல்வா.

(50) படுக்கைக் கோடுகளுக்குப் பிறகு ஹ வந்தால் கீழ்க்கோடு எழுதப் படும். உ - ம்.

................மாஹி.

(51) வாகுடன் எழுதுவதே முக்கியமாகையால் பெரும்பாலும் மேற்கோடு 'ஹ' தான் எழுதப்படும். உ - ம்.

........பாஹி,..............ஹானி,...............ஹர்த்தால்.

ஆய்த எழுத்து. (52) ஃ என்று மூன்று புள்ளி வடிவமாக இருப்பது ஆய்த எழுத்து. இது சொல்லின் இடையில் மட்டுமே வரும். இதைக் காட்ட 'ஹ' வுக்குரிய குறி எழுதப்படும். உ - ம்.

..........அஃது, எஃகு.

(53) வடமொழி எழுத்தாகிய ஹ தமிழில் 'க' என்றும், உயிரெழுத்துக் களாகவும் மாறும். வடமொழி ஹ தமிழில் எப்படி மாறி வருகிறதோ அந்த ஒலிக்கு ஏற்ற குறியே போடப்படும். உ - ம்.

மோகி,............இமாலய,...............அரி.

மெய்யெழுத்து க்ஷ. (54) வடமொழி எழுத்தாகிய க்ஷ தமிழில் 'ட்ச' என்று மாறும். 'க்ஷ' வும், 'ட்ச' வும் பெரும்பாலும் ஒலியில் ஒத்து நிற்பதால் இரண்டுக்கும் என்ற குறிகள்தாம் எழுதப்படும்.

(55) ஹ வைப்போலவே உயிரொலியை முதலாகக் கொண்டு தனித்து நின்றாலும், க, ம, ல (மேல்) வுக்கு முன் வந்தாலும் கீழ்க்கோடு க்ஷ எழுதப்படும். உ - ம்.

..........ஆட்சி,..............க்ஷமி,...............லக்ஷ்மி.

(56) வாருடன் எழுதுவதே முக்கியமாகையால் பெரும்பாலும் மேற்கோடு 'க்ஷ' தான் எழுதப்படும். உ - ம்.

காட்சி, மீனாட்சி.

பயிற்சி - 7

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

ரோஜா, ரீதி, ரேணுகா,
கடலூர், போரடி, வேர்,
பூரிப்பு, ஏரி, ரேழி,
பிறழாது, உறவு, உருக்கு,
ஆகியோர், ராஜிநாமா, வகு,
இஃது, பட்சி, கச்சேரி,
அறிவிப்பு, மேலோர், பிறர்,
உறுதி, பஃறி, தட்சிணை.

தனிக்குறிச் சொற்கள்

ஓர், ஒரு, ஒவ்வோர்/வொரு,
இரு/இருக்க; அல்ல, எல்லா,
இல்லை; தனி/யாய், தேதி,
தீவிர/மாய்; அது, எது,
இது; அதை, எதை, இதை.

பயிற்சி - 8

சுருக்கெழுத்தில் எழுதுக

ஹரி, அது யார் ? அது மாலதியா ?

பானு, நீ இங்கே வா. அங்கே போகாதே. மணி நீ அங்கேயே இரு.

எந்தத் தேதி நமது ஊரில் உறியடி விழா ? 22-ந் தேதியா ?

லலிதா, நீ ஓர் அறிவாளி. ஆகையால் இப்பொழுது நீ இதைத் தீவிரமாய்ப் படி. அதை ஆட்சேபிக்க இல்லை.

ராஜு, நீ இப்பொழுதே எச்சரிக்கையாய் இரு.

இந்த ஊரில் உன் வீடு எங்கே உள்ளது ?

இந்த ஊரிலேயே என் வீடு இல்லை.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1 உயிரை முன்னதாகக் கொண்டு ஆரம்பத்தில் ர/ற வந்தால், கீழ்க் கோடு ர/ற எழுதப்படும்.

2. முடிவில் ர/ற வுக்குப் பின் உயிரொலி வந்தால் மேற்கோடு ர/ற வும், இல்லாதபோது கீழ்க்கோடு ர/ற வும் எழுதப்படும்.

3. ம வுக்கு முன் கீழ்க்கோடு ர/ற வாகான சேர்க்கையை உத்தேசித்து எழுதப்படும்.

4. நேர்கோட்டு மேற்கோடுகளுக்குப் பின் வாகான சேர்க்கையை உத்தேசித்து, மேற்கோடு ர/ற எழுதப்படும்.

5. ஆரம்பத்தில் உயிரொலி வந்தாலும் கூட வாகான சேர்க்கையை உத்தேசித்து, ச்ச, ச/ஸ, ஜ, ட, த, வ, ள, ய, ழ போன்றவற்றுக்கு முன் மேற்கோடு ர/ற எழுதப்படும்.

6. உயிரொலியை முதலாகக்கொண்டு தனித்து நின்றாலும், க, ம, ல (மேல்) ஆகியவற்றுக்கு முன் வந்தாலும், படுக்கைக் கோடுகளுக்குப் பிறகு வந்தாலும் கீழ்க்கோடு ஹ எழுதப்படும். மற்றச் சமயங்களில் மேற் கோடு ஹ தான் பெரும்பாலும் வாகு கருதி எழுதப்படும்.

7. ஆய்த எழுத்தைக் காட்ட ஹ எழுதப்படும்.

8. க்ஷ வும் ட்ச வும் பெரும்பாலும் ஓலியில் ஒத்து இருப்பதால் இரண்டுக்கும் க்ஷ தான் எழுதப்படும்.

9. உயிரொலியை முதலாகக் கொண்டு தனித்து நின்றாலும், க, ம, ல (மேல்) வுக்கு முன் வந்தாலும் கீழ்க்கோடு க்ஷ தான் எழுதப்படும். மற்றச் சமயங்களில் மேற்கோடோ கீழ்க்கோடோ, வாகு கருதி எழுதப்படும்.

[விதிகள் : 43 - 56]

அத்தியாயம் 5

கூட்டு உயிர்கள்

(57) இரண்டு உயிர்களின் கூட்டாகிய ஐ, ஔ இரண்டும் கூட்டுயிர் களாகும். இவற்றைப் போலவேயுள்ள ஆய், ஏய், ஓய், ஔய் போன்றவை களும் ஒலியைப் பொறுத்த வரையில் கூட்டுயிர்களோடு ஒப்பனவே ஆகும்.

கூட்டுயிர்களும் அவற்றின் இனமும். **(58)** கூட்டுயிர் வகைகளில் ஐ, ஔ, ஆய், ஏய், ஓய், ஔய் என்பவை கீழே காட்டியுள்ளபடி குறிக்கப்படும்.

------ v ...ஐ,---- ^ ....ஔ,--- ∠ --ஆய்|ஏய்,--- ⁊ ---ஓய்|ஔய்.

(59) ஐ, ஆய் என்பவற்றின் குறிகள் முதல் இடத்திலும், ஏய், ஓய். என்பவற்றின் குறிகள் இரண்டாம் இடத்திலும், ஔ, ஔய் என்பவற்றின் குறிகள் மூன்றும் இடத்திலும் எழுதப்படும். உ-ம்.


பை, தாய், தேய், நாய், நோய், கௌரி, தூய்மை, மௌலி.

கூட்டுயிர்களின் சேர்க்கை. **(60)** வாகாகச் சேர்த்து எழுதக் கூடிய இடங்களில் கூட்டுயிர்க் குறிகள் ஆரம்பத்திலோ, முடிவிலோ சேர்த்தும் எழுதப்படும். உ-ம்.


ஐந்து, ஐவேஜி, ஆய்ப்பாடி, ஐவர், போவாய், குழை.

(61) ம, ம்ப, ய, ர|ற (மேல்) இவற்றுக்கு முன் 'ஐ' யைச் சேர்க்கும்போது, வாகாக எழுதுவது கருதி, அதன் ஒரு பக்கக் கோடு சேர்த்து எழுதப்படும். உ-ம்.


ஐமுகி, ஐம்பால், ஐயர், ஐரோப்பா.

(62) 'வை' என்பதைக் காட்ட ட என்ற குறி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது முதல் இடத்தில் எழுதப்படும். பின்வரும் கோடுகளோடு வாகாகச் சேர்த்து எழுத வசதியுள்ள இடங்களில் ஆரம்பத்தில் மட்டும் எழுதப்படும். உ-ம்

வைதாய், வைப்பாய்.

(63) க ர/ற (மேல்) வுக்கு முன் 'வை' வந்தால் வாகாக எழுதுவதுக் கருதி 'வை' என்பதன் ஒரு பக்கக்கோடு மாத்திரம் சேர்த்து எழுதப்படும். உ-ம்.

… வை, … வைகை, … வைரி.

வசதியற்ற இடங்களில் எல்லாம் 'வை' என்பதற்கு மெய்க்குறி வ போட்டுக் கூட்டுயிர் ஐ தான் எழுதப்படும். உ-ம்.

கோவை, … ரவை.

(64) கூட்டுயிர்க்குறியோடு ஒரு சிறு கோடு சேர்த்தால் அது கூட்டுயிரைத் தொடர்ந்து உடனே வரும் வேறு ஓர் உயிரொலியைக் குறிக்கும். குறிப்பாக :

1. ஐ க்குப் பிறகு 'அ/ஆ, இ/ஈ, உ/ஊ' உயிர் வந்தால் ஐ யோடு ஒரு சிறு கீழ்க்கோடு சேர்க்கப்படும். உ-ம்.

… ஐயா, … வையாபுரி, … மலையாளி.

2. ஐ க்குப் பிறகு 'எ/ஏ' வந்தால் ஐ யோடு ஈற்று உயிர்க்குறி 'ஏ' சேர்க்கப்படும்.

… பிழையே, … கலையே.

3. ஐ க்குப் பிறகு 'ஒ/ஓ' வந்தால் ஐ யோடு ஒரு சிறு படுக்கைக் கோடு சேர்க்கப்படும். உ-ம்.

… ஐயோ, … கலையோ.

4. ஔ வோடு ஐ சேர்ந்தால் ஔ என்பதன் குறியோடு ஒரு சிறு மேற்கோடு சேர்க்கப்படும். உ-ம்.

ஔவை, … ஔவையார்.

5. உயிரெழுத்து 'இ' யோடு எந்த உயிர் சேர்ந்தாலும் அதனைக் காட்ட … என்ற குறி வாகுள்ள இடங்களில் உயிர்க்குறி 'இ' புள்ளி போடும் இடத்தில் எழுதப்படும். உ-ம்.

… அறியாமை, … குறியாக.

சுருக்கப்பட்ட 'ய'. (65) ஆரம்ப உயிரெழுத்தோடு சேர்ந்தோ, நடுவிலோ 'ய' வரும்பொழுது, வாகுள்ள இடங்களில் மெய்க்குறி 'ய' வுக்குப் பதிலாகச் சிறிய அரைவட்டம் மேலோ கீழோ எழுதப்படும். உ-ம்.

இயக்க, … பயல், … பயில், ஜெயில்.

பயிற்சி - 9

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க



தனிக்குறிச் சொற்கள்

ஏனென்றால், ஏற்கனவே,

என்றால், வை|வைத்த|வைத்து,

இருக்கிறது|கின்றன, என்பது,

ஆயினும், *(ஆ) வது|தாவது,

ஆனபோதிலும், *படி|பட|பட்ட,

வரை, *(த்)தது,

என்ற|று, *(க்கத்) தக்க|து.

* இவை தனித்து நிற்கும் வார்த்தைகள் அல்லாவிட்டாலும், வினைச் சொற்களுக்குப் பின் அடிக்கடி வருமாதலால் தனிக்குறிகளாகவே கொடுக்கப்பட்டுள்ளன.

(66) 'கூடாது' என்று வரும்போது — என்பது அதன் முன் வரும் வார்த்தையின் அடியில் தனித்து எழுதப்படும். உ-ம்.

 எடுக்கக் கூடாது,  கேட்கக் கூடாது.

(67) ' என்றால் ' என்பது தனித்து வந்தால் எழுதும் வரியின்மேல் என்றால் என்பதற்குரிய தனிக்குறி எழுதப்படும். ஆனால் ஒரு வார்த்தைக்குப் பின் வரும்போது வசதியுள்ள இடங்களில் அதற்கு முன் வரும் கோட்டின் முடிவில் ஒட்டினாற்போல இந்தப் புள்ளி வைக்கப்படும். உ-ம்.

என்ன என்றால், போகாது என்றால்.

(68) ஒரு வார்த்தைக்குப் பின் 'படி/பட/பட்ட, (க்கத்) தக்க/து' என்பன வந்தால்தான், முறையே ----\ .. ⁄---என்ற குறிகள் சேர்த்து எழுதப் படும். ஆரம்பத்தில் இவை எழுதப்படுவதில்லை. உ-ம்.

உள்ளபடி,  பாடுபட/பட்ட,

கேட்கப்பட்ட,  கேட்கத்தக்கது.

பயிற்சி - 10

சுருக்கெழுத்தில் எழுதுக

ஐயா, கோபு வீணை எங்கே இருக்கிறது ? அதை எடுத்து மாலை நாலு மணி வரை இங்கேயே இப்பொழுது வாசி. அதை ஒரு வினாடி கூடக் கீழே வைக்கக் கூடாது. காமாட்சி, நெய்வேலி என்ற ஊருக்கு நீ போகாதது, அங்கே பாடாதது ஒரு பிழையே. அது நியாயமே இல்லை. ஆகையால் நீ இங்கே இப்பொழுது தெளிவாய்ப் பாடு. ஊமை போல் முனகக் கூடாது. ஆயினும் ஒரு பூமாலை ஆசைப்படத் தக்கது அல்ல என்று நீ ஏற்கனவே அறிவாய். ஏனென்றால் பாடுவது என்பது ஒரு கலை. ஆகையினால் நீ கலைக்கே உயிர் வாழ்வாய். கலை அரசியாய் அப்பொழுதே உலகில் நீ மிளிர்வாய்.

குறிவிளக்கம்



பாடச் சுருக்கம்

1. ஐ, ஔ இரண்டும் கூட்டுயிர்களாகும். ஆய், ஏய், ஓய், ஊய் போன்றவைகளும் ஒலியைப் பொறுத்த வரையில் கூட்டுயிர்களோடு ஒப்பவே கருதப்படும்.

2. ஐ, ஆய் என்பவற்றின் குறிகள் முதல் இடத்திலும், ஏய், ஓய் என்பவற்றின் குறிகள் இரண்டாம் இடத்திலும், ஔ, ஊய் என்பவற்றின் குறிகள் மூன்றும் இடத்திலும் எழுதப்படும்.

3. வாகுள்ள இடங்களில் கூட்டுயிர்க் குறிகள் ஆரம்பத்திலோ, முடிவிலோ சேர்த்தும் எழுதப்படும்.

4. கூட்டுயிரைத் தொடர்ந்து உடனே வரும் வேறு ஓர் உயிரொலியைக் குறிக்க, கூட்டுயிர்க் குறியோடு ஒரு சிறு கோடு சேர்க்கப்படும்.

5. ஆரம்ப உயிரெழுத்தோடு சேர்ந்தோ நடுவிலோ ' ய ' வரும்போது சிறிய அரைவட்டத்தால் ' ய ' குறிக்கப்படும்.

[விதிகள் : 57 - 68]

அத்தியாயம் 6

வேற்றுமைகள்

வேற்றுமைகள். (69) பெயர்ச் சொற்களின் பின்னே நின்று அவற்றின் பொருளை வேறுபடுத்துபவை வேற்றுமை உருபுகள். வேற்றுமை எட்டு வகைப்படும். பெயர்ச் சொற்களோடு வேற்றுமை உருபுகள் சேர்ந்து வரும்போது இவை பெரும்பாலான இடங்களில் சாதாரணமாக ஒலி முறைப் படியே எழுதப்படும். ஆனால் எங்கெல்லாம் அவ்வாறு எழுத வாகில்லையோ, அங்கெல்லாம் வாகுடன் எழுதுவதற்காக இவற்றுக்குச் சிறப்புக் குறிகள் கொடுக்கப்படும். வேற்றுமை உருபுகளையும், அவற்றின் சிறப்புக் குறிகளையும் கீழே காண்க. சிறப்புக் குறிகள் பெயர்ச் சொற்களின் குறித்தொடரோடு சேர்த்தோ, தனித்தோ எழுதப்படும்.

அட்டவணை-3 - வேற்றுமை உருபுகள்

வேற்றுமை	உருபு	குறி	சொல்	குறித்தொடர்
1.			மணி	
2.	ஐ		மணியை	
3.	ஆல்		மணியால்	
	ஓடு, ஓடு		மணியோடு	
	உடன்		மணியுடன்	
4.	கு		மணிக்கு	
5.	இல்		மணியில்	
	இருந்து		மணியிலிருந்து	
	இன்		மணியின்	
	நின்று		மணியினின்று	
6.	உடைய		மணியுடைய	
	அது		மணியினது	
7.	இல்		மணியில்	
	இடத்தில்		மணியிடத்தில்	
	கண்		மணியின்கண்	
8.	ஏ (ஈற்று உயிர்க்குறி)		மணியே	





(70) நாலாம் வேற்றுமை உருபாகிய 'கு' என்பதற்குப் போடும் —— என்ற குறி, (க்)காக என்று வந்தால் வாகுள்ள இடங்களில் இரட்டித்து அழுத்தி எழுதப்படும். உ-ம்.

மணிக்காக.

(71) ஐந்தாம் வேற்றுமை உருபாகிய 'நின்று' என்பதற்குப் போடப் படும் குறியே 'இன்றி' என்று வந்தாலும் கடைசியில் 'இ' உயிர்க்குறி போட்டு எழுதப்படும். உ-ம்.

வீடின்றி.

(72) ஆறும் வேற்றுமை உருபாகிய 'உடைய' என்பதற்குப் போடப் படும் குறியே 'உடையது' என்று கடைசியில் வந்தாலும் எழுதப்படும். உ-ம்.

மணியுடையது.

(73) வேற்றுமை ஏற்ற வார்த்தைகளின் இறுதியில் 'ஏ, ஓ' வந்தால் உருபுக் குறிகளோடு, ஈற்று உயிர்க்குறி 'ஏ, ஓ' சேர்த்து எழுதப்படும். உ-ம்.

மணியையே, மணியாலோ, மணிக்கே,

மணியிடத்திலே, வீட்டிலோ, மணியிடத்திலோ.

(74) 'உடன்' என்பதற்கு ⌋ என்ற குறி போடப்படும். 'உடனே' என்னும்பொழுது கடைக்கொக்கிக்குள் 'ஏ' கொக்கியைப் போடுவது சிரமமாதலால் கொக்கியின் போக்கிலேயே ஈற்று 'ஏ' உயிர்க்குறி எழுதப் படும். உ-ம்.

மணியுடன், மணியுடனே, மணியுடனேயே.

(75) கடைசியில் 'இடையே' என்று வந்தால் ⌋ என்று எழுதப் படும். உ-ம்.

மணியிடையே.

பயிற்சி - 11

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

கதையால், கதைக்கு,

கதையினது, மணியிடத்திலிருந்து,

பாலுவினது, வீட்டில்,

வீட்டுக்கு, காலால்,

பாதையை, பானுவை,

ராமுவால், என்னிடத்திலிருந்து,

கடையிலிருந்து, கடைக்கு.

பயிற்சி - 12

சுருக்கெழுத்தில் எழுதுக

அந்தத் துணியைப் பார். உனக்கு அது தேவையா ?

எனக்கு அது இப்பொழுது தேவை இல்லை. ஆகையால் நீ அதை வேறு யாரிடமாவது கொடு.

வேணு, என்னிடத்திலிருந்து நீ ஏற்கெனவே ஒரு கதையைக் கேட்டாய் அல்லவா ? என்னிடத்தில் இது வரையில் ஒரு கதை கூட இல்லை.

இப்பொழுது ஓர் அழகான கதை இருக்கிறது. என்னுடைய இந்தக் கதையை இப்பொழுது நீ என்ன பண்ணுவாய் ?

உன்னுடைய கதையை என்னிடத்தில் கொடுத்து வை. நமது வார இதழில் போட ஒரு வாய்ப்பு இப்பொழுது என்னிடத்தில் உள்ளது.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. வேற்றுமை எட்டு வகைப்படும். அவற்றின் உருபுகளுக்குச் சிறப்புக் குறிகள் கொடுக்கப்படும்.

2. வேற்றுமை உருபுகளைச் சாதாரணமாக, ஒலி முறைப்படி எழுத வாகில்லாத இடங்களில் 'சிறப்புக் குறிகள்' பெயர்ச் சொற்களின் குறிகளோடு சேர்த்தோ, தனித்தோ எழுதப்படும்.

3. நாலாம் வேற்றுமை உருபாகிய 'கு' என்பதற்குரிய குறியே, '(க்)காக' என்பதற்கு இரட்டித்து அழுத்தி எழுதப்படும்.

4. வேற்றுமை ஏற்ற வார்த்தைகளின் இறுதியில், 'ஏ, ஓ' வந்தால் உருபுகளுக்குரிய சிறப்புக் குறிகளோடு ஈற்று உயிர்க்குறி, 'ஏ, ஓ' சேர்த்து எழுதப்படும்.

[விதிகள் : 69 - 75]

அத்தியாயம் 7

சுருக்கம்

சுருக்கம். (76) கையை எடுக்காமல் சுலபமாகவும், தெளிவாகவும், வாகாகவும் எழுதக்கூடியனவாய், அடிக்கடி சேர்ந்து வரும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வார்த்தைகளைக் கொண்ட குறித் தொடருக்குச் சுருக்கம் என்று பெயர். இதை எழுதப் பல முறைகள் உள்ளன.

(77) குறியைப் பார்த்தவுடனேயே வார்த்தைகள் தோன்றும்படி இன்றியமையாத குறிகளை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவை விலக்கி எழுதப்படும். உ-ம்.

---கட்சிப்பிரதிகட்சி, ---படிப்படியாக.

(78) ஆரம்ப உயிர்க்குறிகளை விலக்கியும் எழுதப்படும். உ-ம்.

அவ்வாறு, ----அடிக்கடி.

(79) தொகைச் சொற்களையும் தொடர்களையும் சேர்த்து எழுதினாலும் அவ்வச் சொல்லின் உயிர்க்குறிகள் தனித்தனியே போடப்படும். பின்னால் வரும் வார்த்தைக்கு ஆரம்ப உயிர்க்குறி இருந்தால் அதை விலக்கிச் சாதாரணப் புள்ளி உயிர்க்குறியே போடப்படும். உ-ம்.

 காதுவலி,  --குடியாட்சி,  ---குடிபடை,

மூக்குநுனி; ---இல்லையென, ----இல்லையெனில்.

(80) சுருக்கத்தில் உள்ள முதல் வார்த்தையைத் தனியாக எழுதினால் எந்த நிலையில் எழுதப்படுமோ, அந்த நிலையிலிருந்தே சுருக்கத் தொடர் ஆரம்பித்து எழுதப்படும். உ-ம்.

---அதுவரை, ---- அப்பொழுதாவது.

(81) தமிழில், "அது, எது, இது; அப்பொழுது, எப்பொழுது, இப்பொழுது" என்பன போன்ற வார்த்தைகள் வருவதைக் கவனிக்க. சுருக்கத்தில் 'அதுவரை' என்பது முதல் நிலையில் எழுதிக் காட்டப்பட்டிருந்தால், 'எதுவரை' என்பதை இரண்டாம் நிலையிலும், 'இதுவரை' என்பதை மூன்றும் நிலையிலும், 'அப்பொழுதாவது' என்பது முதல் நிலையில் எழுதிக் காட்டப்பட்டிருந்தால் 'எப்பொழுதாவது' என்பதை இரண்டாம் நிலையிலும், 'இப்பொழுதாவது' என்பதை மூன்றும் நிலையிலும் எழுதிப் பழகவேண்டும்.

(82) ஒரு வார்த்தைக்குப்பின் ‘என்ற/என்று’ என்னும் சொற்கள் வந்தால் அவற்றைக் காட்ட ஒரு சிறு மெல்லிய கோடு வாகுக்கேற்ப மேல்நோக்கியோ கீழ்நோக்கியோ அதற்கு முன் வரும் கோட்டோடு சேர்த்து எழுதப்படும். உ-ம்.

அல்லவென்று, இல்லையென்று, இருக்கின்றனவென்று.

ஆனால் ‘என்ற/என்று’ என்பவை பிற சொல்லோடு சேராமல் தனியே எழுதப்படும்போது சிறு கோடு போடப்படுவதில்லை. ‘என்ற/என்று’ என்பதற்கான ‘தனிக்குறி’ தான் எழுதப்படும்.

இனிமேல் ஒவ்வொரு பயிற்சிக்கும் முன்பு சில சுருக்கங்கள் கொடுக்கப் படும். தனிக்குறிச் சொற்களைப் போலவே இவற்றையும் பல பல முறைகள் எழுதிப் பழக்கம் செய்துகொள்ளவேண்டும்.

சுருக்கங்கள்

அதாவது,	அதுவரையில்,
அத்துடன்,	அத்தகைய,
அதெப்படி,	அதுவுமொரு,
அதல்ல,	அதில்லை;
அதைத்தவிர,	அதையொட்டி;
அப்போதைய,	அப்பொழுதுள்ள,
அப்பொழுதாவது,	அப்படிப்பட்ட,
அவ்வப்போது,	அப்போதைக்கப்போது;
அதை அதை	அந்தந்த,
படிப்படியாக,	நாளுக்கு நாள்,
தனித்தனியாய்;	கட்சிப்பிரதிகட்சி,
அடிக்கடி,	இடையிடையே,
இடைவிடாமல்;	ஆங்காங்கு,
அவ்வாறு,	அவையாவன;
ஏற்பட/படு/பாடு,	ஏற்பட்ட/டு,
ஏற்படுத்த/தி/து;	ஏறக்குறைய;



பயிற்சி - 13

சுருக்கெழுத்தில் எழுதுக

அப்போதைக்கப்போது ராமனிடத்திலிருந்து இதுவரையில் எதை நீ அடிக்கடி கேட்டாயோ அது உனக்கு அங்கிருந்து கிடைக்காது. அதை எண்ணி ஏமாறுதே. இப்பொழுதாவது இந்த உண்மையை நீ அறிவாய். பாலு, எந்த இடத்தில் அந்தக் கோயில் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது? விமலா, யாருடைய பேனு அங்கே வைக்கப்பட்டு இருக்கிறது? கணபதி அதைத்தவிர வேறு ஏதாவது வேலையை இடையிடையே நீ பார். ஏனென்றால் அந்தப் பணி உன்னுடையது அல்ல. கட்சிப்பிரதிகட்சியின்றி அவ்வப்போது படிப்படியாக உண்மையை நியாயப்படி அறிவதே நமது வேலையாக இருக்கிறது. இந்தகைய தனிப்பட்ட இடத்தில் நீ தீவிரமாய்த் தனியாய்ப் போவது பிழை. போகக் கூடாதென்ற என்னுடைய பேச்சு இப்பொழுதே கேட்கத்தக்கது.

குறி விளக்கம்



வினைச்சுருக்கம். (83) ' கொடு ' என்ற வினைச் சொல்லின் அடியாக, இருதிணை, ஐம்பால், மூவிடம், முக்காலம் ஆகியவற்றைக் காட்டும் சொற்கள் பிறக்கும். " கொடுத்தான், கொடுத்தாள், கொடுத்தார்,

கொடுத்தது, கொடுத்தன, கொடுத்தேன், கொடுத்தாய், கொடுப்பது, கொடுப்பாய், கொடுப்பன" என்பன போலப் பல சொற்கள் உண்டாகின்றன. இவற்றின் இறுதிகளை வகுத்துச் சில தொகுதிகளாகப் பிரித்து, சுருக்கெழுத்தில் எழுதினால், ஒரே மாதிரியாகவும், வாகாகவும் இருக்கும். அம்மாதிரி தொகுத்துக் கொடுக்கப்படும் வார்த்தைகள் 'வினைச்சுருக்கம்' எனப்படும். அவை தனித்தும், வினைச்சொற்களோடு சேர்த்தும் எப்படி எழுதப்படுகின்றன என்பதைக் கீழே வரும் பயிற்சியில் காண்க. இவைபோன்றவை பின்னே வரும் சில அத்தியாயங்களிலும் கொடுக்கப்படும். இவை வினைச்சொற்களோடு சேர்த்து எழுதப்படும்போது இடையிலுள்ள சந்தி எழுத்துக்கள் விடப்படும். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, சந்தி எழுத்துக்களையும் சேர்த்தே வரிவடிவத்தில் எழுதும்போது எழுத வேண்டும்.

பயிற்சி - 14

கீழ்க்கண்ட வினைச்சுருக்கங்களை எழுதிப் படிக்க

ததே,	கொடுத்ததே,
ததை,	கொடுத்ததை,
ததால்,	கொடுத்ததால்,
ததில்,	கொடுத்ததில்,
ததாக,	கொடுத்ததாக;
து,	கொடுத்து,
தே,	கொடுத்தே,
தாய்,	கொடுத்தாய்;
டது,	கேட்டது,
டன,	கேட்டன,
டவை,	கேட்டவை,
டாய்,	கேட்டாய்;
னது,	பாடினது,
னவை,	பாடினவை,

	னாய்,		பாடினாய்;
	வாய்,		பாடுவாய்;
	பது,		களிப்பது,
	பன,		களிப்பன,
	பவை,		களிப்பவை,
	பாய்,		களிப்பாய்;
	பட்டது,		கேட்கப்பட்டது.
	பட்டன,		கேட்கப்பட்டன,
	பட்டாய்,		கேட்கப்பட்டாய்,
	பட்டால்,		கேட்கப்பட்டால்,
	படியால்,		கேட்டபடியால்,
	படுமா,		கேட்கப்படுமா,
	படுமென,		கேட்கப்படுமென,
	படுமேயன்றி,		கேட்கப்படுமேயன்றி.
	படுவது,		கேட்கப்படுவது,
	பட்டீர்,		கேட்கப்பட்டீர்,
	பட்டார்,		கேட்கப்பட்டார்,
	பட்டவை,		கேட்கப்பட்டவை.

பயிற்சி - 15

வினைச்சுருக்கங்களைச் சேர்த்து எழுதிப் படிக்க

கொடு, குறி, எடு, நடி, கூறு, கேள், எண்ணு, பாடு, நினைக்க, அடி, ஓடு, பண்ணு, அறி, போ.

பாடச் சுருக்கம்

1. இரண்டு வார்த்தைகளுக்கும், இரண்டுக்கு மேற்பட்டவற்றுக்கும் சுருக்கமாகக் கொடுககப்படும் குறித்தொடர், 'சுருக்கம்' எனப்படும்.

2. வார்த்தைகளில் வரும் இன்றியமையாத சில குறிகளை மாத்திரம் வைத்துக்கொண்டு, எஞ்சியவற்றை விலக்கிச் சுருக்கம் அமைக்கப் படும்.

3. ஆரம்ப உயிர்க்குறியை விலக்கியும் சுருக்கம் அமைக்கப்படும்.

4. தொகைச்சொற்கள் ஒரு குறித்தொடராகவே சேர்த்து எழுதப்பட் டாலும், அவ்வச்சொல்லின் உயிர்க்குறிகள் தனித்தனியே போடப் படும்.

5. சுருக்கத்திலுள்ள முதல் வார்த்தை தனியாக எழுதப்பட்டால் எந்த நிலையில் எழுதப்படுமோ, அந்த நிலையிலிருந்தே சுருக்கத் தொடர் ஆரம்பித்து எழுதப்படும்.

6. 'என்ற/று' என்பதற்கு ஒரு சிறு மெல்லிய கோடு வாகுக்கேற்ப மேல்நோக்கியோ, கீழ்நோக்கியோ அதற்கு முன்வரும் கோட்டோடு சேர்த்து எழுதப்படும். பிற சொல்லோடு சேர்க்காமல் தனியே எழுதப்படும்போது 'என்ற/று' என்பதற்குச் சிறு கோடு போடப்படுவதில்லை.

7. வினைச்சொல்லின் அடியாக இருதிணை, ஐம்பால், மூவிடம், முக்காலம் காட்டப் பிறக்கும் சொற்களின் இறுதிகளுக்குக் கொடுக்கப்படும் குறிகள் 'வினைச்சுருக்கம்' எனப்படும்.

[விதிகள் : 76 - 83]

அத்தியாயம் 8

சிறிய சுழி

ஆரம்பத்திலும் நடுவிலும் சிறிய சுழி. (84) 'ச/ஸ' வுக்கு) என்று தனியான மெய்க்குறி இருந்தாலும் அது ○ என்ற சிறிய சுழியால் ஆரம்பத்திலும், நடுவிலும் குறிக்கப்படும்.

இடது வலது வாட்டம். (85) இந்த அத்தியாயத்திலும், இனிமேல் வரப் போகும் அத்தியாயங்களிலும், (கையின் போக்கு) இடது வாட்டமாக எழுதப்படுமென்றால் ⭘ ⭘ என்றும், வலது வாட்டமாக எழுதப்படுமென்றால் ⭘ என்றும் எழுதப்படும். 'ச/ஸ' சுழி தனித்திருக்கும்போது இடது வாட்டமாக எழுதப்படும்.

(86) ச/ஸ சுழி ஆரம்பத்திலோ, நடுவிலோ (1) வளைவு கோடுகளின் உட்புறமாகவும், (2) கோணங்களின் வெளிப்புறமாகவும், (3) கோணம் உண்டாக்காத நேர்கோடுகளுக்கு இடது வாட்டமாகவும் சேர்த்து எழுதப்படும். உ - ம்.



(87) ஆரம்பத்தில் 'உயிர்' வந்தாலும், ஆரம்ப உயிர்க்குறிகளோடு 'ச/ஸ' சுழி சேர்த்து எழுதப்படும். உ - ம்.



(88) கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கு (விதி - 6), 'ச/ஸ' சுழி கொக்கிக்குள் ஆரம்பத்தில் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

(89) 'ஹ' வுக்கு முன் 'ச/ஸ' சுழி வந்தால் 'ஹ' வின் சுழியே பெரியதாக எழுதப்படும். உ - ம்.



(90) 'ல' வுக்கு முன்னே, பின்னே வளைவு கோட்டுடன் சேர்க்கப் பட்டுள்ள சுழி வந்தால், சுழியின் வாட்டமாகவே 'ல' எழுதப்படும். உ-ம்.



ஆலோசனை, வாசல், மசாலை.

(91) 'ச/ஸ' சுழி எழுதப்படும் வார்த்தைக்கு முன் வேறொரு வார்த்தை வந்து சேரும்போது, 'ச/ஸ' சுழி அப்படியே வைத்துக் கொள்ளப்படும். உ-ம்.



சொல், பழிச்சொல்; சுவடு, அடிச்சுவடு.

பயிற்சி - 16

கீழ்க்கண்ட வார்த்தைகளை எழுதிப் படிக்க



சிப்பாய், சுகமாய், சிகிச்சை,
சார்பாக, கசப்பு, பிசகு,
சாலை, பசும்பால், சந்தா,
சலசலப்பு, சிற்சில, வசூலிக்க,
ரசனை, இசைந்து, அசல்,
செழிப்பு, ஈசனை, மசூதி,
அசரீரி, சுளுக்கு, சுமதி.

கடைசியில் சிறிய சுழி. (92) வார்த்தைகளின் இறுதியில் 'ம்' வந்தால் அதைக் காட்ட நேர்கோடானல் இடது வாட்டமாகவும், வளைவு கோடானல் வளைவின் உட்புறமாகவும் கடைசியில் ஒரு சிறிய சுழி சேர்க்கப்படும். உ-ம்.



பாகம், மௌனம், நிஜம்,
காரம், பாலம், மரம்.

(93) ஆனல் ஒரு வார்த்தையின் கடைசியில் உயிரொலி வந்தால், உயிர்க்குறியைப் போடக் கடைசியில் ஒரு கோடு இருக்க வேண்டியது அவசியம். ஆதலால் கடைசியில் 'ம்' என்பதோடு உயிரொலி சேர்ந்து

விட்டால் 'ம்' **சுழியை** உபயோகப்படுத்தாது, முழுவதுமே எழுதப்படும். உ - ம்.

போகும்,  போகுமா நிஜம்,

நிஜமாக, படம், படமே.

(94) வேற்றுமை ஏற்ற வார்த்தைகளின் இறுதியில் 'ம்' சேர்ந்தால் உருபுக் குறிகளோடு, 'ம்' சுழி சேர்க்கப்படும். உ - ம்.

எனக்கும், மனையையும்,

மணியிடத்திலும்; மணியோடும்.

(95) 'ம்' என்பதற்குப் பிறகு 'என்ற/று' வந்தால் அதைக்காட்டச் சிறு கோடு (விதி - 82) வெளியே இழுக்கப்படும். உ - ம்.

போகும் என்று, சொல்வோம் என்று.

(96) ஆரம்பத்தில் எழுதப்படும் சுழி ஆரம்பத்திலும், கடைசியில் எழுதப்படும் சுழி கடைசியிலுமே படிக்கப்படும்.

(97) நடுவில் 'ம்' வந்தாலும், முடிவில் 'ச/ஸ' வந்தாலும் அவற்றைக் குறிக்கச் சிறிய சுழியை உபயோகப்படுத்தக் கூடாது. முழுவதுமே எழுதப் படும். உ - ம்.

 கம்மி,  நிம்மதி, பாசி, நாசி.

(98) ஆனால் கடைசியில் 'ச/ஸ' வைத் தொடர்ந்து 'ம்' வந்தால், அது கீழ்க்கண்டபடி எழுதப்படும். உ - ம்.

ஆயாசம், மோசம்.

(99) தனிக்குறிச் சொற்கள், சுருக்கம் ஆகியவற்றின் கடைசியில் 'ம்' சேர்ந்தால் அவற்றோடு 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும். உ - ம்.

அப்பொழுதும், அதையும், இதுவும்,

அவ்வாறும், ஏற்பாடும்; எல்லாம்.

சுருக்கத்தில் 'சம்'. (100) 'ஆயாசம்' என்பதற்குப் போடப்படும், 'சம்' என்பது சுருக்கத்தில் 'அவசியம் (அல்லது) அம்சம்' என்பதைக்

காட்ட வாகுள்ள இடங்களில் அதற்கு முன் வரும் குறியுடன் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

போவது அவசியம், ஓர் அம்சம்.

பயிற்சி - 17

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

கோலம், உற்சவம், தயக்கம்,
விச்வாசம், நேசமான, சமுகம்,
அகலம், வீரம், பாசுரம்,
சகவாசம், மாமிசம், விசாலமான,
சமுதாயம், ஆயுதம், கோபம்,
சகாயம், அப்பியாசம், நாமும்,
காசி, அட்டூழியம், ஆர்வம்,
க்ஷேமலாபம், சிறைவாசம், ஆசனம்,
விலைவாசி, மேழிச்செல்வம், அரசாட்சி.

பயிற்சி - 18

கீழ்க்கண்ட வினைச்சுருக்கங்களை எழுதிப் படிக்க

தது,	கொடுத்தது,
ததையும்,	கொடுத்ததையும்,
ததாகும்,	கொடுத்ததாகும்;
தும்,	கொடுத்தும்,
தோம்,	கொடுத்தோம்,
தேயும்,	கொடுத்தேயும்;
டோம்,	கேட்டோம்;
றோம்,	சொன்றோம்;
வதும்,	சொல்வதும்,
வோம்,	சொல்வோம்;
பதும்,	களிப்பதும்,
போம்,	களிப்போம்,

பட்டதும். கேட்கப்பட்டதும்,

பட்டாலும், கேட்கப்பட்டாலும்,

படியாலும், கேட்டபடியாலும்,

படுவதும், கேட்கப்படுவதும்;

(ஆ)லொழிய, கேட்டாலொழிய.

தாலொழிய, அடித்தாலொழிய,

மேயொழிய, சொன்னேமேயொழிய,

(ம்)அளவில், கேட்குமளவில்,

களல்லாத, வீடுகளல்லாத;

விட்டால், போகாவிட்டால்,

விடில், போகாவிடில்.

பயிற்சி - 19

விணைச்சுருக்கங்களைச் சேர்த்து எழுதிப் படிக்க

கொடு, அறி, எடு, போ, சொல், நட, உழை, நினை, அளி, அடி.

தனிக்குறிச் சொற்கள்

செய்/செய்ய, செய்த/செய்து; அவ்வளவு;

மாதம்; சமய/மாய்; சம்பந்த/மாய்;

சாச்வத/மாய்; வருஷ/மாய், விஷய/மாய்.

சுருக்கங்கள்

அரசியல், அச்சமயத்தில், அந்தச்சமயத்தில்,

அதுசம்பந்தமாக, ராஜ்ய, சென்னை ராஜ்யம்,

அகஸ்மாத்தாய், வருஷாவருஷம். வருஷத்திற்கு வருஷம்,

அத்தியாவசியம், அவசியம், அவசரம்,

அவ்வளவுக்கவ்வளவு.

பயிற்சி - 20

சுருக்கத்தில் எழுதுக

சாமிநாதா, எந்தச் சமயத்தில் எதை எதைச் செய்வது என்று இல்லையா? இப்படிச் சாச்வதமான அரசியல் வேலையைச் செய்கையில் பேசாதே. எச்சமயத்தில் எதைச் செய்தாலும் அதை அவசியம் சரியாகச் செய்க. எப்பொழுதும் உனக்கு உசிதமெனப்பட்ட வேலையைச் செய். *நியாயமாய்ப் பேசு. ஊதியத்தை எண்ணி* எதையும் செய்யக் கூடாது. நியாயமாகவே போ. உலகுக்கு எப்பொழுதும் அமைதியே மிக அவசியம். இது சம்பந்தமாக நாம் எல்லோரும் கூடிப் பேசுவதே உசிதம். அவ்வப்போது *தீமை* ஏற்படுவது வழக்கம். அதை யோசிக்குமளவில் உன் மனம் சோர்வு அடையக் கூடாது. அமைதியைக் காக்கச் சென்னை ராஜ்யத்துக்குச் சாச்வதமான ஓர் ஆலோசனைச் சபை தேவை. ஆகையால் அதை அமைக்க எல்லா ஏற்பாட்டையும் செய்வோம். இதுவே மிக அத்தியாவசியம்.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. சிறிய சுழி, 'ச/ஸ' என்பதற்கு ஆரம்பத்திலும், நடுவிலும், 'ம' என்பதற்கு முடிவிலும் எழுதப்படும்.

2. 'ச/ஸ' சிறிய சுழி, வளைவு கோடுகளின் உட்புறமாகவும், கோணங்களின் வெளிப்புறமாகவும், கோணம் உண்டாக்காத நேர்கோடுகளுக்கு இடது வாட்டமாகவும் சேர்த்து எழுதப்படும்.

3. 'ம' சிறிய சுழி நேர்கோடானல் இடது வாட்டமாகவும், வளைவு கோடானல் வளைவின் உட்புறமாகவும் எழுதப்படும்.

4. ஒரு வார்த்தையின் கடைசியில் உயிரொலி வந்தால், உயிர்க்குறியைப் போட, கடைசியில் ஒரு கோடு இருக்க வேண்டியது அவசியம். ஆதலால் கடைசியில் 'ம' என்பதோடு உயிரொலி சேர்ந்துவிட்டால் 'ம' சுழியை உபயோகப்படுத்தாது முழுவதுமே எழுதப்படும்.

5. கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கு 'ச/ஸ' சுழி கொக்கிக்குள் எழுதப்படும்.

6. 'ஹ' வுக்கு முன் 'ச/ஸ' சுழி வந்தால் 'ஹ' வின் சுழியே பெரியதாக எழுதப்படும்.

7. 'ல' வுக்கு முன்னே, பின்னே வளைவு கோட்டுடன் சேர்க்கப்பட்டுள்ள சுழி வந்தால் சுழியின் வாட்டமாகவே 'ல' எழுதப்படும்.

8. ஆரம்பத்தில் வரும் சுழி ஆரம்பத்திலும், கடைசியில் வரும் சுழி கடைசியிலுமே படிக்கப்படும்.

9. நடுவில் 'ம' வந்தாலும், கடைசியில் 'ச/ஸ' வந்தாலும் சிறிய சுழியைப் போடாது முழுதும் எழுதப்படும்.

10. தனிக்குறிச் சொற்கள், சுருக்கங்கள், வேற்றுமை ஏற்ற வார்த்தைகள் ஆகியவற்றின் முடிவில், 'ம' வந்தால், 'ம' சுழி அவற்றோடு சேர்த்து எழுதப்படும்.

[விதிகள் : 84 - 100]

அத்தியாயம் 9

பெரிய சுழி

ஆரம்பத்தில் பெரிய சுழி. (*101*) 'ஸ்வ/சுவ' என்பதைக் குறிக்க ஆரம்பத்தில் பெரிய சுழி (1) நேர்கோடுகளுக்கு இடது வாட்டமாகவும் (விதி - 85), (2) வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறமாகவும் சேர்த்து எழுதப்படும். ஆரம்பத்தில் மட்டுமே 'ஸ்வ/சுவ' சுழி எழுதப்படும். உ - ம்.

 சரம்,  ஸ்வரம்; சாமி, ஸ்/சுவாமி.

(*102*) 'ஸ்வ' என்பதைத் தொடர்ந்து சுழி அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகள் (விதி - 6) வந்தால், 'ஸ்வ' சுழியைப் போடாது முழுவதும் எழுதப்படும். உ - ம்.

ஸ்வாஹா,  ஸ்வயம்.

(*103*) 'ஸ்வ' என்பதற்கு முன் 'உயிர்' வந்தால் பெரிய சுழியைப் போடாது முழுவதும் எழுதப்படும். உ - ம்.

அசுவினி, ஈசுவரி.

நடுவில் பெரிய சுழி. (*104*) நடுவில் பெரிய சுழியை எழுதினால், அது அந்தச் சுழியைத் தொடர்ந்து வருகிற வல்லினம் 'க' வானால், 'க' வின் இன எழுத்தாகிய 'ங்' என்பதைக் குறிக்கும். இப்படியே 'ச' வானால் 'ஞ்' என்பதையும், 'ட' வானால் 'ண்' என்பதையும், 'த' வானால் 'ந்' என்பதையும், 'ப' வானால் 'ம்' என்பதையும், 'ற' வானால் 'ன்' என்பதையும் குறிக்கும். ஆக, சுருக்கமாகப் பார்த்தால் நடுவில் போடுகிற பெரிய சுழி 'ங், ஞ், ண், ந், ம், ன்' ஆகிய ஆறு மெல்லின மெய்யெழுத்துக்களில் எந்த ஒன்றை வேண்டுமானாலும் குறிக்கலாம். இந்த ஆறு மெல்லின எழுத்துக்களும் முறையே க, ச, ட, த, ப, ற ஆகியவற்றின் இன எழுத்துக்களாகையால் நடுவில் போடப்படுகிற பெரிய சுழி அந்தச் சுழியை அடுத்து உடனே எழுதுகிற வல்லின மெய்க்குறிக்கு ஏற்ற மெல்லினமாகப் படிக்கப்படும்.

(*105*) நடுவில் பெரிய சுழி, வளைவு கோடுகளின் உட்புறமாகவும், கோணங்களின் வெளிப்புறமாகவும், கோணம் உண்டாக்காத இரண்டு நேர் கோடுகளுக்கு இடையே இடது வாட்டமாகவும் போடப்படும். உ - ம்.

 நங்கை,  நஞ்சு,  நீண்டு,
நந்தி,  நம்பி,  பங்கு,
 புஞ்சை,  பாண்டு,  பந்து,
 ரம்பம்,  கங்கை,  காஞ்சி.

(106) 'ற' வுக்கு முன் வரும் 'ன்' என்பதையும் ---- மூன்று, ---- கன்று என்பன போல நடுவில் பெரிய சுழி போட்டு எழுதலாம்; என்றாலும், 'ன்' என்பது வேறு முறையால் பின்னர் எழுதப்படுவதால் நடுவில் 'ன்' என்பதற்குப் பெரிய சுழி போடப்படுவதில்லை.

(107) 'ச/ஸ' வுக்குப் பிறகு மெல்லினம் வந்தாலும், 'ம, ம்ப' வுக்குப் பிறகு 'ங்' தவிர இதர மெல்லின எழுத்துக்கள் வந்தாலும் வாகாக எழுதுவதைக் கருதிப் பெரிய சுழியை நடுவில் போடாது முழுவதுமே எழுதப்படும். உ - ம்.

---------- சம்பந்தி, --------- சஞ்சலம், -------- சென்று,

-------- சந்தி, --------- முந்தி, --------- மஞ்சரி,

---------- சண்பகம், -------- மாண்பு, -------- மண்டலம்.

முடிவில் பெரிய சுழி. **(108)** வார்த்தைகளின் முடிவில் தா/ஆனது என்று வந்தால் அதைக் காட்டக் கடைசியில் எழுதப்படும் 'ம்' சிறிய சுழியைப் போலவே பெரிய சுழி எழுதப்படும். உ - ம்.

-------- வீடானது, ---------- கேட்பதானது,

---------- சொத்தானது, ---------- செய்வதானது.

(109) 'ஆனது' க்குப் பிறகு 'ம்' வந்தால் 'ம்' சுழி கீழ்க்கண்டபடி எழுதப்படும். உ - ம்.

---------- நியாயமானதும், -------- அத்தியாவசியமானதும்.

(110) 'ஆனது' க்குப் பிறகு 'என்ற/று' வந்தால் சிறிய கோடு (விதி - 82) வெளியே இழுக்கப்படும். உ - ம்.

---------- நியாயமானதென்று, ------ அத்தியாவசியமானதென்று.

(111) 'ஆனது' என்பதோடு கூட்டுயிராகிய, 'ஐ, ஆய்' சேர்ந்தால் கடைசியில் போடப்படும் பெரிய சுழிக்குள்ளேயே கூட்டுயிர்க்குறி போடப்படும். உ - ம்.

---------- நியாயமானதை, ---------- நியாயமானதாய்.

பயிற்சி - 21

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

ஸ்வாகதம், ஸ்வர்க்கபூமி, ஸ்வரூபம்,
ஸ்வாமிமலை, ஸ்வர்ணபூமி, ஸ்வதேசம்,
சுவாமிக்கண்ணு, வாங்கு, வாண்டு,
வாய்ந்த, சர்வேச்வரி, மறைந்த,
இலங்கை, காந்திஜி, மங்கு,
சம்பங்கி, பஞ்சம், கூண்டு,
கம்பு, கங்கணம், குங்கிலியம்,
விதியானது, எழுத்தானது, வேலையானது,
விந்தை, தந்தை, ஊர்ந்து.

(112) 'ம்ப' என்பதற்கு ⌒ என்று போடப்படுவதை மெய்க் குறிகள் அட்டவணையில் காண்க. இந்த 'ம்ப' மெய்க்குறி:

1. உயிரை முன்னதாகக் கொண்டு வந்தால் எழுதப்படும். உ-ம்.
அம்பரம், அம்புலி, உம்பளம்.

2. சுழிகளை முன்னதாகக் கொண்டு வந்தாலும் எழுதப்படும். உ-ம்.
செம்பு, சம்பவம்.

3. கீழ்க்கோடுகளுக்குப் பிறகு வந்தாலும், வாகான சேர்க்கையை உத்தேசித்து எழுதப்படும். உ-ம்.
டம்பம், பம்பரம், குடும்பம்,
ஹம்பி, இரும்பு, ஜம்புநாதா.

(113) மற்ற இடங்களில் வாகாக எழுதுவதை உத்தேசித்து 'ம்ப' என்பதற்கு நடுவில் பெரிய சுழி போட்டு, 'ப' தான் எழுதப்படும். உ-ம்.

கிளம்பி, குழம்பு, ஸ்வயம்பு,
ஆரம்பி, காயாம்பூ, கம்பு.

(114) 'ம்' சுழியைக் கொண்டு முடிகிற வார்த்தைகளோடு 'ஆக, ஆன' சேர்ந்தால் மெய்க்குறிகள், 'க, ன' என்பவை கையை எடுக்காமலேயே சேர்க்கப்படுவது வாகாக இருக்கும். ஆனால் அவற்றை வாகாகச் சேர்க்க வசதியற்ற இடங்களில் (நடுவில் சிறிய சுழி 'ச/ஸ' வைக் குறிக்குமாதலால்) கடைசியில் போடப்படும் 'ம்' சிறிய சுழியே பெரியதாக எழுதப்படும். உ - ம்.

---------- அத்தியாவசியமான, --------- அவசரமாக,
---------- வழக்கமாக, ---------- வழக்கமான.

பயிற்சி - 22

கீழ்க்கண்ட வார்த்தைகளை எழுதிப் படிக்க

---- தாழ்ந்த, ---- பண்டிகை, ---- பாஞ்சாலி,
---- பங்காளி, ---- சிப்பந்தி, ---- பூங்கொடி,
---- சுருங்கி, ---- துணிந்து, ---- அம்பலம்,
---- அம்பிகை, ---- சந்தை, ---- சொந்தமாக,
---- முந்தாணி, ---- நோக்கமானது, ---- அறிவானது,
---- நினைத்ததானது, ---- ஏற்பாடானது, ---- ஜயந்தி,
---- அமோகமாக, ---- ஆடம்பரம், ---- அத்தியாவசியமானவை.

தனிக்குறிச் சொற்கள்

------ சுவாதீன/மாய், ---- ---- சுயேச்சை/யாய்.

சுருக்கங்கள்

------ அரசாங்க, ------ ---- ஆதியோடந்தமாக,
------ அதைப்போன்ற, ------ மாட்சிமைதங்கிய.

வினைச் சுருக்கங்கள்

---- --வேண்டாம், ---- ---- வேண்டாமென,
--- --வேண்டாமென்று, -- ---- வேண்டாமெனில்,
--- --வேண்டாமென்றால்.

பயிற்சி - 23

சுருக்கெழுத்தில் எழுதுக

அஹிம்சா முறையே மாட்சிமை தங்கிய நமது காந்தியார் கண்ட உண்மை. அதைப் போன்ற நியாயமான வழி உலகில் வேறு எதுவும் இல்லை. இப்படிப்பட்ட புனித முறையானது அப்பொழுதிருந்த அந்த அன்னிய அரசாங்கத்துக்கு ஒரு நவீன அணுகுண்டு போலக் காணப் பட்டது. கடைசியில் இத்தகைய நூதனமான பாதையை அவ்வப்போது உசிதமாய்க் கையாண்ட நமது தனிப்பட்டோர் இயக்கமே ஐயம் அளித்தது. சுயேச்சை கிடைத்து இருக்கும் இப்படிப்பட்ட சமயத்தில் இப்பொழுது நாம் கட்சிப்பிரதிகட்சி பேசுவதானது நமது உரிமையை நாசம் செய்வது போலாகும். பழைய அரசாங்கத்துடைய மஹிமையைய ஆதியோடந்தமாகப் பேசாதே. நமது தேசம் க்ஷேமம் அடையச் சுயேச்சையாய், சுவாதீனம் இன்றிப் பேசுவது கூடாது. எதைச் செய்வது இப்பொழுது அவசியமோ அதையே அவசரமாய்ச் செய்வது அத்தியாவசியம். அப்பொழுதே உன்னுடைய நாடு, உன்னுடைய தேசம் தனது பழைய செல்வாக்கைச் சடுதியில் அடையும்.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. சிறிய சுழியைப் போலவே எழுதப்படும் பெரிய சுழி, ஆரம்பத்தில் 'ஸ்வ/சுவ' எனபதையும், நடுவில் 'ங், ஞ், ண், ந், ம்' என்ற மெல்லின எழுத்துக்களையும், முடிவில் 'ஆனது' என்பதையும் குறிக்கும்.

2. 'ஸ்வ/சுவ' வுக்குப் பிறகு கொக்கியுள்ள மெய்க்குறிகள் வந்தாலோ, முன்பு 'உயிர்' வந்தாலோ பெரிய சுழி எழுதப்படாது, முழுவதுந் தான் எழுதப்படும்.

3. 'ச/ஸ' வுக்குப் பிறகு மெல்லினம் வந்தாலும், 'ம, ம்ப' வுக்குப் பிறகு 'ங்' தவிரப் பிற மெல்லின எழுத்துக்கள் வந்தாலும் பெரிய சுழி நடுவில் போடப்படாது; முழுவதுந்தான் எழுதப்படும்.

4. 'ம்ப' வுக்கு முன்பு உயிர் வந்தாலும், சுழிகள் வந்தாலும், கீழ்க் கோடுகளுக்குப் பிறகு வந்தாலும் 'ம்ப' மெய்க்குறி எழுதப்படும்.

[விதிகள் : 101 - 114]

அத்தியாயம் 10

நீண்ட சுழி

நீண்ட சுழி 'ஸ்த'. *(115)* 'ச/ஸ' சுழியைப் போல (விதி 86) வார்த்தைகளின் ஆரம்பத்தில் வருகின்ற 'ஸ்த' என்பதைக் காட்ட, அது எந்த மெய்க்குறியோடு போய்ச் சேருகிறதோ அதன் பாதியிலிருந்து ஒரு நீண்ட சுழி சேர்த்து எழுதப்படும். உ - ம்.

---- -- ஸ்தூபி, -------- ஸ்தானம், ---------- ஸ்தம்பம்.

(116) 'ஸ்த'வைத் தொடர்ந்து சுழி அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகள் (விதி 6) வந்தால் 'ஸ்த' நீண்ட சுழியைப் போடாமல் முழுவதும் எழுதப்படும். உ - ம்.

-------- ஸ்தாயி, -------- ஸ்தாணு.

(117) நடுவில் எழுத வாகாக இருந்தால் நீண்ட சுழி 'ஸ்த' எழுதப்படும். உ - ம்.

---- புஸ்தகம், -------- கஸ்தூரி, --  --விஸ்தரிப்பு.

(118) ஒரு வார்த்தையின் கடைசியில் உயிரொலி வந்தால், உயிர்க்குறியைப் போடக் கடைசியில் ஒரு கோடு இருக்க வேண்டியது அவசியம் (விதி 93). ஆதலால் கடைசியில் 'ஸ்த'வுடன் உயிரொலி சேர்ந்துவிட்டால் நீண்ட சுழியை உபயோகப்படுத்தாமல், முழுவதுமே எழுதப்படும். உ - ம்.

-----  -- கிஸ்தி, -------- ரஸ்தா, ---- ---- ஜாஸ்தி.

நீண்ட சுழி 'ஸ்தர்'. **(119)** 'ஸ்தர்' என்பதைக் காட்ட அது எந்த மெய்க்குறியோடு போய்ச் சேருகிறதோ அதன் $\frac{2}{3}$ பாகத்திலிருந்து ஒரு நீண்ட சுழி சேர்த்து எழுதப்படும். ஆனால் ஆரம்பத்தில் 'ஸ்தர்' நீண்ட சுழி ஒருபோதும் எழுதபபடுவதில்லை. நடுவிலும், முடிவில் உயிரொலி இன்றி வந்தாலும் 'ஸ்தர்' நீண்ட சுழி நேர்கோடுகளுக்கு இடது வாட்டமாகவும், வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறமாகவும் எழுதப்படும். உ - ம்.

----  -- ரிஜிஸ்தர், மோஸ்தர். -------  வஸ்திரகாயம்.

(120) ஆரம்பத்தில் எழுதப்படும் நீண்ட சுழி ஆரம்பத்திலும், கடைசியில் எழுதப்படும் நீண்ட சுழி கடைசியிலுமே படிக்கப்படும்.

(121) கடைசியில் எழுதப்படும் நீண்ட சுழிக்குப் பின் 'ம்' சுழி கீழ்க்கண்டபடி சேர்த்து எழுதப்படும். உ - ம்.

--------- வஸ்திரம், ---------- ஹஸ்தம்.

(122) கடைசியில் நீண்ட சுழி போட்ட வார்த்தைகளுக்குப் பின் பன்மை விகுதியாகிய 'கள்' வந்தால் நீண்ட சுழிக்கு வெளியே ஒட்டினாற்போல ஒரு சிறு கோடு எழுதப்படும். உ - ம்.

--------- வஸ்திரங்கள், ---------- வஸ்திரங்களும்.

பயிற்சி - 24

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

------- ஸ்திரம், ------- ஸ்திரீ, ---------- ஸ்தாபிக்க,

------- ஸ்தாபிதம், ---------- ஸ்தானீகம், ------- ஸ்தலம்,

--------- ஸ்தூல சரீரம், ------ ஸ்தாவரம், ------ விஸ்தாரம்,

------- ஸ்தபதி, -------- அவஸ்தை, -------- சிவஸ்தலம்,

-------- யாதாஸ்து, -------- ஸ்துதி, ------ ஸ்தோத்திரம்,

-------- விஸ்தீர்ணம், ------ விஸ்தாரமாக, ------- ஸ்தம்பித்து.

தனிக்குறிச் சொற்கள்

--------- வாஸ்தவ/மாய், -------- அந்தஸ்து, -------- கம்யூனிஸ்டு.

பயிற்சி - 25

சுருக்கெழுத்தில் எழுதுக

குமாஸ்தாவாக வேலை செய்வது வாஸ்தவமாய்ச் சிரமம. சம்பாத்தியம் இன்றி மனையில் இருக்கக் கூடாது என்றே பலர் தமது அந்தஸ்தை எண்ணி இருக்காது உலகில ஊழியம் செய்வது உண்மை. குமாஸ்தா வுக்குக் குஸ்தி பயில்வானைப் போல உடம்பு இருக்காது. நோஞ்சலாக

இருப்பதே வழக்கம், இப்பொழுது ஒரு ஸ்திரீ குமாஸ்தாவாக அரசாங்கப் பணி செய்வதில் ஆச்சரியம் என்ன? நாம் எல்லோரும் உடம்பு ஸ்தூல சரீரம் ஆகாது இருக்க ஏதாவது வேலை எப்பொழுதும் செய்வதே உசிதம். உனக்கு வேலை இல்லாவிட்டால் சும்மா பேசாமல் இராதே. நமது ஊரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் உடல் பயிற்சிப் பள்ளிக்குப் போய் ஏதாவது தேகாப்பியாசம் செய். குமாஸ்தாவிலிருந்து குபேரர் வரையில் இதைச் செய்வது மிக அவசியம். உழைப்பு உடம்புக்குப் பலம் கொடுக்கும். உழைப்பைப் போலவே விளையாட்டும், வேடிக்கையும் அவசியம். உழைப்பும், ஊக்கமும் நிறைந்த ஊர் எல்லா வகையிலும் செழிக்கும். உரிமைக்கு உண்மையான பிறப்பிடம் கடமை; நாம் எல்லோரும் நமது கடமையைச் செய்தால் உரிமையை நாடிச் செல்லத் தேவை எழாது.

குறி விளக்கம்



சுருக்கங்கள்

செய்கையில்,

செய்யப்படுகையில்,

செய்யப்பட்டிருக்கையில்,

 அதைச் செய்கையில்,

எதையாகிலும்,

எதைச் செய்தாகிலும்,

அதைப்போன்றதொரு,
அதெல்லாம்,
அதன்மூலம்,
அவ்வாறு செய்கையில்,
 அவ்வாறு செய்யப்படுகையில் ;
இருக்கும்பொழுது,
வைத்திருக்கும்பொழுது,
செய்திருக்கும்பொழுது,
வைக்கும்பொழுது ;
அங்குமிங்கும்,
இங்குமங்கும் ;
முக்கியஸ்தர்,
முக்கியம்,
மிக முக்கியம் ;
மாகாணம்,
தொழிலாளர்,
தொழிலாளி,
 தொழிற்சாலை,
கைத்தொழிற்சாலை,
தொழிற்சங்கம் ;
சச்சரவு,
சண்டை சச்சரவு.

பயிற்சி - 26

சுருக்கெழுத்தில் எழுதுக

அந்த வேலையைச் செய். அது மிக முக்கியம். அதைப்போன்றதொரு வேலை உனக்கு எப்பொழுதும் கிடைக்காது. நாளுக்குநாள் அதைச் செய்கையில் உனக்கு ஐயம் படிப்படியாகக் கிடைக்கும். அவ்வாறு செய்யப்படுகையில் எதையாகிலும் நீ தனிப்பட்ட முறையில் செய்யாதே. அவ்வாறு செய்கையில் நீ எதையாகிலும் இடையிடையே பேசக் கூடாது. இங்கே வேலை வைத்திருக்கும்பொழுது பாரதிக்கு அங்கு என்ன இப்பொழுது ஜோலி? பாரதி வேலை செய்வதில்லை என்று அப்பொழுது நீ சொன்னது முழுவதும் இப்பொழுது வாஸ்தவமாய் இருக்கிறது. இந்த வருஷம் மே மாதம் 21-ந் தேதி காலையிலிருந்து தொழிற்சாலைக்கு வேறு போவதில்லை. வேலைக்குப் போகாது ஊருக்குப் போக என்ன பிழை இங்கே செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்.

அப்படிப்பட்ட அவசியம் என்னவென்று எனக்குப் புலப்படவில்லை. ஆகையினால் தினப்படி கூலி எப்படிக் கிடைக்கக் கூடுமென்று யோசித்துப் பார். எதைச் செய்தாகிலும் சரியான வழிக்கு நாம் பாரதியை அழைத்துச் செல்வது அவசியம். நம்மிடையே சண்டை சச்சரவு எப்பொழுதும் இருக்கக் கூடாது. ஆகவே எப்பொழுதும் நம்மிடையே சமரசம் இருப்பது அவசியம்.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. சிறிய நீண்ட சுழி 'ஸ்த' வையும், பெரிய நீண்ட சுழி 'ஸ்தர்' என்பதையும் காட்டும்.

2. 'ஸ்த' நீண்ட சுழி ஆரம்பத்திலும், நடுவிலும் அதிகம் எழுதப் படும். முடிவில் உயிரொலி இன்றி வரும் வார்த்தைகளுக்கு மட்டுமே எழுதப்படும்.

3. 'ஸ்த' வைத் தொடர்ந்து கொக்கியுள்ள மெய்க்குறிகள் வந்தால் நீண்ட சுழி எழுதப்படுவதில்லை; முழுவதும் எழுதப்படும்.

4. 'ஸ்தர்' நீண்ட சுழி நடுவிலும், முடிவிலும் எழுதப்படுகின்றதே தவிர, ஆரம்பத்தில் எழுதப்படுவதில்லை.

5. கடைசியில் நீண்ட சுழி போட்ட வார்த்தைகளுக்குப் பின் பன்மை விகுதியாகிய 'கள்' வந்தால் நீண்ட சுழிக்கு வெளியே ஒட்டினாற் போல ஒரு சிறு கோடு பன்மை விகுதியைக் காட்ட எழுதப்படும்.

[விதிகள் : 115 - 122]

அத்தியாயம் 11

ர், ல் - கொக்கிகள்

(123) உயிர்மெய்களோடு சேர்ந்து வருகின்ற 'ர்' அல்லது 'ல்' என்பதைக் குறிக்க, அவ்வம் மெய்க்குறிகளோடு ஒரு சிறு கொக்கி சேர்க்கப்படும்.

நேர்கோடுகளுக்கு 'ர்' கொக்கி. **(124)** 'ர்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் வலது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

ப, பர், டர், ஜர், கர்.

நேர்கோடுகளுக்கு 'ல்' கொக்கி, **(125)** 'ல்' என்பதற்குச் சிறிய கொக்கி. நேர்கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் இடது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

ப, பல், டல், ஜல், கல்.

வளைவு கோடுகளுக்கு 'ர்' கொக்கி. **(126)** 'ர்' என்பதற்குச் சிறிய கொக்கி, வளைவு கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

வ, வர், தர், மர், நர்.

வளைவு கோடுகளுக்கு 'ல்' கொக்கி. **(127)** 'ல்' என்பதற்குப் பெரிய கொக்கி, வளைவு கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும். உ - ம்.



வ, வல், தல், மல், நல்.

(128) மெய்க்குறிகள் ர/ற, ச்ச, ங, ல, ச/ய என்பவற்றுக்கும், சுழி அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கும் ர், ல் கொக்கிகள் போடப்படுவதில்லை.

(129) கொக்கியுள்ள இவை எல்லாம் முறையே பர், பல், டர், டல், தர், தல் என்றே படிக்கப்படும். சாதாரண மெய்க்குறிகளுக்குப் போடுவது போலவே இவற்றுக்கும் உயிர்க்குறிகள் போட்டு வாசிக்கப்படும்.

(130) 'ஆற்றல், குற்றம்' என்பன போன்ற வார்த்தைகளில் வரும் 'ற்ற' என்பது 'ட்ற' என்பதன் ஒலியையே ஒத்து நிற்பதால் 'ற்ற' என்பதற்கு 'ட'வுக்கு 'ர்' கொக்கி போடப்படும். இது 'டர்' என்பதையும் 'ற்ற' என்பதையும் குறிக்கும். உ-ம்.

வேடர், வெற்றி, மூடர், முற்றி.

பன்மை விகுதியாகிய 'கள்'. *(131)* பன்மை விகுதியாகிய 'கள்' என்பதைக் காட்ட, 'க'வுக்கு 'ல்' கொக்கி போடப்படும். 'க'வுக்கு 'ல்' கொக்கி போட்டால் அது 'கல்' என்பதையும், 'கள்' என்பதையும் குறிக்கும். பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு முன் மெல்லினம் 'ங்' வராத வார்த்தைகள் (தனிக்குறிச் சொற்கள். சுருக்கம் உட்பட) எல்லாவற்றுக்கும் ⸺ என்பதே பன்மை விகுதியைக் காட்ட எழுதப்படும். உ-ம்.

 மாடுகள், வண்டுகள்,

கொடுமைகள்,  தொழிலாளர்கள்.

(132) பன்மை விகுதியாகிய 'கள்'ளுக்குப் பிறகு ஈற்று உயிர்க்குறி 'ஏ, ஓ' சேர்க்கப்படும். உ-ம்.

மாடுகளே, மாடுகளோ.

பயிற்சி - 27

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

கர்வம், கல்வி, ஆற்றல்,

 நகல்,  ஆக்கிரமி, நிர்மாணம்,

 பகல்,  பார்த்தா,  தோற்றம்,

 கூடினார்,  முற்றிலும்,  கல்தா,

பிரயோகம், செங்கல், அக்கிரஹாரம்,

 குடல், ஆஸ்திகர்,  பகிர்ந்து.



கற்பு, வேற்றுமை, நூற்ருண்டு, பலர், கவிஞர், கலைஞர், கடல், மர்மம், ஜெர்மனி, புருஷர், கற்பனை, கற்பகம்.

மாற்றுருவங்கள் வர், வல், தர், தல். (133) ர/ற, ச/ஸ என்பவற்றுக்கு 'ர், ல்' கொக்கி போடப்படுவதில்லை (விதி 128). என்றாலும் வர், வல், தர், தல் என்பவற்றுக்கு மாற்று உருவங்கள் கொடுப்பதற்காக ர/ற (கீழ்), ச/ஸ வுக்குக் கொக்கியிடப்படுவதைக் கீழே பார்க்க.



வர், தர், வல், தல்.

(ஜோடிகளின் முதல் குறியெல்லாம் இடது வாட்டம்; இரண்டாவது வலது வாட்டம்.)

(134) ஆரம்ப உயிர்க்குறிகள், படுக்கைக் கோடுகள், மேற்கோடுகள் ஆகியவற்றுக்குப் பின், 'வர், தர், வல், தல்' வந்தால் அவற்றின் வலது வாட்டம் எழுதப்படும். உ-ம்.



ஊதல், ஏவல், கதர், காதல், மாதர், பரவல், அலுவல், மறவர்.

(135) மற்ற சமயங்களில் வலது வாட்டமோ, இடது வாட்டமோ எது வாகாகச் சேர்த்து எழுத வருகின்றதோ அந்த வாட்டத்தில் எழுதப்படும். உ-ம்.



வர்ணம், வர்க்கம், வார்சு, விருந்தாளி.

(136) கொக்கியிடப்பட்ட, தர், 'தல்' என்பவை ஒரு வார்த்தையின் நடுவிலோ, முடிவிலோ வரும் 'த்தர், த்தல்' என்பவற்றிற்கும் எழுதப்படும். உ-ம்.



கொடுத்தல், கோத்திரம், பாத்திரம், அடித்தல், காயத்திரி, சமுத்திரம்.

பயிற்சி - 28

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

வர்மம், தற்காப்பு, கடுங்காவல்,
மேற்சொல்லிய, புலவர், அறைகூவல்,
தர்மசிந்தை, தர்மசாலி, தர்மபுரி,
முறுவல், அனைவரும், வழங்குதல்,
மற்றவர், வருணனை, அகவல்,
வரலாறு, தீர்ப்பு, அலுவலகம்.

தனிக்குறிச் சொற்கள்

பெயர், பிரிட்டிஷ் ; நண்பர்,
மெம்பர், நம்பர் ; அன்று/றி ;
ஒன்று/றி, இன்று/றி ; ஒவ்வொன்று,
காரிய, கோரி ; நிர்வாக/கி ;
மறுபடி, மேற்படி ; அவர்,
ஆதார/ஆதரி, திரு/திருவாளர், தீர்மான/மாய் ;
அதில், பல, பலவித/மாய் ;
ஆனுல், ஆனதனுல், உதாரண/ம், கால/ம்.

சுருக்கங்கள்

அப்பேர்ப்பட்ட, ஒன்ருெடொன்று,
ஒன்றன்பின் ஒன்ருய், ஒன்றை ஒன்று,
ஒன்றுக்கொன்று, உணர்ச்சி, பலவந்த.

பயிற்சி - 29

சுருக்கெழுத்தில் எழுதுக

“அந்தந்தப் பிராந்திய மொழியை வளர்ப்பதற்கு எனது நண்பரே, லோக் சபா மெம்பரே, இன்று ஒன்றன்பின்ஒன்ருய் ஆதாரத்தோடு பல யோசனைகளை, ஒன்ருேடொன்று குழப்பாமல் இப்போது கூறும். மொழிவழி மாகாணம் ஏற்பட்டு இருக்கும் இந்தச் சமயத்தில் தேசீய ஐக்கியத்தைக் குலைக்கும் காரியத்தில் நாம் இறங்கக் கூடாது. உலகில் மிகப் பழமை வாய்ந்த மொழிகளில் ஒன்று நமது தாய் மொழி என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இன்று அத்தகைய பழமை மிகுந்த மொழிகளில் ஒருசில வழக்கொழிந்து போனலும் நமது மொழி இன்னமும் தனது இளமை மாருமல் வழக்கத்தில் இருப்பதற்குக் காரணம் அது ஓர் உயிருள்ள மொழி, ஊட்டச் சக்தியுள்ள மொழி என்பதே ஆகும். அதனுலேயே பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் நமது மொழி இன்றைக்கும் ஒரு நிலைபெற்ற மொழியாக இருக்கிறது. இன்று நம் மொழியை, நம் கலையை, கலாசாரத்தை, செல்வ வளத்தை வளர்த்துக் கொள்வது நம் கையிலேயே இருக்கிறது. இந்த நம்பிக்கை நம் எல்லோருக்கும் பூரணமாக இருக்குமானுல் உலகில் எந்தச் சக்தியும் நம்மை ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனுல் இப்படிப் பட்ட சமயத்தில் இதுசம்பந்தமாக நமது தேசத்தில் ஒன்றன்பின் ஒன்ருய்ப் பலவிதமான பிரச்னைகள் கிளம்பி இருக்கின்றன. அன்றியும் இம்மாதிரி சமயத்தில் கிளர்ச்சி செய்ய ஒருசில நபர்கள் முயல்வது வெறுக்கத்தக்கது. எவரும் இந்தச் சமயத்தில் உணர்ச்சி வசப்படக் கூடாது. யாரும் எவரையும் குற்றம் சொல்லக் கூடாது. அவர்மேல் நீ குற்றம் சொன்னுல் அவர் இவர்மேல் குற்றம் சொல்வார். ஆகையினுல் அவரையும், இவரையும் நாம் என்ன செய்வது? ஆனதனுல் ஒரு சமாதான ஏற்பாடே இப்பொழுது மிகமிக அவசியம். அவர் அவ்வாறு, அதாவது ‘சமாதானமே இந்த உலகத்திற்குத் தேவை’ என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. ஆகவே திருவாளர் ராமலிங்கம் சொல்வது, நம் எல்லோராலும் பூர்ணமாக வரவேற்கத்தக்கது. இது நம் நாடு; நம் தேசம். நம்முடைய தேசம் வளர்ச்சி அடைய நாம் எல்லா வகையிலும் பாடுபடுவோமாக.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. 'ர்' என்பதற்குச் சிறிய கொக்கி நேர்கோடுகளுக்கு, அவற்றின் ஆரம்பத்தில் வலது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும்.

2. 'ல்' என்பதற்குச் சிறிய கொக்கி நேர்கோடுகளுக்கு, அவற்றின் ஆரம்பத்தில் இடது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும்.

3. 'ர்' என்பதற்குச் சிறிய கொக்கியும், 'ல்' என்பதற்குப் பெரிய கொக்கியும், வளைவு கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும்.

4. ர/ற, ச்ச, ங, ல, ச/ஸ என்பவற்றுக்கும், சுழி அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கும் 'ர், ல்' கொக்கிகள் போடப்படுவதில்லை.

5. பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு கல் எழுதப்படும்.

6. 'ர், ல்' கொக்கியிடப்பட்ட ர/ற (கீழ்), ச/ஸ ஆகியவை, இடது வாட்டம் 'வர், தர், வல், தல்' ஆகியவற்றுக்கு மாற்று உருவங்களாக எழுதப்படும்.

7. ஆரம்ப உயிர்க்குறிகள், படுக்கைக் கோடுகள், நேர்கோட்டு மேற் கோடுகள் ஆகியவற்றுக்குப் பின் வலது வாட்டம் 'வர், தர், வல், தல்' எழுதப்படும். மற்றச் சமயங்களில் எந்த வாட்டம் சேர்த்து எழுதச் சௌகர்யமாக இருக்கிறதோ அந்த வாட்டம் எழுதப்படும்.

[விதிகள் : 123 - 136]

அத்தியாயம் 12

குறுக்கிடும் உயிர்களும் கொக்கிகளுக்கு முன் சுழிகளும்

குறுக்கிடும் உயிர்கள். (137) வாகாக எழுதுவதற்கு 'ர், ல்' கொக்கி சேர்ந்த தொடருக்கு இடையே குறில் வந்தாலும் கொக்கிகள் உபயோகிக்கப்படும். நெடில் வந்தால் கொக்கியை உபயோகப்படுத் தாமல் முழுவதும் எழுதப்படும். உ-ம்.

 பலமாக, பாலம்,  பிறகு,  பீரிடு.

(138) இருந்தாலும் வாகாகவும், நீளமாகப் போகும் குறித்தொடரைச் சுருக்கியும் எழுதுவதற்காக 'ர், ல்' சேர்ந்த தொடருக்கு இடையே எந்த இடத்து நெடில் வந்தாலும் அதைக் காட்டக் கொக்கியிடப்பட்ட மெய்க் குறிக்கு நடுவே ஒரு குறுங்கோட்டு உயிர்க்குறி போடப்படும். உ-ம்.

 கார்காலம், கோரிக்கை.

(139) மேற்சொல்லிய விதிகளின்படி கொக்கி போட்டு எழுதக் கூடிய குறித்தொடர்களைக் கூட, வார்த்தைக்கு வார்த்தை வித்தியாசப்படுத்திக் காட்ட வேண்டிய இடங்களில் ஒரு வார்த்தை கொக்கியுடனும், மற்றது முழுவதும் எழுதப்படுவதைக் கீழே பார்க்க. உ-ம்.

 பார்த்தே, பாராதே,

 அடித்தல்,  அடித்தால்,

பார்வை, பறவை,

பொறுமை, பொருமை.

(140) ஒரு வார்த்தையின் ஆரம்பத்தில் 'நல்ல' என்பது வந்தால், அதற்கு என்பது சேர்த்து எழுதப்படும். உ-ம்.

 நல்லது,  நல்லவை, நல்ல வேளை.

இதுபோல் ஒரு வினைச் சொல்லோடு கடைசியில் 'கொள்ள' என்பது வந்தால் அதற்கு என்பது சேர்த்து எழுதப்படும். உ-ம்.

 கூடிக்கொள்ள, அமைத்துக்கொள்ள.

'ர், ல்' கொக்கிகளுக்கு முன் சுழிகள். **(141)** 'ர்' கொக்கியையுடைய நேர்கோடுகளுக்கு முன் ஆரம்பத்தில், ச/ஸ அல்லது ஸ்வ வுக்குரிய சுழி வந்தால் கொக்கியுள்ள பக்கமாக, அதாவது வலது வாட்டமாகவே, அந்தச் சுழிகள் சேர்த்து எழுதப்படும். உ-ம்.

 சீக்கிரம்,  சுற்றம்,  ஸ்வீகரி.

(142) ஆனல் 'ல்' கொக்கியிடப்பட்ட நேர்கோடுகளுக்கும், 'ர், ல்' கொக்கியிடப்பட்ட வளைவு கோடுகளுக்கும், 'ச/ஸ' சுழி மாத்திரம் கொக்கிக்குள், கொக்கி, சுழி இரண்டையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுதப்படும். உ-ம்.

சேவல்,  சுவர்,  சகலத்திற்கும்,

பேசினர், பரஸ்பரம்,  பசுக்கள்.

(143) நடுவிலே 'ஸ்கர்' என்பது கீழ்க்கோடுகளுக்குப் பின் வந்தால் அது கீழ்க்கண்டபடி எழுதப்படும். உ-ம்.

கிருபாசாகரன,  பாஸ்கரன,  பேசுகிறவை.

பயிற்சி - 30

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

 பிரசாதம்,  கற்சுவர், நகரம்,

கேஸ்கர்,  சுற்றிலும், க்ஷீரசாகரம்,

 மார்க்கம், ஒருவர், தற்சமயத்தில்,

 அதுமாதிரி, பிரபலஸ்தர்,  சிற்றுண்டி,

சக்ரபாணி,  சுக்ரக்கிரஹம்,  நல்ல பாம்பு,

 நல்ல செய்தி,  நல்ல காலம்,  அஸ்திவாரம்.

சுருக்கங்கள்

அதிகார/ரி ; அபிப்பிராய/ம்/பேதம் ;

இன்றியமையாத/து ; அதற்கு ;

சமயோசித/மாய் ; தற்கால நிலைமை,

எதிர்கால நிலைமை ; நாளடைவில்,

நாளாவட்டத்தில் ; பெருமைதங்கிய,

பிரஸ்தாபித்து ; காலக்கிரமத்தில்,

காலத்திற்கேற்ப ; தற்பொழுது/போது,

மேற்படியார் ; ஒவ்வொருவருக்கும்,

ஒருவருக்கொருவர் ; சற்றேறக்குறைய,

எல்லாவற்றிலும், நல்லது பொல்லாதது ;

சர்வகலாசாலை, சகோதர சகோதரிகளே :

அதற்கேற்றபடி, கூடிய சீக்கிரம் ;

அப்பொழுதாகிலும், அவற்றை.

பயிற்சி - 31

கீழ்க்கண்ட வினைச்சுருக்கங்களை எழுதிப் படிக்க

ததற்கு, கொடுத்ததற்கு,

{ ததினால், ததனால், } { கொடுத்ததினால், கொடுத்ததனால் ; }

தீர், கொடுத்தீர் ;

{ னார், ஞர், னீர், } { பாடினார், பாடிஞர், பாடினீர் ; }



பயிற்சி - 32

சுருக்கெழுத்தில் எழுதுக

தற்கால நிலைமையில் அபிப்பிராயபேதமின்றி ஒவ்வோர் அரசாங்க அதிகாரியும் தமது அதிகாரத்தை நல்லது பொல்லாதது எது என்று ஆராய்ந்து உபயோகிப்பது இன்றியமையாதது. எதிர்கால நிலைமை காலக்கிரமத்தில் எவ்வளவு மாறுதல் அடையக் கூடுமென்று இன்றைக்குச் சொல்வது சிரமம். காலத்திற்கேற்ப ஒவ்வொருவரும் சமயோசிதமாய்ப் பழகுவது மிக அவசியம். எந்தக் காலத்திலும் அரசியல் கொந்தளிப்பில் அரசாங்க அதிகாரிகள் சிக்கக் கூடாது. சர்வகலாசாலைப் படிப்பு உயர் வானது என்பது பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். ஆனால் ஒருவருக்கு இந்தக் காலத்தில் படிப்பு மாத்திரம் போதுமா? கல்விக் கேற்ற குணமும் தேவை. முதற்படியாக ஊழியர்கள் யாரும் லஞ்சம் வாங்கக் கூடாது. அதேபோல் யாரும் கொடுக்கக் கூடாது. இந்த உண்மையை இரு சாராரும் புரிந்து கொள்வது அவசியம். சற்றேறக் குறைய ஆயிரம் ஆண்டுகளாக நமது உள்ளம் எல்லாவற்றிலும் வளரும் அன்பினால் நாம் ஒருவருக்கொருவர் சுற்றம் போல் வாழ்கிறோம். அதனாலேயே ஒவ்வொருவருக்கும் உபகாரம் செய்கிறோம். சொந்தக் காரியத்தை எண்ணிப் பழகினால் ஒவ்வொருவருக்குமிடையே வெறுப்பே வளரும். ஆகையினால் ஒருவருக்கொருவர் பொறாமையின்றித் தனித் தனியாக அன்போடு உழைப்பது மிக அவசியம். ' சகோதர சகோதரிகளே '

என்று மணிக்கணக்கில் சொற்பொழிவு செய்வதனால் எந்தப் பிரச்னையையும் சமாளிக்கலாமென்று எண்ணக் கூடாது. அன்பால் ஆவது வேறு எதனாலும் ஆகாது. அதனாலேயே 'அன்பே சிவம்' என்று பெரியோர்கள் சொல்வர்.

குறி விளக்கம்





பாடச் சுருக்கம்

1. வாகாக எழுதுவதற்கு 'ர், ல்' கொக்கி சேர்ந்த தொடருக்கு இடையே குறில் வந்தால் கொக்கி எழுதப்படும். ஆனால் நெடில் வந்தால் பெரும்பாலும் கொக்கி எழுதப்படுவதில்லை.

2. 'ர், ல்' கொக்கி சேர்ந்த தொடருக்கு இடையே எந்த இடத்து நெடில் வந்தாலும் சுருக்கமாகவும், வாகாகவும் எழுதுவதற்காகச் சில இடங்களில் கொக்கியிடப்பட்ட மெய்க்குறிக்கு நடுவே குறுங் கோட்டு உயிர்க்குறி போடப்படும்.

3. 'ர்' கொக்கியையுடைய நேர்கோடுகளுக்கு முன் ஆரம்பத்தில் 'ச/ஸ' அல்லது 'ஸ்வ' வுக்குரிய சுழி வந்தால் கொக்கியுள்ள பக்கமே அந்தச் சுழிகள் எழுதப்படும்.

4. 'ல்' கொக்கியிடப்பட்ட நேர்கோடுகளுக்கும், 'ர், ல்' கொக்கியிடப் பட்ட வளைவு கோடுகளுக்கும் 'ச/ஸ' சுழி மாத்திரம் கொக்கிக்குள் சுழி, கொக்கி இரண்டும் சுலபமாகத் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் எழுதப்படும்.

[விதிகள் : 137 - 143]

அத்தியாயம் 13

த - கொக்கி

'த' கொக்கி. **(144)** சுழியோ, கொக்கியோ எதுவும் இல்லாத நேர் கோட்டு மெய்களுக்கு முன்னால் வருகின்ற 'த' அல்லது 'த்' என்பதைக் காட்ட அவ்வந் நேர்கோடுகளின் ஆரம்பத்தில் வலது வாட்டமாகப் பெரிய கொக்கி சேர்த்து எழுதப்படும். உ - ம்.

தடுக்க, தாபம்,  தக்கபடி, தரை.

(145) ஆரம்பத்தில் உயிர் வந்தாலும், ஆரம்ப உயிர்க்குறிகளோடு 'த' கொக்கி சேர்த்து எழுதப்படும். உ - ம்.  உதடு.

(146) ஆனால் ஆரம்ப உயிர்க்குறியோடு 'த' கொக்கியை வாகாகச் சேர்க்க வசதியற்ற இடங்களில் முழுவதும் எழுதப்படும். உ - ம்.

அதிகம்,  அதிரசம், அதிர்ச்சி.

(147) நடுவிலும், 'த' கொக்கி, வாகாகச் சேர்க்க வசதியிருந்தால் சேர்த்து எழுதப்படும். அதாவது இரண்டு கோடுகளுக்கிடையே 'த' வரும்போது, அதனை அடுத்து வருகிற கோடு நேர்கோடாக இருந்தால், அந்த நேர்கோட்டின் ஆரம்பத்தில் 'த' கொக்கி சேர்த்து எழுதப்படும். உ - ம்.

 போதிக்க,  வாதிக்க,  கைத்தறி.

(148) 'ல்' என்பதற்கு, வளைவு கோடுகளின் ஆரம்பத்தில் வளைவின் உட்புறம் பெரிய கொக்கி சேர்த்து எழுதப்படுவதால் (விதி - 127), வளைவு கோடுகளுக்கு, 'த' கொக்கி போடப்படுவதில்லை. உ-ம்.

 தீவு,  தீனி,  தீமை.

ஆனால் 'ல' வளைவு கோடானாலும் அதற்கு 'ல்' பெரிய கொக்கி போடுவதில்லையாதலால், 'த' கொக்கி போடப்படும். உ - ம்.

 தலை,  தலைவர், தோல்வி.

பயிற்சி - 33

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

---------- திடம், ---------- தபால், ---------- தலைநோய்,

---------- திருவிழா, ---------- பச்சாத்தாபம், ---------- தலைமை,

---------- தீராத, ---------- துதிக்க, ---------- ஒருதரம்,

---------- தவலை, ---------- சொல்வதாக, ---------- தொடர்ச்சி,

---------- தொடர்பு, ---------- மதிப்பு, ---------- பதிப்பு,

---------- உதரம், ---------- பங்குதாரர், ---------- திரவியம்,

---------- தீர்க்கதரிசனம், ---------- அவதூறு, ---------- துறவு,

---------- தலைப்பு, ---------- தலைவலி, ---------- தலம்,

---------- துரிதம், ---------- பாதகம், ---------- பதறி.

தனிக்குறிச் சொற்கள்

---------- தடவை, ---------- திட்டம், ---------- தகராறு.

சுருக்கங்கள்

---------- தக்கவாறு, ---------- தலைமுறை தலைமுறையாய்/யாக,

---------- குடிசைத் தொழில்.

பயிற்சி - 34

சுருக்கெழுத்தில் எழுதுக

சென்னை,
11—5—1953.

அன்புமிக்க ராமனுக்கு,

சுப்பிரமணியம் அநேக வணக்கம். இப்பொழுது இங்கு யாவரும் சுகம். அவ்வாறு அங்கும் எப்பொழுதும் இருக்கக் கோருகிறோம். இந்த ஊரில் கைத்தறித் துணி மிக அழகாக இருக்கிறது. கைத்தறி

என்றால் என்னவென்று கேட்காதே. ஏனென்றால் நாம் எல்லோரும் மில் துணி மோகத்தில் இப்பொழுது லயித்து இருக்கிறோம். அதே சமயத்தில் தலைமுறை தலைமுறையாய் நமது பாரத பூமியில் இருக்கும் குடிசைத் தொழில் கைத்தறியாகும் என்பதை மறக்கக் கூடாது. அந்தத் தொழில் இன்று நசிக்க ஆரம்பித்து இருக்கிறது. ஆகையால் கூடிய சீக்கிரத்தில் அதற்கேற்றபடி ஒரு திட்டம் வகுத்து மறுபடியும் அதற்கு ஊக்கம் அளிப்பது நம் எல்லோருக்கும் உரிய தலையாய கடமையாகும்.

நானும், பாலுவும் இந்தத் தீபாவளிக்குக் கைத்தறித் துணியையே வாங்கி இருக்கிறோம். உனக்குத் தகுந்த கைத்தறித் துணியையும் வாங்கி வைக்க உத்தேசித்துள்ளோம். பாலுவைப் பார்த்த பிறகே இந்த ஊர்ச் சுகாதார அதிகாரி ஸ்ரீ கேசவநாயர் கைத்தறித் துணி வாங்கினார் என்று அறிகிறோம். இப்பொழுது நீ வாங்கினால் உன் ஊரிலுள்ள தலையாரி முதல் அரசியல் தலைவர் வரையில் எல்லோரும் வாங்கக் கூடும். இந்தத் தடவை தப்பினால் மறு தடவை உனக்கு இதே ரகத் துணி கிடைக்காது. ஆகவே ஒரு தடவையாகவே யோசித்து நீ உன் தேவைக்குக் கடிதம் போடு. மற்றது பின்னர்.

அன்புள்ள,
சுப்பிரமணியம்.

குறி விளக்கம்





பாடச் சுருக்கம்

1. 'த' கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் ஆரம்பத்தில் வலது வட்டமாகப் போடப்படும்.

2. ஆரம்ப உயிர்க்குறியோடு 'த' கொக்கி சேர்க்கப்படும்.

3. நடுவிலும் வாகாக எழுதவரும் இடங்களில் 'த' கொக்கி எழுதப் படும்.

4. 'ல' வைத் தவிர மற்ற வளைவு கோடுகளுக்கு, 'த' கொக்கி கிடையாது.

[விதிகள் : 144 - 148]

அத்தியாயம் 14

ன், வ் - கொக்கிகள்

'ன்' கொக்கி. (*149*) 'ன்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடு களுக்கு அவற்றின் கடைசியில் வலது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். உ-ம்,



பொன், டின், பையன், பேன்.

(*150*) 'ன்' என்பதற்குச் சிறிய கொக்கி, வளைவு கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும். உ-ம்.



மீன், நான், வான், தேன்.

'வ்' கொக்கி. (*151*) 'வ்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடு களுக்கு அவற்றின் கடைசியில் இடது வாட்டமாகச் சேர்த்து எழுதப்படும். உ-ம்.



ராவ், மியாவ்.

(*152*) 'ன்' என்பதற்குச் சிறிய கொக்கி, வளைவு கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படுவதால், வளைவு கோடுகளுக்குப் பின் 'வ்' வந்தால் கொக்கியின்றி, முழுவதுமே எழுதப்படும். உ-ம்.



விவாதம், நவீனம், லவங்கம்.

(*153*) ஒரு வார்த்தையின் கடைசியில் உயிரொலி வந்தால், உயிர்க் குறியைப் போடக் கடைசியில் ஒரு கோடு இருக்க வேண்டியது அவசியம். (*விதி-93*). ஆதலால் கடைசியில் 'ன், வ்' வோடு உயிரொலி சேர்ந்து விட்டால், கொக்கியை உபயோகப்படுத்தாமல் முழுவதுமே எழுதப்படும். உ-ம்.



மான், மானி, ராவ், ரவி.

(*154*) 'ர/ற' வுக்குப் பின் 'ன்' வந்தால் எழுதும் வாகு கருதிப் பெரும்பாலும் மேற்கோடு 'ர/ற' தான் எழுதப்படும். உ-ம்.



பேரன், மாறன், வீரன்.

(155) 'ன்' கொக்கியிடப்பட்ட 'ல' வேறு கோடுகளோடு சேரும் போது, வாகுக்கு ஏற்ப மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ எழுதப்படும். உ - ம்.

பலன், காலன், வேலன், நீலன்.

நடுவில் 'ன், வ்' கொக்கிகள். (156) நடுவில் 'ன், வ்' கொக்கி, பின்னே வரும் கோடுகளோடு வாகாகச் சேர்க்க வசதியுள்ள இடங்களில் எழுதப்படும். உ - ம்.

பொன்னுடை, தேன் கூண்டு, குன்று,
பவனி, ஓடிவிட, ஜீவனம்.

(157) சேர்த்து எழுத வாகு இல்லாத இடங்களில் நடுவில், 'ன், வ்' கொக்கியைப் போடாமல், அவற்றுக்குரிய மெய்க்குறிகளே எழுதப்படும். உ - ம்.

நோன்பு, ஜன்மம், சீநிவாசன்,
தெளிவாக, அறிவிக்க, ஜானகி.

பயிற்சி - 35

கீழ்க்கண்ட வார்த்தைகளை எழுதிப் படிக்க

முன், வான், அவன்,
அம்மான், அண்ணன், பொன்னன்,
நன்றி, மன்னன், நண்பகல்,
நன்னிலம், நன்னயம், போன்ற,
முன்வருகிறோம், பாவிக்க, சரிவர,
நந்தன், ஆரவாரம், பாவனை,
ஜீவநதி, அடிவானம், ஜீவாத்மா,
ஜீவானந்தம், பவானி, ஜீவனும்சம்,
பீமன், மைந்தன், கூன்,
தேன், தேனீ, கூனி,

(158) நடுவில் ' ண் ' வந்தால் அது பெரும்பாலும் மெய்க்குறி ' ண ' வைக் கொண்டோ, பெரிய சுழியைக் கொண்டோ காட்டப்படும். உ - ம்.

கணக்கு, மாண்பு, வண்டி.

(159) ஆனால் வாகாக எழுதுவதை உத்தேசித்தும், நீளமாகப் போகும் குறித்தொடரைச் சுருக்குவதற்கும், ' ன் ' கொக்கியே, ' ண் ' என்பதைக் குறிக்கவும் நடுவில் சில இடங்களில் எழுதப்படும். உ - ம்.

 கண்காட்சி, கண்காணிப்பு.

(160) இரண்டு கோடுகளுக்கிடையே ' த ' வந்தால், ' த ' வை அடுத்து வருகிற நேர்கோட்டின் ஆரம்பத்தில் அதற்குரிய பெரிய கொக்கி எழுதப் படும். (விதி - 147). உ - ம்.

 பாதிக்க,  கோபதாபம்,

பதிப்பு,  கைத்திறன்.

(161) ஆனால் வாகாக எழுதுவதை உத்தேசித்தும், நீளமாகப் போகும் குறித்தொடரைச் சுருக்குவதற்கும், நேர்கோடுகளுக்குப் பின் ' த ' வந்து அவற்றைத் தொடர்ந்து உடனே வளைவு கோடுகள் வந்தால், நடுவில் வரும் ' த ' என்பதைக் குறிக்க, நேர்கோடுகளின் கடைசியில், இடது வாட்டமாகப் போடும் ' வ 'வுக்குரிய சிறிய கொக்கியே எழுதப்படும். உ - ம்.

போதனை, மடத்தனம், சச்சிதானந்தம்.

(162) நேர்கோடுகளுக்குப் பின் ' னம், னும் ' வந்தால் ' ன் ' கொக்கி போடும் வாட்டமாகவே, ' ம் ' சுழி சேர்த்து எழுதப்படும். உ - ம்.

 பிரகடனம், ஸ்தல ஸ்தாபனம், இருப்பினும்,

சிக்கனம். கடினம்,  யாரேனும்.

' மும் ' சேர்ந்தால் சிறிய சுழி பெரிதாக எழுதப்படும். உ - ம்.

கடினமும், சிக்கனமும்.

(163) கடைசியில் வளைவு கோடுகளுக்குப் பின்னே, 'னும்' வந்தாலும், நேர்கோடுகளுக்குப் பின்னே 'வும்' வந்தாலும் முறையே, ன், வ் கொக்கிக்குள் 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும். உ - ம்.

அவனும், போகவும், மிகவும்.

(164) கடைசியில் 'ன்' கொக்கியிடப்பட்ட, அல்லது 'னம், னும்' சுழியிடப்பட்ட வார்த்தைகளுக்குப் பின் பன்மை விகுதியாகிய 'கள்' வந்தால், கொக்கி அல்லது சுழியிடப்பட்ட கோடுகளுக்கு வெளியே ஒட்டினாற்போல ஒரு சிறு கோடு எழுதப்படும். உ - ம்.

நலன்கள், வாகனங்கள், மான்கள்.

(165) 'ஆயினும்' என்பது தனித்து ஆரம்பத்தில் வரும்போது என்று எழுதப்படும். ஆனால் ஒரு வார்த்தையின் கடைசியில் வரும்போது என்பது முன்னதுடன் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

அங்காயினும், எங்காயினும், அப்பொழுதாயினும்.

சுருக்கத்தில் 'ன்' கொக்கி. (166) சுருக்கத்தில் ஒரு வார்த்தைக்குப் பின் கடைசியில் வரும் 'தான்' என்பதைக் காட்ட 'ன்' கொக்கி சேர்த்து எழுதப்படும். உ - ம்.

அப்பொழுதுதான், அதுதான், ஏற்பாடுதான்.

பயிற்சி - 36

கீழ்க்கண்ட வார்த்தைகளை எழுதிப் படிக்க

படித்தவன், சண்டித்தனம், பிரதிநிதி,

கண்மூடித்தனம், பண்ணை, கண்ணன்,

கண்ணாடி, வண்ணம், தோன்றிய,

மேன்மேலும், ரஸ்தாக்களின், வழிவகை,

கவனி, கவர்ச்சி மனப்பான்மை,

நன்கொடை, நன்றாய், மனிதன்,

பெரும்பான்மை, திண்டிவனம், தர்ம ஸ்தாபனம்.

தனிக்குறிச் சொற்கள்

பயன், ஜன நாயக, ஜவாப்,

ஜீவாதார, அன்றேனும், அப்பொழுதேனும்/போதேனும்.

சுருக்கங்கள்

அன்றைய தினம், நேற்றைய தினம் ;

ஜவாப்தாரி, சம்பந்தா சம்பந்தமின்றி,

அவ்வாறேனும், தேச பக்தன்.

பயிற்சி - 37

சுருக்கெழுத்தில் எழுதுக

நேற்றைய தினம் தேச பக்தன் கோபாலன் எங்கே போனான்? எவ்வாறாயினும் இன்றைய தினம் நான் அவனைக் காண்பது மிகவும் அவசியம். எங்கே போனால் இப்படிப்பட்ட சமயத்தில் இப்பொழுது பார்க்கலாம்? அன்று என்னிடத்தில் அவன் சொல்லியிருந்த அந்த வேலைகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகத் தனிப்பட்ட வகையில் விசேஷக் கவனத்தோடு நான் இன்று ஒருவாறு பூர்த்தி செய்தேன். அதை வெற்றிகரமாகச் செய்ததற்கு நானே ஒருவகையில் ஜவாப்தாரி. அந்த வகையில் நான் இன்று பெருமை அடையலாம். எப்படியாயினும் தேச பக்தன் ஒருவனால் ஏற்படுத்தப்பட்டு இருக்கும் இந்த ஸ்தாபனம் தடங்கலின்றி வளர்வது அவசியம். ஆகையினால் எவ்வாறேனும் இதற்கான கவனம் செலுத்தி அதற்கு வழிவகை காண்பது உன் கடமை. இன்றைக்கு இந்தக் கடமையைச் செய்வது இன்றியமையாதது. இதற்காகவே உன் உழைப்பு, உன் சக்தி யாவையும் ஒவ்வொரு கணமும் நீ இப்பொழுது அர்ப்பணம் செய். வெகு சீக்கிரம் நாம் நினைப்பது ஈடேறும்.

குறி விளக்கம்





பாடச் சுருக்கம்

1. 'ன்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் வலது வட்டமாகச் சேர்த்து எழுதப்படும். வளைவு கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் வளைவின் உட்புறம் சேர்த்து எழுதப்படும்.

2. 'வ்' என்பதற்குச் சிறிய கொக்கி, நேர்கோடுகளுக்கு அவற்றின் கடைசியில் இடது வட்டமாகச் சேர்த்து எழுதப்படும். வளைவு கோடுகளுக்கு 'வ்' கொக்கி கிடையாது.

3. நடுவில் 'ன், வ்' கொக்கி பின்னே வரும் கோடுகளோடு வாகாகச் சேர்க்க வசதியுள்ள இடங்களில் எழுதப்படும்.

4. நேர்கோடுகளுக்குப் பின் 'னம், னும்' வந்தால், 'ன்' கொக்கி போடும் வட்டமாகவே 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும். 'மும்' வந்தால் சிறிய சுழி பெரிதாக எழுதப்படும்.

5. வளைவு கோடுகளுக்குப் பின்னே, 'னும்' வந்தாலும், நேர்கோடுகளுக்குப் பின்னே, 'வும்' வந்தாலும் முறையே, 'ன், வ்' கொக்கிக்குள் 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும்.

6. சுருக்கத்தில் 'தான்' என்பதைக் குறிக்க 'ன்' கொக்கி எழுதப்படும்.

[விதிகள் : 149 - 166]

அத்தியாயம் 15

ள்/ழ் - கொக்கி

'ள்/ழ்' கொக்கி. (167) 'ள்/ழ்' என்பதற்குப் பெரிய கொக்கி, நேர்கோடுகளுக்குக் கடைசியில் இடது வட்டமாகவோ, வலது வட்டமாகவோ (விதி - 85) சேர்த்து எழுதப்படும். உ - ம்.



கள், பாழ், சூழ், திருவருள், மகள், மஞ்சள்

(168) 'ள்/ழ்' என்பதற்குப் பெரிய கொக்கி, வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறம் கடைசியில் சேர்த்து எழுதப்படும். உ - ம்.



தாள்/ழ், அவள், திருநாள், அதன். முள், அம்மான்.

(169) 'ள்/ழ்' கொக்கியிடப்பட்ட வார்த்தைகளோடு, 'ம்' சேர்ந்தால் 'ள்/ழ்' கடைக் கொக்கிக்குள்ளேயே 'ம்' சுழி சேர்த்து எழுதப்படும். உ - ம்.



மகளும், வாளும், நாளும்.

(170) ஆரம்பச் சேர்க்கையை (ஆரம்ப உயிர்க்குறியோ, சுழியோ, நீண்ட சுழியோ, அல்லது கொக்கியோ) உடைய நேர்கோடுகளுக்கு 'ள்/ழ்' கொக்கியைச் சேர்த்து எழுதும்போது, ஆரம்பச் சேர்க்கையின் மறுபுறம், நேர்கோடுகளின் கடைசியில் 'ள்/ழ்' கொக்கி எழுதப்படும். உ - ம்.



சுருள், பாடங்கள், மரங்கள், செவியுள், திரள், செய்யுள்.

(171) நடுவில், 'ள்/ழ்' கொக்கி பெரும்பாலும் எழுதப்படுவதில்லை. ஆகவே நடுவில் 'ள்/ழ்' வந்தால் முழுவதுமே எழுதப்படும். உ - ம்.



வேள்வி, வாழ்வு, தாழ்வு, வழக்கு. கேளிக்கை, களிப்பு.

(172) ஆனால் 'ள்/ழ்' கொக்கியிடப்பட்ட வார்த்தைகளுக்குப் பின், மற்றொரு வார்த்தையோ, வேற்றுமை உருபோ, பன்மை விகுதியோ சேரும்போது 'ள்/ழ்' கொக்கி வாகுள்ள இடங்களில் அப்படியே வைத்துக் கொள்ளப்படும்.



பன்மை விகுதி 'கள்'. (173) பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு முன் மெல்லினமாகிய 'ங்' வந்து அதை நடுவில் பெரிய சுழி கொண்டு காட்ட வாகு இல்லாத இடத்திலும்; தனிக்குறிச் சொற்கள், சுருக்கங்கள் ஆகியவற்றோடு பன்மை விகுதி சேரும்போது 'கள்'ளுக்கு முன் 'ங்' வருமிடத்திலும்; (வர், (ல (கீழ்) கடைசியில் வரும் இடத்திலும் பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு 'ள்/ழ்' கொக்கியே கடைசியில் எழுதப்படும். உ - ம்.



சுருக்கத்தில் 'ள்/ழ்' கொக்கி. (174) 'அவர்கள்' என்ற சொல் மரியாதைக்குரிய பின்மொழியாகப் பல இடங்களில் வரும். அதைக் குறிக்க அவ் வார்த்தைக்கு முன்னுள்ள வார்த்தையின் கடைசிக் கோட்டின் முடிவில் 'ள்/ழ்' கொக்கி சேர்த்து எழுதப்படும். உ - ம்.



பயிற்சி - 38

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

--------மக்கள், ----------குடிமக்கள், பெருமக்கள்,

----------கரி நாள், ---------வளம், ------, ---திருப்புகழ்,

-------கிழவன், -------வாழ்ந்தால், ------தமிழ் மொழி,

கொள்முதல், ------கடவுள், ----------பக்தர்கள்,

----------அருள், ----------அகத்தமிழ், ----------பரம்பொருள்,

----------மாரி நாள், ------வந்தாள், --------வியங்கோள்.

தனிக்குறிச் சொற்கள்

----------நாங்கள், நீங்கள், உங்கள்,

----------தங்கள், எங்கள், ----------ஜனங்கள்,

--------அவர்கள், ----------சங்கங்கள்.

சுருக்கங்கள்

------------அபிப்பிராயங்கள், ----------அபிப்பிராய பேதங்கள்,

--------------பழக்க வழக்கங்கள், --------- தங்களைத் தாங்களே,

----------சண்டை சச்சரவுகள், ----------நாள்தோறும்,

-------- கட்சிப்பிரதிகட்சிகள்.

பயிற்சி - 39

சுருக்கெழுத்தில் எழுதுக

நீங்கள் சண்டை சச்சரவுகள் செய்வது சரியல்ல. எப்படிப்பட்ட அபிப்பிராய பேதங்கள் இருப்பினும் அவைகளைச் சமாதானமாகத் தீர்ப்பதற்கு வழிவகைகள் பல இருக்கின்றன. அவர்கள் எப்படிப்பட்டவர்கள்

என்று நான் அறியேன். இன்றைய தினம் தேச மக்கள் எல்லோரும் பலவிதமான கொள்கை, பலவிதமான வாழ்க்கை, பலவிதமான கலாசாரம் உடையவர்களாக இருக்கின்றனர். எல்லோரையும் ஒன்றாக்குவது சாத்தியம் அல்ல. அவர்களது பழக்க வழக்கங்களை எல்லாம் மாற்றுவது சுலபம் அல்ல. உதாரணமாகப் பிராணி பலித்தடை மசோதாவை நாங்கள் ஆதரிக்கின்றோம். அவர்கள் இதை எதிர்க்கின்றனர். இதை எதிர்ப்பதற்கு இதில் என்ன அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன? ஒன்றும் இல்லை. அதனால் தான் சம்பந்தா சம்பந்தமின்றிப் பேச வேண்டாம் என்றும், சண்டை சச்சரவுகள் இன்றி இதை ஆதரிக்கும்படியும் நான் உங்களைக் கேட்கிறேன்.

குறி விளக்கம்



பயிற்சி - 40

கீழ்க்கண்ட வினைச் சுருக்கங்களை எழுதிப் படிக்க

தீர்கள்,  கொடுத்தீர்கள்,

வார்கள், வீர்கள், சொல்வார்கள், சொல்வீர்கள்,

களையாகில், கேட்பார்களையாகில்,

 கொள்ளும்படி,  கேட்டுக்கொள்ளும்படி,

 கொள்ளும்பொழுது, கேட்டுக்கொள்ளும்பொழுது,

 கொள்ளுகிறேன், கேட்டுக்கொள்ளுகிறேன்,

 கொள்ளுகிறார்கள்,  கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பயிற்சி - 41

வினைச் சுருக்கங்களைச் சேர்த்து எழுதிப் படிக்க

பாடு, படி, நினை, போ, அறி,

ஓடு, நட, எண்ணு, நம்பு, ஆரம்பி.

பயிற்சி - 42

சுருக்கெழுத்தில் எழுதுக

திருவாளர் சச்சிதானந்தம் அவர்கள் பெரிய புராணம் சொல்வதாக அறிகிறேன். இன்று அதைக் கேட்பதற்காக நான் அங்கே போகிறேன். நீயும் என்னுடன் வருகிறாயா ? பாடம் கேட்கிறவர்கள் எல்லோரும் வரலாம். அது எல்லோராலும் கேட்கத்தக்கது. மேலும் அவர் சொல்வதும் எல்லோராலும் விரும்பத்தக்கது. அவர் சொல்கின்றவைகள் யாவும்

உண்மை. அதைக் கேட்க நான் அங்கே போகாதிருந்தால் அதைத் தெரிந்து கொள்வது எப்படிச் சாத்தியம் ஆகும்? நீ கேட்காததனால் பிழை இல்லை. நான் கேட்காமற் போனால்தான் அது குற்றமாகும். அவர் சொல்வதை ஒரு தடவை யாராவது கேட்பார்களேயாகில் மறுபடியும் அவர் எங்கே பிரசங்கம் செய்தாலும் அங்கே எல்லாம் அவர்கள் போவது கவனிக்கத் தக்கது. இந்தத் தடவை நீ என்னுடன் வா. அதைத் தான் நான் உன்னிடம் கேட்டுக்கொள்ளுகிறேன். யாரும் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளும்படி எப்பொழுதும் இருக்காதே. எதையும் நீயாகவே செய். அதுவே உசிதம். அதுவே தர்மம். அதுவே நியாயம்.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. ஆரம்பச் சேர்க்கையையுடைய நேர்கோடுகளுக்கு 'ள்/ழ்' பெரிய கொக்கி ஆரம்பச் சேர்க்கையின் மறுபுறம் கடைசியில் எழுதப்படும்.

2. வளைவு கோடுகளுக்கு வளைவின் உட்புறம் கடைசியில் 'ள்/ழ்' பெரிய கொக்கி எழுதப்படும்.

3. நடுவில் 'ள்/ழ்' கொக்கி பெரும்பாலும் எழுதப்படுவதில்லை. ஆனால் 'ள்/ழ்' கொக்கியிடப்பட்ட வார்த்தைகளோடு மற்றொரு வார்த்தை சேரும்போது 'ள்/ழ்' கொக்கி அப்படியே வைத்துக்கொள்ளப்படும்.

4. 'ள்/ழ்' கொக்கியிடப்பட்ட வார்த்தைகளோடு 'ம்' சேர்ந்தால் 'ள்/ழ்' கொக்கிக்குள்ளேயே 'ம்' சுழி எழுதப்படும்.

5. சுருக்கத்தில் 'அவர்கள்' என்பதற்கு 'ள்/ழ்' கொக்கி எழுதப்படும்.

[விதிகள் : 167 - 174]

அத்தியாயம் 16

த, வ, ஷ, ள்ள - மாற்று உருவங்கள்

(175) த, வ, ஷ வுக்கு முறையே என்று மாற்று உருவங்கள் கொடுத்திருப்பதை மெய்க் குறிகள் அட்டவணையில் பார்க்க. ஜோடிகளின் முதல் உருவமெல்லாம் இடது வாட்டம். மற்றவை வலது வாட்டம்.

த, வ, ஷ மாற்று உருவம். (176) தனித்தோ, உயிரொலியை முதலாகக் கொண்டோ வந்தால் இடது வாட்டம் எழுதப்படும். உ - ம்.

வா, தா, ஆதி,

ஏவு, அவா, உஷா.

(177) சேர்த்து எழுதும்பொழுது, சுழி, கொக்கி ஆகியவற்றுடன் கூடிய மெய்க்குறிகள் (விதி-6) அவற்றைத் தொடர்ந்து உடனே வந்தால் இடது வாட்டம் எழுதப்படும். உ - ம்.

வழி, துணிவு, காஷாயம்,

(178) அவற்றின் கடைசியில் சுழி, நீண்ட சுழி, கொக்கி ஆகியவை வந்தால் இடது வாட்டம் எழுதப்படும். உ - ம்.

தன், தந்தி, வஸ்திரம்.

(179) குறிப்பாக மற்ற இடங்களில் நடுவிலோ, முடிவிலோ எந்த வாட்டம் வாகாகச் சேர்த்து எழுதுவதற்கு வருகின்றதோ, அந்த வாட்டம் எழுதப்படும். உ - ம்.

 மசோதா,  யோசித்து,

 நெசவாளர், நைஷதம்.

'ள்ள' மாற்று உருவம். (180) 'ள்ள' என்பதைக் காட்ட  என்று முறையே இடம், வலமாக இரு வாட்டமும் கொடுத்திருப்பதை மெய்க் குறிகள் அட்டவணையில் பார்க்க. த, வ, ழ, ய, ன இவை 'ள்ள' வைப் பின்தொடர்ந்து வந்தால் இடது வாட்ட 'ள்ள' எழுதப்படும். ம, ர/ற (மேல்) பின் தொடர்ந்தால் வலது வாட்ட 'ள்ள' எழுதப்படும்.

மற்ற இடங்களில் பொதுவாக இடமோ, வலமோ எழுதுவதற்கு வாகாக வரும் வாட்டம் எழுதப்படும். உ - ம்.

---------- உள்ளது, ---------- உள்ளவை, ---------- பள்ளிக்கூடம்,

வெள்ளரி, ---------- தள்ளாமை, ---------- அப்பாலுள்ள.

பயிற்சி - 43

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

---------- தயவு, ---------- அத்தாட்சி, ---------- வசதி,

---------- வாழை, உள்ளபடியே, ---------- வாக்கு,

தேசாபிமானம், ---------- தமையன், ---------- தைரியம்,

---------- தஸ்தாவேஜி, உள்ளம், ---------- கள்ளுக் கடை,

---------- வானம், ---------- வணக்கம், வேடர்,

---------- வள்ளுவன், ---------- பள்ளம், குள்ள நரி.

தனிக்குறிச் சொற்கள்

---------- லட்சம், லட்சியம், அலட்சியம்.

சுருக்கங்கள்

ஒரு நிமிஷம், ஒவ்வொரு நிமிஷமும்,

---------- நிமிஷத்திற்கு நிமிஷம், உள்ளது உள்ளபடி,

---------- லட்சம் லட்சமாய், ---------- பாரபட்சமின்றி,

---------- பட்சபாதமின்றி, ---------- திவ்யக்ஷேத்திரம்.

பயிற்சி - 44

சுருக்கெழுத்தில் எழுதுக

தயவு செய்து ஒரு நிமிஷம் நீ பேசாதே. ஆனால் ஒவ்வொரு நிமிஷமும் நீ ஏதாவது செய்து வருகின்றாய். அவர் அந்த விஷயத்தை உள்ளபடியே பட்சபாதமின்றிப் படிப்படியாக அழகாகச் சொல்வதைக் கேட்பாய். அதை நீ கேட்காமற்போனாலும், என்னை இன்று தடுக்காதிருந்தால் சரி. எப்படியாயினும் நீ இன்று இங்கு பேசாதிருந்தால்தான் அது சாத்தியம். வாழ்வில் உனக்கு ஒரு கொள்கை, ஒரு லட்சியம் என்பதே இல்லை. ஒன்று சொல்கிறேன். லட்சியம் இல்லாமற்போனால் மனித வாழ்க்கை ஒருநாளும் சுகப்படாது. அதை நீ இப்பொழுதே தெரிந்து கொள்வது அவசியம். அதை ஏற்கனவேயே அறிந்தும் நீ இப்படிச் செய்தால் அப்பொழுது அது மிகவும் குற்றமாகும். உன்னைப் போல் என்னை நீ நினைக்கக் கூடாது. என் கொள்கையை அலட்சியம் செய்யவும் கூடாது. ஏனென்றால் என் லட்சியம் லட்சம் லட்சமாய்ப் பணம் சேகரிப்பது அல்ல. உழைப்பதும், கிடைத்ததைப் பிறருடன் பங்கிட்டு உண்பதும் என் கொள்கை. இதை நீ அலட்சியம் செய்யாதே என்று மறுபடியும் உன்னைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்கையே உலகில் மிகவும் உயர்வானது. இதன் உண்மையைப் பின்னர் நீ வாழ்க்கையில் உணர்வாய்.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. த, வ, ஷ ஆகியவற்றின் இடது வாட்டம் (1) தனித்து, உயிரொலியை முதலாகக் கொண்டு வந்தாலும், (2) கொக்கியுள்ள மெய்க்குறிகளுக்கு முன் வந்தாலும், (3) கடைசியில் சுழி, நீண்ட சுழி, கொக்கி ஆகியவை வந்தாலும் எழுதப்படும்.

2. நடுவில் எந்த வாட்டம் வாகாக எழுத வருகின்றதோ அந்த வாட்டமே எழுதப்படும்.

3. த, வ, ழ, ய, ன ஆகியவற்றுக்கு முன் 'ள்ள' வந்தால் இடது வாட்டமும், ம, ர/ற (மேல்) வுக்கு முன் வந்தால் வலது வாட்டமும் எழுதப்படும். மற்ற இடங்களில் பொதுவாக இடமோ, வலமோ எழுதுவதற்கு வாகாக வரும் வாட்டம் எழுதப்படும்.

[விதிகள் : 175 - 180]

அத்தியாயம் 17

ல, ஷ - மேலும் கீழும்

(181) ல மேல் நோக்கியே எழுதப்பட்டாலும், சில சமயம் கீழ் நோக்கியும் எழுதப்படும்; அதேபோல் வலது வாட்டம் ஷ கீழ் நோக்கியே எழுதப்பட்டாலும் சில சமயம் மேல் நோக்கியும் எழுதப்படும் (விதி-8). எப்பொழுது கீழ்நோக்கி எழுதப்படும், எப்பொழுது மேல் நோக்கி எழுதப்படும் என்பதைக் கீழே காண்க.

'ல' மேல் கீழ். **(182)** ஆரம்பத்திலோ, முடிவிலோ 'ல' மேல் நோக்கியே சாதாரணமாக எழுதப்படும். உ-ம்.



லாபம், லயம், கூலி, சல்லாபம்.

(183) 'ல' வுக்கு முன்னே, பின்னே வளைவு கோடுகளுடன் (விதி-90) அல்லது கொக்கியுள்ள மெய்க்குறிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள சுழி வந்தால் சுழியின் வாட்டமாகவே 'ல' எழுதப்படும். உ-ம்.



முசல்மான், ஆலோசனை,
கௌன்சில், ஹாலாஸ்யம்.

(184) ண, ன, ஞ, ங ஆகியவற்றுக்குப்பின் 'ல' வந்தால் வாகாக எழுதுவதை உத்தேசித்துக் கீழ் நோக்கியே எழுதப்படும். உ-ம்.



அணில், அனல்,
நீலி, அறநிலையம்.

(185) மேல் நோக்கிய நேர்கோடுகளுக்கும், ஷ, வ, சக, ழ, ஆகியவற்றுக்கும் பின்னே 'ல்' தனிமெய் வந்தால் கீழ் நோக்கியும், இல்லாவிடில் மேல் நோக்கியும் எழுதப்படும். உ-ம்.



வேல், வேலி,
வில், அகவிலை,
ஸ்கேல், ஸ்கேலை.

(186) நடுவில் வந்தால் எழுதுவதற்கு எப்படி வாகாக வருகிறதோ அப்படி எழுதப்படும். உ-ம்.



காலடி, நீலாம்புரி.

‘ஷ’ மேல் கீழ். (187) வலது வாட்ட ‘ஷ’ வேறொரு வளைவு கோட்டோடு சேரும்போது பொதுவாக எந்த வளைவு கோட்டோடு சேருகிறதோ அதன் வாட்டமாகவே மேல்நோக்கியோ, கீழ் நோக்கியோ எழுதப்படும். உ - ம்.

மேஷம், வேஷம்.

ஆனால் நேர்கோடுகளோடு சேரும்போது கீழ் நோக்கியே எழுதப்படும். உ - ம்.

ஷரா,  ஷோக்கு.

பயிற்சி - 45

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க



பயிற்சி - 46

சுருக்கெழுத்தில் எழுதுக

எதையும் செய்வதற்கு முன்பு ஆலோசனை செய்வது அவசியம். எதிலும் லாபம் அடைய நினைத்தால் உழைப்புத் தேவை. முதல் போட்டால் மாத்திரம் போதாது. எந்த விஷயத்தையும் நன்றாய்த் தெரிந்தே அதற்கு மேல் காரியங்களைச் சரிவரச் செய்வது அவசியம். அப்பொழுதுதான் எதையும் சரியாகப் புரிந்து கொள்வது சாத்தியம். விசேஷக் கவனம் செலுத்தி ஒரு விஷயத்தைச் செய்யாது போனால் அதில் தோல்வியே ஏற்படும். இந்தப் புஸ்தகத்தில் கண்டுள்ளபடி விதிகளை எல்லாம் உதாரணங்களோடு எழுதிப் பழகினால் நாளடைவில் சுலபமாக எழுதலாம். நாளாவட்டத்தில் வேகமும் அதிகமாகும். அதற்கு நாள் தோறும் பழக்கம் செய்யும் ஒரு வழக்கம் இருப்பது அவசியம்.

அப்பொழுதுதான் நல்ல பலன் கிடைக்கும். நாம் உலகில் இருக்கப் போகும் காலம் மிகச் சொற்பம். அதற்குள் எல்லாவற்றையும் கற்க ஊக்கம், உழைப்பு இரண்டும் தேவை. இன்று உலகத்தில் உயர்ந்த ஸ்தானம் வகிப்பவர்கள் எல்லோரும் ஒரு காலத்தில் மிகக் கடுமையாக உழைத்தவர்கள்தாம்.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. ' ல ' மேல் நோக்கியே பெரும்பாலும் எழுதப்படும்.

2. ' ல ' வுக்கு முன்னே, பின்னே வளைவு கோட்டுடன் சேர்க்கப்பட்டுள்ள சுழி வந்தால் சுழியின் பக்கமே ' ல ' எழுதப்படும்.

3. ண, ன, ஞ, ங ஆகியவற்றுக்குப் பின் ' ல ' வந்தால் கீழ் நோக்கியே எழுதப்படும்

4. மேல் நோக்கிய நேர்கோடுகள், ஷ, வ, சக, ழ ஆகியவற்றுக்குப் பின் ' ல் ' தனிமெய் வந்தால் கீழ் நோக்கியும், இல்லாவிடில் மேல் நோக்கியும் எழுதப்படும்.

5. வலது வாட்ட 'ஷ' வேறொரு வளைவு கோட்டோடு சேரும்பொழுது அந்த வளைவு கோட்டின் வாட்டமாகவே மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ எழுதப்படும்.

6. ஆனால் நேர்கோடுகளோடு சேரும்பொழுது ' ஷ ' வலது வாட்டம் கீழ்நோக்கியே எழுதப்படும்.

[விதிகள் : 181 - 187]

அத்தியாயம் 18

பாதியாக்கும் முறை

பொது விதி. (*188*) மெய்க்குறிகளைப் பாதியாக்கும் முக்கியமான பாடம் இது. குறிப்பாக ஒரு கோட்டின் சாதாரண நீளம் அக்கோட்டைக் குறிக்கும் வார்த்தைக்கு அடுத்து, த/த (அல்லது) ட/ட வந்தால் பாதியாக்கப்படும். உ - ம்.



நட்பு, வடக்கு, மஹாத்மா,

ஜட்கா, மட்கலம், பத்மநாபன்.

ஆனல் 'ட்ட/ட்ட' என்பதற்கு முறையே 'ட/ட' தான் பாதியாக்கப் படும். உ - ம்.



ஆட்டம், கட்டியம், குற்றச் சாட்டு,

அட்டிகை, இட்டிலி, கட்டணம்.

(*189*) பாதியாக்கப்பட்ட கோடுகளின் ஆரம்பத்திலோ, முடிவிலோ சுழி கொக்கி ஆகியவைகள் சேர்க்கப்படலாம். உ - ம்.



சப்தமி, நிபந்தனை, பந்தகம்,

மந்திரி, வந்தனம், சாஸ்திரம்.

(*190*) ⁀ ம, ‿ ந/ன ஆகிய இரண்டின் சாதாரண நீளம் த்/ட் என்பதற்குப் பாதியாக்கப்படும்; ஆனல் த்/ட் என்பதற்கு அவை பாதியாக்கப்படுவதோடு அழுத்தியும் எழுதப்படும். உ - ம்.



மடக்கு, நடனம், நடு வழி,

சிந்தனை, நடுப் பகல், முதலிய,

முதலியோர், நடப்பு, முதலியார்.

(*191*) தமிழில் பெரும்பாலான வார்த்தைகளின் நடுவில் 'த்' துக்குப் பிறகு 'த' வும், 'ட்' டுக்குப் பிறகு 'ட' வும் வருவதால்,

இம்மாதிரியான இடங்களில் பாதியாக்கப்பட்ட கோடுகளோடு சேரும் 'த்/ட்' டுக்குப் பிறகு த/ட சேர்த்தே படிக்கப்படும். உ - ம்.


வர்த்தகம், வைத்தியர், மத்தியானம்,


வாத்தியம், விருத்தாசலம், மட்டமாய்.

(192) மெய்க்குறி 'ள' பாதியாக்கப்படுவதில்லை. 'ள' பாதியாக்கப் பட்டால் 'ள்ள' போல் ஆகிவிடும். அதேபோல் 'ய' தனித்திருக்கும் பொழுது பாதியாக்கப்பட்டால் ஆரம்ப உயிர்க்குறி இ/ஈ போலாகிவிடும். ஆனால் 'ன்' கொக்கியிடப்பட்ட 'ய'வுக்குரிய குறி '(இ)யந்த' என்பதற்குப் பாதியாக்கப்படும். உ - ம்.


யந்திரம், இந்திர ஜாலம்.

(193) மெய்க்குறிகள் ம, ந/ன வோடு த்/ட் சேரும்போது ம, ந/ன வுக்குரிய குறி பாதியாக்கப்பட்டு அழுத்தி எழுதப்படுவதால், ம்ப, ங இரண்டும் பாதியாக்கப்படுவதில்லை.

(194) மேற்கோடு 'ர/ற' பாதியாக்கப்படுவதில்லை. ஏனெனில் ஆரம்ப உயிர்க்குறி உ/ஊ, இருக்கிறது/கின்றன, என்ற/று என்பன போன்றவற்றுக்கு எல்லாம் பாதியாக்கப்பட்ட ர/ற (மேல்) வைப் போன்ற ஒரு குறி ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. உ - ம்.


அர்த்தம், ரத்தினம்,


பாரதம், பூராடம்.

(195) த்/த் என்பதற்கு முன் 'ப'வுக்குரிய குறி கடைசியில் பாதியாக்கப் படுவதில்லை. ஏனெனில் 'பட/படி/பட்ட' என்பதற்குப் பாதியாக்கப்பட்ட 'ப' தனிக்குறியாக ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. உ - ம்.


கேட்பது, அற்புதம்.

(196) பாதியாக்குவது எங்கெங்கே வாகாக இல்லையோ அங்கெல்லாம் முழுவதுமே எழுதப்படும். உ - ம்.


முந்திய, பாண்டுரங்கன், குதிக்க.

(*197*) ஒரே வாட்டத்திலிருக்கும் பாதிக்கோடும், முழுக்கோடும் சேர்த்து எழுதப்படுவதில்லை. உ-ம்.

சபத்தினி, பட்டாடை, கட்டிடம்.

'ஷ்ட' குறி. (*198*) 'ஷ்ட' என்பதற்கு [sign] என்பது குறி. இது நடுவிலோ, முடிவிலோ வாகுக்கேற்பச் சேர்த்து எழுதப்படும். ஆரம்பத்தில் உயிர் வந்தாலும், ஆரம்ப உயிர்க்குறிகளோடு சேர்த்து எழுதப்படும். உ-ம்.

நஷ்டம், தீர்க்க திருஷ்டி,

அஷ்டமி, இஷ்டமான.

எழுதும் இடம். (*199*) பாதியாக்கப்பட்ட முதல் மேற்கோடோ, கீழ்க் கோடோ வரியினூடே உயிரொலியைக் காட்ட எழுதப்படுவதில்லை. ஒரு குறித் தொடரின் முதலில் வரும் பாதியாக்கப்பட்ட மேற்கோடோ, கீழ்க் கோடோ அவ்வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி முதல் இடத்ததானல் எழுதும் வரிக்கு மேலும், இரண்டாம் மூன்ரும் இடத்ததானல் எழுதும் வரியை ஒட்டியுமே எழுதப்படும். உ-ம்.

யந்திரம், இந்திரன்,

தந்திரம், சுதந்திரம்,

நடக்க, மீட்க.

பயிற்சி - 47

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

குந்தகம், கட்டளை, சட்டம்,

சட்டசபை, வித்தியாசம், நிவர்த்திக்க,

ஜெய் ஹிந்த், நீட்டம், உண்டு,

கஷ்டமான, பத்மாசனம், வர்த்தமானம்,

ஆண்டவன், தூரதிருஷ்டி, வர்த்தக சபை,

நுட்பம், நாட்கள், பட்டணம்,

ஓட்டம், பட்டம், கட்டுக் கதை.

தனிக்குறிச் சொற்கள்

ஆதரித்த/து, திருத்த/து, எதிர்த்த/து,
மட்டும், கொண்ட/டு, அல்லது,
இந்தியா, வந்த/து, வேண்டும்/டி,
இருந்த/து, அடைந்த/து.

சுருக்கங்கள்

பயனுண்டு, ஒன்றுண்டு,
அவற்றை, அவற்றால்,
ஜாதிவித்தியாசவுணர்ச்சி, நடவடிக்கை,
பொதுவாக, பொதுமக்கள்,
ராஜதந்திரம், அதுமட்டுமல்ல,
கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு ஸ்தாபனம்.

வினைச் சுருக்கங்கள்

வந்திருக்கிறது/கின்றன, வந்திருக்கும்,
வந்திருந்தனர்; வேண்டுமென்று,
வேண்டுமென்றால், வேண்டிய,
வேண்டியதாக, வேண்டுமானால்,
வேண்டியமட்டும், வேண்டுமென்பது, வேண்டுமென;
கொண்டிருக்கும், கொண்டிருக்கிறோம்,
கொண்டிருக்கிறது/கின்றன, கொண்டிருக்கையில்;
(க்)கிறது, கேட்கிறது,
(க்)கிறதேனும், கேட்கிறதேனும்,
(க்)கிறதாயினும், கேட்கிறதாயினும்,
(க்)கிறதுகள், கேட்கிறதுகள்.

பயிற்சி - 48

சுருக்கெழுத்தில் எழுதுக

"நமது இந்தியாவில் இன்றையதினம் கூட்டுறவு வர்த்தகத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மிகவும் அதிகம் என்று நினைக்கிறேன். ஆங்காங்கு எங்கே பார்த்தாலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இவை எல்லாம் திறம்படப் பணி ஆற்றினுல்தான் எதிர்காலத்தில் இன்னும் நல்ல பலன் இவற்ருல் நாட்டுக்கு ஏற்படும்" என்று வர்த்தகர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றில் தலைவர் பேசினுர். "இத்தகைய சபைகளைப் பொதுமக்களும், பொதுவாக நன்கு ஆதரிக்க வேண்டியது அவசியம். இன்று வர்த்தக சபைகள் எல்லாத் துறைகளிலும் ஜனங்களுக்குத் தொண்டாற்ற வேண்டியனவாக இருக்கின்றன. அதனுல் பணக் கஷ்டம் அவற்றுக்கு அதிகம் ஏற்பட்டுவிடுகிறது. பணம் இல்லாவிடில் இந்தக் காலத்தில் என்ன காரியம் நடக்கும்? பணம் இல்லாவிட்டால் பிணம் என்பரர்கள். ஆகவே இப்படிப்பட்ட கஷ்டம் ஒருவகையில் இருந்து வருகிறதாயினும் கூட, ஜனங்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற கொள்கை இருந்து வருகிறது. அதை நன்கு பொதுமக்கள் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்" என்பதாகக் கரகோஷத்திடையே அவர் பேசினுர்.

மேலும் அவர் சொன்னதாவது :—"தேச மக்கள் இதை ஆதரிக்க வேண்டுமென்று சொல்வதற்கு மற்ருெரு முக்கியமான காரணம், தனிப்பட்ட முதலாளி யாரும் இதில் லாபம் அடைந்துவிட வசதியில்லை. எப்பொழுதும் இதன் லாபம் இதன் உறுப்பினர்களுக்கே வந்து கொண்டிருக்கும். ஆங்காங்குள்ள மக்களே தாம் ஒன்று கூடிக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சர்க்கார் இதற்கு ஆதரவு அளிப்பார்களே தவிரச் சர்க்காரே அவற்றை அமைக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. இந்த இயக்கத்திற்குப் போதுமான ஊக்கத்தைச் சர்க்கார் எப்போதும் அளிப்பர். ஆகவே இவற்றை ஏற்படுத்த மக்கள் பெருவாரியாக முன்வர வேண்டும். இதற்குப் பிறகும் இதில் யாருக்கு என்ன சந்தேகம் இருக்கிறது?"

கூட்டத்திற்கு வர்த்தகர்கள், வைத்தியர்கள், வர்த்தக சபைத் தலைவர்கள் ஆகியோர் எல்லோரும் வந்திருந்தனர். தலைவருக்கு வந்தனம் செய்துவிட்டு, ஸ்ரீ ராமநாதன் பின்னர் வந்தனுேபசாரம் தெரிவிக்கும் முறையில் உற்சாகத்தோடு பேசினுர்.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. ஒரு கோட்டின் சாதாரண நீளம் அக் கோட்டைக் குறிக்கும் வார்த்தைக்கு அடுத்த த/த (அல்லது) ட/ட வந்தால் பாதியாக்கப் படும்.

2. ள, ம்ப, ங, ர/ற (மேல்) ஆகிய மெய்க்குறிகள் பாதியாக்கப்படுவ தில்லை.

3. ம, ந/ன ஆகிய இரண்டின் சாதாரண நீளம் த்/ட் என்பதற்கு முன் பாதியாக்கப்படும்; த்/ட் என்பதற்குப் பாதியாக்கப்பட்டு அழுத்தி எழுதப்படும்.

4. ஒரே வாட்டத்திலிருக்கும் பாதிக்கோடும், முழுக்கோடும் சேர்த்து எழுதப்படுவதில்லை.

5. 'ஷ்ட' என்பதற்கான குறி நடுவிலோ, முடிவிலோ வாகுக்கேற்பச் சேர்த்து எழுதப்படும். ஆரம்ப உயிர்க்குறிகளோடு சேர்த்தும் எழுதப்படும்.

6. பாதியாக்கப்பட்ட மேற்கோடோ, கீழ்க்கோடோ அவ்வார்த்தையின் முதலில் வரும் உயிரொலி முதல் இடத்ததானல் எழுதும் வரிக்கு மேலும், இரண்டாம் மூன்ரும் இடத்ததானல் எழுதும் வரியை ஒட்டியும் எழுதப்படும்.

[விதிகள் : 188 - 199]

அத்தியாயம் 19

இரட்டிப்பு முறை

பொது விதி. (200) ஒரு வளைவு கோட்டு மெய் இரட்டிக்கும்பொழுது வளைவு கோட்டின் நீளம் இரட்டிக்கப்படும் (விதி - 20). மேலும் வளைவு கோட்டு மெய்க்குறிகள் அவற்றை அடுத்து ஆர்/ட்டார்/த்தார் வந்தால் இரட்டிக்கப்படும். உ - ம்.



(201) மெய்க்குறிகள், அவற்றை அடுத்து 'ந்தார்/ண்டார்' வந்தால் 'ன்' கொக்கியிட்டு இரட்டிக்கப்படும். உ - ம்.



(202) நேர்கோட்டு மெய்க்குறிகள், அவற்றை அடுத்து 'த்தார்' வந்தால் இடது வாட்டமாகக் கடைசியில் சிறிய கொக்கியிட்டு ('வ' சிறிய கொக்கி 'த' என்பதற்கும் போடப்படுவதை விதி 161-ல் பார்க்க) இரட்டிக்கப்படும். உ - ம்.



(203) தனி நேர்கோடுகள் மட்டும் ஆரம்பத்திலோ, முடிவிலோ எவ்விதச் சேர்க்கையுமின்றி வந்தால் இரட்டிக்கப்படுவதில்லை. அதேபோல் உயிரொலி இடையில் வந்தாலும் இரட்டிக்கப்படுவதில்லை. உ - ம்.



(204) 'ங்' மெய்க்குறியை அடுத்து, கர்/கூர் வந்தால் அக்குறி இரட்டிக்கப் படும். உ - ம்.

உதயசங்கர், நரசிங்கர்.

பன்மை விகுதி 'கள்'. (205) மாட்டார், நாட்டார் போன்று கடைக் கொக்கியின்றி இரட்டிக்கப்பட்ட எல்லா வார்த்தைகளுக்கும் பன்மை விகுதியாகிய 'கள்' என்பதைக் குறிக்க 'ள்/ழ்' கொக்கி எழுதப்படும். உ - ம்.


மாட்டார்கள், நாட்டார்கள்.

(206) ஆனால் ஏற்கனவே கொக்கியிட்டு இரட்டிக்கப்படுகிற வார்த்தை களுக்குக் கடைசியில், பன்மை விகுதியாகிய 'கள்' வந்தால் கொக்கிக்கு வெளியே ஒட்டினாற்போல ஒரு சிறு கோடு (விதி - 164) எழுதப்படும். உ - ம்.

கண்டார்கள், மாண்டார்கள்,


அளித்தார்கள், சுற்றத்தார்கள்.

எழுதும் இடம். (207) இரட்டிக்கப்பட்ட கீழ்க் கோடுகள் எல்லாம் எழுதும் வரியினூடே எழுதப்படும். உ - ம்.


வந்தார், பூண்டார், பார்த்தார்.

(208) இரட்டிக்கப்பட்ட மேற்கோடுகள் அவ்வவ் வார்த்தைகளின் முதல் எழுத்தில் வரும் உயிரொலிக்கேற்ப எழுதும் வரிக்கு மேலோ, எழுதும் வரியை ஒட்டியோ, எழுதும் வரியினூடேயோ எழுதப்படும். உ - ம்.

அலைந்தார், எரிந்தார், இறந்தார்.

(209) இரட்டிக்கப்பட்ட படுக்கைக் கோடுகள் மற்றப் படுக்கைக் கோடு களைப் போல எழுதப்படும். (விதி - 39). உ - ம்.


மாட்டார், மோட்டார், மீண்டார்.

பயிற்சி - 49

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க



தனிக்குறிச் சொற்கள்

பயிற்சி - 50

சுருக்கெழுத்தில் எழுதுக

இந்த ஊரில் கோவிந்த நாட்டார் என்ற ஜமீன்தார் ஒருவர் இருந்தார். அவர் நிரந்தரமாக இங்கே ஒரு வைத்தியசாலையை ஸ்தாபித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலை வேண்டாமென்று பலர் எதிர்த்தார்கள்; தடை செய்தார்கள். ஆனால் அபிப்பிராயபேதங்கள் இன்றிப் பொதுமக்கள் அவரைப் பூர்ணமாக ஆதரித்தார்கள். அதனால் அவர் அந்த ஆஸ்பத்திரியை அன்று ஸ்தாபித்துவிட்டார். அதற்குப் பிறகும் அவர் பல நன்மைகளைத் தொடர்ந்து செய்து வந்தார். காசிநாதர் ஆலயத்தையும் அவர்தாம் கட்டித் தந்தார். தேசத்தார்கள் எல்லாருடனும் அவரும் ஒருவராகச் சுவாமியை தினப்படி பூஜித்தார். அவரிடம் யாசகத்திற்குச் சென்று ஒரு தடவை கூட யாரும் ஏமாந்தோம் என்று திரும்பார்.

ஏனென்றால் அவர் தம்மை நாடி வருபவரின் மனத்தை நன்றாக அறிந்தார். அதற்குத் தக்கபடி அன்பும் காட்டினார்; பொருளும் கொடுத்தார். யாரையும் கோபித்தார், அவமதித்தார், உதைத்தார் என்ற பெயரே இல்லை. யாரையும் கைநீட்டித் தொடமாட்டார். பிறர் பொருளை எடுக்கமாட்டார். அதனாலேயே அவர் கீர்த்தி அடைந்தார். அவர் போல் யாரும் உலகில் இருக்க இயலாது என்று எண்ண வேண்டாம். எல்லோரும் விரும்பினால் இருக்கலாம். அதைத்தான் நாம் எல்லோரும் இப்பொழுது விரும்ப வேண்டும். அதுவே எல்லோராலும் விரும்பத்தக்கது.

குறி விளக்கம்



பாடச் சுருக்கம்

1. வினவு கோட்டு மெய்க்குறிகளை அடுத்து 'ஆர்/ட்டார்/த்தார் வந்தால் அவை இரட்டிக்கப்படும்.

2. மெய்க்குறிகளை அடுத்து, 'ந்தார்/ண்டார்' வந்தால் 'ன்' கொக்கி யிடப்பட்டு அவை இரட்டிக்கப்படும்.

3. நேர்கோட்டு மெய்க்குறிகளை அடுத்து 'த்தார்' வந்தால் அவை இடது வாட்டமாகக் கடைசியில் சிறிய கொக்கியிடப்பட்டு இரட்டிக்கப் படும்.

4. கடைசியில் கொக்கி எதுவும் இல்லாத நேர்கோடுகள் இரட்டிக்கப் படுவதில்லை. உயிரொலி குறுக்கிட்டாலும் இரட்டிக்கப்படுவதில்லை.

5. 'ங்' என்பதற்குரிய மெய்க்குறியை அடுத்து 'கர்/க்ர்' வந்தால் அது இரட்டிக்கப்படும்.

6. கடைக்கொக்கியின்றி இரட்டிக்கப்பட்ட எல்லா வார்த்தைகளுக்கும் பன்மை விகுதியைக் குறிக்க 'ள்/ழ்' கொக்கி எழுதப்படும். ஆனால் கொக்கியிட்டு இரட்டிக்கப்பட்ட வார்த்தைகளுக்கு அந்தக் கொக்கிக்கு வெளியே ஒட்டினாற்போல ஒரு சிறு கோடு எழுதப்படும்.

7. இரட்டிக்கப்பட்ட கீழ்க்கோடுகள் எல்லாம் வரியினூடே எழுதப்படும். இரட்டிக்கப்பட்ட மேற்கோடுகள் அவ்வவ் வார்த்தைகளின் முதலில் வரும் உயிரொலிக்கேற்ப வரிக்கு மேலோ, வரியை ஒட்டியோ, வரியினூடேயோ எழுதப்படும்.

[விதிகள் : 200 - 209]

அத்தியாயம் 20

எண்களும் பேச்சை எடுக்கும் முறையும்

எண்கள். (210) எண்கள் ஒன்றிலிருந்து பத்துவரை சுருக்கெழுத்திலேயே எழுதப்படும். அதற்குப் பிறகு வரும் எண்கள் எல்லாம் அப்படியே அராபிக் எழுத்திலேயே எழுதப்படும். உ-ம். இருநூற்று எழுபத்தாறு = 276. இவ்வாறே பின்ன எண்களும் எழுதப்படும். இருந்தாலும் வேகமாக எழுதுவதை உத்தேசித்துக் கீழ்க்கண்டபடியும் எழுதலாம். உ-ம்.

(211) நூறும் அதற்கு மேற்பட்ட பேரெண்களும் பலவாக வரும்போது கீழ்க்கண்ட சுருக்கங்கள் உபயோகிக்கப்படும். உ-ம்.



(212) ரூபாய்/கள் என்பது எண்களுக்குப் பின் என்றும், பவுன் என்பது என்றும், வராகன் என்பது என்றும் எழுதப்படும். பர்சென்ட் என்பதற்கு என்றும் சதவிகிதம் என்பதற்கு என்றும் போடப்படும். உ-ம்.



(213) ஒரு பிரசங்கத்தின் முக்கியமான பகுதிகளை மாத்திரம் எடுக்க வேண்டுமென்றால் அந்தப் பிரசங்கத்தைச் சுருக்கெழுத்தில் எழுதிக்கொண்டு போகும்போதே முக்கியமான பகுதிகள் வருகையில் எழுதும் நோட்டின்

இடது கைப்புற விளிம்பில் அந்தப் பகுதி முக்கியமானது என்பதைக் காட்டுவதற்காக // என்று போட்டுக் கொள்க.

(214) ஹாஸ்யமான இடங்களை அப்படியே எழுத வேண்டுமென்பதற்காக என்று போட்டுக் கொள்க.

(215) பழக்கம் இல்லாத சொற்களோ, வேற்றுமொழிச் சொற்களோ வந்தால் அவற்றின் அடியில் இரு சிறு கோடுகள் போட்டுக் கொள்வதுடன், (விதி - 42) எல்லா உயிர்க்குறிகளையும் விடாமல் குறித்துக் கொள்க.

(216) பேசுவோர் தமிழில் கவிதைகளை மேற்கோள்களாக எடுத்து ஆளும்போது அவற்றின் ஆரம்பத்தையும் முடிவையும் சரியாக எழுதிக் கொண்டுவிட்டால், பின்னர் அவற்றிற்குரிய மூலப் புத்தகத்திலிருந்து முழுவதையும் பார்த்து எழுதிக்கொள்ளலாம்.

(217) தொடர் வார்த்தைகள் பல முறை திரும்பத் திரும்ப வந்தால், முதல்முறை அவற்றை எழுதிவிட்டுப் பின்னரெல்லாம் அவை திரும்பத் திரும்ப வருகின்றன என்பதைக் காட்ட ——— என்று நீளக் கோடு போட்டுக் கொள்க; அல்லது இடம் விட்டு விட்டு எழுதிக் கொள்க.

(218) ஒரே வார்த்தை இரண்டு முறை அடுக்கி வந்தால் அதைக் காட்ட அவ் வார்த்தையின் குறித்தொடர் இரண்டு முறை அடுத்தடுத்து எழுதிக் காட்டப்படும். உ - ம்.

அந்த அந்த,  அப்போதைக்கப்போது.

(219) ஆனால் இம்மாதிரி அடுத்தடுத்து எழுதிக் காட்ட முடியாத இடங்களில், முதல் வார்த்தையை முழுவதும் எழுதிக் கொண்டு, முதல் வார்த்தையின் கடைசிக் கோட்டினூடே இரு சிறு கோடுகள்* போட்டுக் காட்டலாம். உ - ம்.

 பெருகப் பெருக, மேலும் மேலும்,

 கும்பல் கும்பலாக,  போகப் போக,

நேர் நேராக,  சாரி சாரியாக.

(220) லாப நஷ்டம், நல்லது கெட்டது என்பன போல ஒரு சொல்லும் அதை அடுத்து அதன் எதிர்ச் சொல்லும் சேர்ந்து வருமிடங்களில் முதல் சொல் முழுவதையும் எழுதிக்கொண்டு அதன் கடைசிக் கோட்டினூடே பின்னே வரும் சொல்லின் முதல் கோட்டை வெட்டி எழுதுக. உ-ம்.

லாப நஷ்டம், நல்லது கெட்டது,

 ஏழை பணக்காரன், இன்ப துன்பம்,

உயர்ந்தவன் தாழ்ந்தவன், நன்மை தீமை,

மேடு பள்ளம்,  வாழ்வு தாழ்வு.

(221) ஜனங்கள் கரகோஷம் செய்வதை என்றும், காதில் சரியாக விழாத இடங்களைக் காட்ட என்றும் எழுதிக் கொள்க.

எழுதிப் பழகும் முறை. (222) தமிழ்ச் சொற்பொழிவுகளைச் சுருக் கெழுத்தில் எடுத்து மறுபடியும் அவற்றை அப்படியே வார்த்தைகள் பிறழாது வரிவடிவத்தில் எழுத விரும்புவோர் இந்தப் புத்தகத்தினுள்ளே கொடுத் திருக்கும் விதி ஒவ்வொன்றையும் படித்துப் புரிந்துகொண்டு, மாதிரிப் பயிற்சிகளையும் அடிக்கடி தினமும் குறிப்பிட்ட நேரத்தில் எழுதிப் பழக்கம் செய்து வரவேண்டும். தனிக்குறிச் சொற்கள், சுருக்கம் போன்றவைகளை நன்ருகப் பலமுறை எழுதி ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல வழுவழுப்பான ரூல் போட்ட வெள்ளைத் தாளில் ஆரம்ப காலத்தில் கூர்மை யான பென்சிலைக்கொண்டு எழுதிப் பழக வேண்டும். பின்னர் நல்ல பேனு விஞல் எழுதிப் பழகலாம். காலைச் சாப்பாட்டிற்கு முன்னதாக ஒரு மணி நேரம் சுருக்கெழுத்துக் கலையில் பயிற்சி பெறுவது, மாலையில் இரண்டு மணி நேரம் பழக்கம் செய்வதைவிட உயர்ந்தது. ஆரம்ப காலங்களில் நிதானமாக எழுதிப் பழக வேண்டும். நேர்கோடுகள், வளைவுகோடுகள் ஆகியவற்றைத் தனித்தனியாக ஒரே அளவோடு நிறுத்திச் சரியாக எழுதிப் பழக வேண்டும்.

'மார்க்' பண்ணுவதற்கும் 'ஸ்பீட்' வாசிப்பதற்கும் கூடத் தெரிந்துகொள்ள வேண்டும். நிமிடத்துக்கு 20 வார்த்தைகள் என்ருல் அதை ஒவ்வொரு கால் நிமிடத்திற்கும் அதாவது 15 விஞடிகளுக்கு 5 வார்த்தைகள் வீதம் 'மார்க்' செய்து, ஒவ்வொரு கால் நிமிடத்திலும் இந்த ஐந்து வார்த்தைகளைப் படிக்கச் சொல்லி எழுதவேண்டும். பிறகு அதைப் படித்தும் காட்ட வேண்டும். அப்படியே நிமிடத்திற்கு 24 வார்த்தைகள் என்ருல் ஒவ்வொரு கால் நிமிடத்திற்கும் 6 வார்த்தைகள் வீதம் மார்க் செய்து படிக்கச் சொல்ல

வேண்டும். இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக வார்த்தைகளைக் கூட்டி வேகத்தை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆரம்ப காலங்களில் 'ஸ்பீட்' எழுதுவதற்காக மார்க் செய்த பத்திகளைப் பார்த்தே முதலில் இரண்டொரு முறை சுருக்கெழுத்தில் எழுதிப் பழகிவிட்டு, அதையே ஸ்பீட் எழுதினால் வேகத்தை அதிகப்படுத்திக்கொள்ள மிகவும் உதவியாக இருக்கும். போகப் போகப் பழக்கமில்லாத பத்திகளையும் எழுதக்கூடிய ஆற்றல் வரும்.

ஒரு கூட்டத்திற்குப் போவதற்கு முன் அது பற்றிய முழு விவரங்களையும் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். எழுதும்போதே பேசுவோரின் கருத்தை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். சொற்பொழிவாளர்களில் சிலர் வடமொழியை அதிகமாகக் கலந்து பேசுவார்கள். சிலர் அளவாகப் பேசுவார்கள். சிலர் வடமொழியே கலக்காமல் பேசுவார்கள். அந்த மூவகை யினருடைய கொள்கைகளைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களுடைய பேச்சை அப்படியே சுருக்கெழுத்தில் எடுத்து வரிவடிவத்தில் கொடுப்பதுதான் சுருக்கெழுத்தாளர்களுடைய கடமை. 'வணக்கம், முகவரி, ஆண்டு' என்றே சிலர் பேசுவர். 'நமஸ்காரம், விலாசம், வருஷம்' என்று சிலர் பேசுவர். சுருக்கெழுத்தாளர்களுக்கு இந்த இரண்டிலும் ஏதேனும் ஒரு கொள்கையில் விருப்பம் இருக்கலாம். ஆனால் அந்தக் கொள்கையைப் பிறருடைய பேச்சைச் சுருக்கெழுத்தில் எடுக்கும்போது மேற்கொள்ளக் கூடாது. சொல்லுகிறவர் 'ஜனவரி' என்றால் அப்படியே எழுதவேண்டும். 'சனவரி' என்றாலும் அப்படியேதான் வரிவடிவத்தில் எழுதித் தரவேண்டும்.

ஆரம்ப காலத்தில் எழுதும் நோட்டுப் புத்தகத்தின் தாளைப் புரட்டும் போது சில சமயங்களில் சங்கடம் ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்கு அந்தத் தாளின் மேல்பகுதியில் எழுதிக்கொண்டிருக்கும்போதே, இடது கை அந்தத் தாளின் இடது கோடிக்குப் போய்விடப் பழகவேண்டும். நடுப் பகுதியில் எழுத வரும்போது இடது கைக் கட்டைவிரலினால் அந்தத் தாளின் இடது கோடி நுனியைக் கொஞ்சம் புரட்டி, அதை இடது கை ஆள்காட்டி விரலினாலும், கட்டை விரலினாலும் சேர்த்துப் பிடித்துக் கொண்டுவிட வேண்டும். கீழ்ப் பகுதியில் எழுத வரும்போது கொஞ்சம் கொஞ்சமாக இடது கையினால் பிடித்திருக்கும் அந்தத் தாளின் நுனியை மேலே உயர்த்தி சரியான சமயம் வரும்போது, அந்தத் தாளைப் புரட்டினால் போதும்; தாள் தானாகவே புரண்டுவிடும்: எவ்விதத் தடங்கலுமின்றி அடுத்த பக்கத்தில் எழுத ஆரம்பிக்கலாம்.

இது காரணமாகத்தான் எவ்வித உருவத்தில் அமைந்த நோட்டுப் புத்தகமாக இருந்தாலும் சரி, முதலில் ஒரு பக்கமாகவே கடைசிவரையில் எழுதிக்கொண்டு போகவேண்டும். பின்னர் நோட்டுப் புத்தகத்தைத் தலை கீழாகத் திருப்பிக்கொண்டு, எழுதாத பக்கத்தில் முன்போலவே தொடர்ந்து எழுதி வரவேண்டும்.

எழுதும்பொழுது குறித்தொடர்களின் நிலை தப்பிப் போகாமல் எழுதிப் பழக்கம் செய்து கொள்ளவேண்டும். வாக்கியத்தினுடைய முடிவை எப்பொழுதும் காட்ட வேண்டும்.

தினமும் எழுதி எழுதி, எழுதியவற்றைத் திருப்பிப் படித்துக்கொண்டும், சுருக்கெழுத்தில் எழுதியவற்றை வரிவடிவத்தில் எழுதிக்கொண்டும் போனால் நாளடைவில் வேகம் தானே அதிகரிக்கும். எந்த வேகத்தில் எழுதினாலும், எழுதியவற்றைப் பிழையின்றி வரிவடிவத்தில் எழுதக் கற்றுக் கொள்வது தான் முக்கியம்.

பயிற்சி - 51

நீங்களே படித்துப் பார்க்க





பயிற்சி - 52

நீங்களே படித்துப் பார்க்க



பயிற்சி - 53

நீங்களே படித்துப் பார்க்க





பாடச் சுருக்கம்

1. எண்கள் ஒன்றிலிருந்து பத்துவரை சுருக்கெழுத்தில் எழுதப்படும். பிறகு அராபிக் எழுத்திலேயே எழுதப்படும்.

2. நூறும் அதற்கு மேற்பட்ட பேரெண்களும் பலவாக வரும்போது அவற்றைக் குறிக்கத் தனிச் சுருக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

3. அடுத்தடுத்து வரக்கூடிய வார்த்தைகள் இரண்டு முறை எழுதப் படும் அல்லது ஒரு முறை முழுவதும் எழுதிக்கொண்டு அதன் கடைசிக் கோட்டின் குறுக்கே இரு சிறு கோடுகள் போடப்படும்.

4. திரும்பத் திரும்ப வரும் தொடர் வார்த்தைகள் இடம் விட்டோ, நீளக் கோட்டைப் போட்டோ, காட்டப்படும்.

5. ஒரு வார்த்தையும் அதன் எதிர்ப் பொருள் வார்த்தையும் அடுத்தடுத்து வந்தால் முதல் வார்த்தையை முழுவதும் எழுதிக்கொண்டு அதன் கடைசிக் கோட்டினூடே பின்னே வரும் வார்த்தையின் முதல் கோடு வெட்டி எழுதப்படும்.

6. தினமும் விடாமல் குறிப்பிட்ட நேரத்தில் சுருக்கெழுத்தை எழுதி எழுதிப் படிக்கவேண்டும்.

7. சொற்பொழிவுகளை எழுதப் போகும் முன்பே அதுபற்றிய முழு விவரங்களையும் தெரிந்துகொள்வது நல்லது. எழுதும்போது பேசுவோரின் கருத்தைப் புரிந்துகொண்டு எழுதுவது முக்கியம்.

8. வாக்கியத்தினுடைய முடிவை எப்பொழுதும் காட்டவேண்டும். எழுதும்பொழுதே குறித்தொடரைச் சரியான நிலையில் எழுதிப் பழக வேண்டும்.

[விதிகள் : 210 - 222]

அத்தியாயம் 21

வேறுபாட்டுக் குறிகள்

வேறுபாட்டுக் குறிகள். (223) பொதுவாக எங்கே ஒரு குறித்தொடர் இரண்டு வார்த்தைகளை ஒரே நிலையில் குறிக்கிறதோ அங்கெல்லாம் ஒன்றினின்றும் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவதற்காக உயிர்க்குறிகள் முக்கியமாகப் போடப்படும். அல்லது அவை இரண்டுக்கும் மெய்க்குறிகள் வெவ்வேறு விதமாக எழுதியும் காட்டப்படும். கீழேவரும் வார்த்தைகளைக் கவனிக்க.

முக்கியமான உயிர்க் குறிகள்



மெய்க்குறிகள் வேறுபாடு

செய்வோம்,	செய்யவும்.
இராது,	இருக்காது.
சரித்திரம்,	சீர்திருத்தம்.
அடித்தல்,	அடித்தால்.
விட்டார்கள்,	விட்டீர்கள்.
எப்படியேனும்,	எப்படியாயினும்.
அரசாங்கம்,	அரங்கம்.
பொறுமை,	பொருமை.
விட்டால்,	விடில்.
பற்பல,	பிரபல.
நிலப்பிரபு,	நிலப்பரப்பு.
பாதிக்கப்படுவது,	பாதுகாக்கப்படுவது.
பிரசாரம்,	பிரசுரம்.
பார்த்தார்,	பார்த்தீர்.
அவள்,	அவைகள்.
கேட்கிறவள்,	கேட்கிறவைகள்.

(224) ஒரு வார்த்தைக்கும், அதன் எதிர்ப் பொருள் வார்த்தைக்கும் குறித்தொடரில் வேறுபாடு இருக்க வேண்டியது மிக அவசியம். இந்த வேறுபாடு ஒரு வார்த்தையின் எதிர்மறையைக் குறிக்க 'அ' உயிர் வருமிடங்களில் 'அ' ஆரம்ப உயிர்க்குறி விடாமல் சேர்த்து எழுதப்படும். அல்லது மெய்க்குறிகள் வெவ்வேறு விதமாக எழுதியும் காட்டப்படும். கீழே வரும் வார்த்தைகளைக் கவனிக்க.

ஆரம்ப உயிர்க்குறி சேர்த்தல்

தர்மம்,	அதர்மம்.
நீதி,	அநீதி.



தைரியம்,
காலம்,
சிரத்தை,
கௌரவம்,
நித்தியம்,
சாத்தியம்,
சத்தியம்,



அதைரியம்.
அகாலம்.
அசிரத்தை.
அகௌரவம்.
அநித்தியம்.
அசாத்தியம்.
அசத்தியம்.

மெய்க்குறிகள் வேறுபாடு



வேண்டும்,
இருந்தால்,
கேட்டிருந்தால்,
பட்டது,
கேட்கத்தக்கது,
கேட்காது,
போட்டுவிட்டால்,
மானம்,



வேண்டாம்.
(ஆ)திருந்தால்,
கேட்காதிருந்தால்.
படாது.
கேட்கத்தகாதது,
கேட்கத்தகாது.
போடாவிட்டால்.
அவமானம்.

பன்மை விகுதியாகிய 'கள்' (225) பன்மை விகுதியாகிய 'கள்' என்பது (1) —— கல் என்பதை எழுதியும், (2) —⊃ —⊃ கள் என்பதை எழுதியும், (3) 'ள்' பெரிய கொக்கியைக் கடைசியில் எழுதியும், (4) கடைசியில் சிறு கோட்டை எழுதியும் காட்டப்படும். வாகாக எழுதுவதே முக்கியமாகையால் இவற்றில் எதை வேண்டுமானாலும் வாகுக்கேற்ப எழுதலாம்; என்றாலும் எது எதை எங்கெங்கே எழுதுவது வசதியாக இருக்கும் என்பதைக் கீழே காண்க.

(226) பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு முன் மெல்லினம் 'ங்' வராத வார்த்தைகள் எல்லாவற்றுக்கும் கல் என்பதே பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு எழுதப்படும். (விதி - 131). உ - ம்.



(227) பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு முன் மெல்லினம் 'ங்' வந்து அதை நடுவில் பெரிய சுழி கொண்டு காட்ட வாகுள்ள இடங்களிலும், 'ள்' கொக்கியைக் கொண்டு முடிகிற வார்த்தைகள் வரும் இடங்களிலும் கள் எழுதப்படும். உ - ம்.



(228) பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு முன் மெல்லினம் 'ங்' வராத இடங்களிலும் வாகாக எழுதுவதை உத்தேசித்து, ச்ச, ஜ, ர/ற (கீழ்),

வலது வாட்டம் - தர், தல், ஷர், ஷல், வர், வல் ஆகியவற்றுக்குப் பின்னும் 'கள்' எழுதப்படும். உ - ம்.



ஆராய்ச்சிகள், நாவல்கள்,
ருஜுக்கள், கிழவர்கள்,
கொடுத்தீர்கள், புருஷர்கள்,
அறைகூவல்கள், சொல்வார்கள்,

'ள்' கொக்கி (229) பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு முன் மெல்லினம் 'ங்' வந்து அதை நடுவில் பெரிய சுழி கொண்டு காட்ட வாகு இல்லாத இடங்களில் பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு 'ள்/ழ்' கொக்கி கடைசியில் எழுதப்படும். (விதி - 173). உ - ம்.



வாசங்கள், அப்பியாசங்கள்,
பாசங்கள், அட்டகாசங்கள்,
வடிவங்கள், படிவங்கள்,
கஷ்டங்கள், நஷ்டங்கள்.

(230) தனிக்குறிச்சொற்கள், சுருக்கம் ஆகியவற்றோடு பன்மை விகுதியாகிய 'கள்' சேரும்போது, 'கள்'ளுக்கு முன் மெல்லினம் 'ங்' வந்தாலும், கடைசியில் ச்ச, க்ஷ (கீழ்) வந்தாலும் 'ள்/ழ்' கொக்கியே எழுதப்படும். (விதி - 173). உ - ம்.



அபிப்பிராயங்கள், அபிப்பிராயபேதங்கள்,
சந்தர்ப்பங்கள், காரியங்கள்,
அரசாங்கங்கள், அதிகாரங்கள்,
ஜாதிவித்தியாச உணர்ச்சிகள், கட்சிப்பிரதிகட்சிகள்,

(231) கடைக்கொக்கியின்றி இரட்டிக்கப்பட்ட எல்லா வார்த்தைகளுக்கும் பன்மை விகுதியாகிய 'கள்' என்பதைக் குறிக்க 'ள்/ழ்' கொக்கியே எழுதப்படும். (விதி - 205). உ - ம்.



சொல்லிவிட்டார்கள், பாடமாட்டார்கள்,
தாசில்தார்கள், அங்கத்தினர்கள்.

(232) இடது வாட்டம் வர், ல (கீழ்) க்குப் பின்பு 'கள்' வரும் இடங்களில் பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்கு 'ள்' கொக்கியே எழுதப்படும். (விதி - 173). உ - ம்.

 நாட்டவர்கள்,  பாடுவார்கள்,

 தேடுவார்கள், அவர்கள்,

பர்ணசாலைகள்,  பூம்பொழில்கள்.

'கள்' சிறு கோடு. (233) கடைசியில் நீண்ட சுழி, ணம், னும் சுழி, ன் கொக்கி இவற்றைக் கொண்டு முடிகிற வார்த்தைகளுக்கு வாகாக எழுதுவது கருதி பன்மை விகுதியாகிய 'கள்' என்பதற்குச் சிறு கோடு வெளியே அவற்றை ஒட்டினாற்போல எழுதப்படும் (விதிகள் - 164, 206). உ - ம்.

 கம்யூனிஸ்டுகள்,  இருந்தார்கள்,

 அந்தஸ்துகள்,  தந்தார்கள்,

 பலன்கள்,  ஸ்தாபித்தார்கள்,

ஸ்வப்னங்கள்,  சமூகத்தார்கள்.

(234) பன்மை விகுதியாகிய 'கள்' என்பதை வாகாகவும், படிப்பதற்குத் தெளிவாகவும் எழுதுவதற்காக மேலே சில வரையறைகள் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், இவற்றில் அடங்காத சொற்கள் வந்தால் வாகுக்கேற்ப எழுதுக.

பயிற்சி - 54

சுருக்கெழுத்தில் எழுதுக

நீங்கள் எல்லோரும் எங்கள் ஊர்களுக்கு எப்போது வரப்போகிறீர்கள் ? பல தடவைகளாக நாங்கள் உங்களைக் கூப்பிட்டும் நீங்கள் அனைவரும் ஒருமுகமாகத் தற்போது வருவதற்கு வசதிகள் ஒன்றும் இல்லையென அலட்சியமாகச் சொல்லிவிட்டீர்கள். நதிகளால் சூழப்பட்ட எங்கள் ஜில்லாவிலுள்ள கிராமங்களில் பல பூம்பொழில்கள் இருக்கின்றன. எங்கே

பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று இருக்கும் காடு கழனிகளே பார்ப்போர்களின் கண்களில் தென்படும். காவிரி ஆற்றின் கரை ஓரங்களில் இருக்கும் புல் தரைகளில் மாடுகள் மேய்வதும், ஆடுகள் அவற்றின் அருகிலே கூட்டம் கூட்டமாகத் துள்ளித் துள்ளிக் குதிப்பதும் கண் கொள்ளாத காட்சியாகும். வரிசை வரிசையாகப் பட்சிகள் மரங்களின் கிளைகளிலே உட்கார்ந்து கொண்டு இசை பாடும். வாய்க்கால்களின் வழியே சலசலவென்று ஓடும் ஆற்று நீரிலே கெண்டை மீன்கள் துள்ளித் துள்ளிப் பாயும். அவற்றின் எழில் வருணிக்க இயலாதது.

காவிரிக் கரையின் இரு மருங்கிலும் அமைந்து இருக்கும் படுகைகளில் ஏற்றம் இறைக்கும் விவசாயிகளின் தெம்மாங்குப் பாட்டுகள், மாஞ்சோலைகளில் இருந்து வரும் குயில்களின் மெல்லிசைச் சுருதியோடு கலந்து வாசம் மிக்க பூங்காற்றிலே மெல்ல மெல்ல மிதந்து வரும். அவற்றைக் கேட்போர்களின் செவிகள் மட்டும் இன்புறா; உள்ளங்களும் கூட அதனைச் சுவைத்து இன்பப் பூரிப்பு அடையும்.

உழைக்கின்ற மாதர்கள் நாற்று நடுகையிலே, தங்கள் புருஷர்களுக்குக் கஞ்சி எடுத்துக் கொண்டு கை வீசி நடக்கையிலே பாடுகின்ற நாடோடிப் பாடல்கள் பெரிய பெரிய பௌராணிகர்கள் சொல்கின்ற உண்மைகளுக்கு எல்லாம் உரை போல விளங்கும். பொறுமையாகப் பொறுமையின்றி உழைக்கின்ற அந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்தாலேயே பசி தீரும்.

நீங்கள் சென்ற தடவை பம்பாய்க்குப் போக ஐந்நூறு ரூபாய் செலவழிக்கவில்லையா? அமெரிக்கா போக வேண்டுமென்றால் நானூறு டாலர்களுக்கு மேல் செலவாகாதா? எங்கள் ஊர்களுக்கு வர அதில் ஐந்து சதவிகிதம் கூட ஆகாது. ஆலயங்களும், அற நிலையங்களும் பரவிக் கிடக்கின்ற, பாடல் பெற்ற திவ்யக்ஷேத்திரங்கள் நிரம்பிய, எங்கள் சோழ நாட்டுக்கு என்ன அலுவல்கள் இருந்த போதிலும் வர இயலாது என்று மட்டும் சொல்லாதீர்கள். வருகிறோம் என்று மட்டும் சம்மதம் கொடுங்கள் போதும். இதர ஏற்பாடுகளை நாங்கள் செய்கிறோம்.

குறி விளக்கம்





பாடச் சுருக்கம்

1. பொதுவாக எங்கே ஒரு குறித்தொடர் இரண்டு வார்த்தைகளை ஒரே நிலையில் குறிக்கிறதோ அங்கெல்லாம் ஒன்றினின்றும் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவதற்காக உயிர்க்குறிகள் போடப்படும். அல்லது அவை இரண்டுக்கும் மெய்க்குறிகள் வெவ்வேறுவிதமாக எழுதியும் காட்டப்படும்.

2. ஒரு வார்த்தைக்கும், அதன் எதிர்ப் பொருள் வார்த்தைக்கும் குறித் தொடரில் வேறுபாடு காட்டப்படும்.

3. பன்மை விகுதியாகிய, 'கள்' என்பது (1) கள் என்பதை எழுதியும் (2) கள் என்பதை எழுதியும், (3) 'ள்' பெரிய கொக்கியைக் கடைசியில் எழுதியும், (4) சிறு கோட்டைக் கடைசியில் எழுதியும் காட்டப்படும்.

[விதிகள் : 223 - 234]

அத்தியாயம் 22

பிரத்தியேகச் சுருக்கங்கள்

(பகுதி - 1)

(235) மிக வேகமாக எழுதுவதற்குச் சுருக்கங்களே அதிகம் உதவுகின்றன. சாதாரணமாக அதிக நீளமாகவோ, எழுதுவதற்கு வாகாக இல்லாமல் விகாரமாகவோ போகின்ற வார்த்தைகளின் சுருக்கெழுத்து வடிவங்களை எல்லாம் அழகாகவும், குறித்தொடர் அதிக நீளமாகப் போகாமலும் சுருக்கி எழுதுவதால் வேகம் அதிகமாகும். ஆனால், பார்த்தவுடன் வார்த்தை தோன்றக் கூடிய வகையிலும், வேறு பொருளுடைய வார்த்தை தோன்றாத வகையிலும் சுருக்கி எழுதப்படும் குறித்தொடர் அமைய வேண்டும்.

(236) அத்தியாயம் 7-ல் கூறியுள்ளபடி, ஆரம்ப உயிர்க்குறிகளை விலக்கியோ, சேர்த்தோ, குறித்தொடரிலுள்ள கோடுகளில் வார்த்தைகளைக் கண்டு பிடிப்பதற்கு இன்றியமையாத கோடுகளை மாத்திரம் வைத்துக் கொண்டோ குறித்தொடர் எழுதப்படும். (விதிகள் - 77, 78, 79).

(237) இரண்டு வார்த்தைகளைச் சேர்க்கும்பொழுது முதல் வார்த்தையின் கடைசி மெய்க்குறியே, இரண்டாவது வார்த்தையின் ஆரம்ப மெய்க்குறியாக இருந்தால் இரண்டில் ஒன்று விலக்கி எழுதப்படும். உ - ம்.

அறிவு வளர்ச்சி,


பிரதான நோக்கம்,

கிராம மக்கள்.

(238) வார்த்தைகளின் நடுவில் வரும் 'ழ்' என்பதைச் சில இடங்களில் விலக்கிவிட்டு எழுதலாம்; என்றாலும் அக் குறித்தொடர் வேறு பொருளுடைய வார்த்தையைக் குறிக்காத இடங்களில்தான் அவ்வாறு விலக்கி எழுதப்படும். உ - ம்.

மகிழ்ச்சி,


மகிழ்ந்து.

(239) வார்த்தைகளின் நடுவில் வரும் 'ச/ஸ' சுழியை அடுத்து உடனே 'த' வந்தால் வாகுள்ள இடங்களில் 'த' வின் குறி விலக்கி எழுதப்படும். உ - ம்.

ஐ. நா. ஸ்தாபனம்.

மனஸ்தாபம்

மேற்கண்ட விதிகளுக்குட்பட்டு அமைக்கப்பட்டிருக்கும் சுருக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பலமுறை எழுதிப் பழகுக.

1

அங்கீகாரம்,	அங்கீகரிக்கவேண்டும்.
அடியிற்கண்டபடி,	அடியிற்கண்டவர்,
அடியிற்கண்டவாறு,	கீழ்க்கண்டவாறு,
பின்கண்டவாறு,	மேற்கண்டவாறு,
அத்தியாயம்,	அதிகக் கவனம்,
முக்கிய கவனம்,	அதிருஷ்டம்,
அதிருஷ்டவசமாக,	துரதிருஷ்டம்,
துரதிருஷ்டவசமாக,	அமைச்சர்,
நிதி அமைச்சர்,	முதல் அமைச்சர்,
அவரவர்,	அவரவர்க்குரிய,
அவற்றைத் தவிர,	அவற்றுள்,
அவற்றில்,	அழுத்தம் திருத்தமாக,
அறிக்கை,	இயற்கை,
இயற்கை எழில்,	இயற்கையாகவே,
அனுபவம்,	சுவானுபவம்,
ஆத்மானுபவம்,	ஆட்சேப சமாதானம்,
ஆதிபத்தியம்,	ஆரம்பப் பள்ளி,
ஆரம்பப் பாடசாலை,	பள்ளி ஆசிரியர்,
ஆனபடியால்,	ஆனபடியினால்,
எக்கச்சக்கம்,	எந்த அளவு.

ஏக மனதாய், ஏகோபித்து,

ஏற்றத்தாழ்வு, உரிமை உண்டு,

கடமை உண்டு, ஒட்டுமொத்தமாக,

பொறுப்பு உண்டு, ஐக்கிய நாட்டு ஸ்தாபனம்,

ஐ. நா. ஸ்தாபனம், நம்பிக்கை உண்டு,

2

கடைச்சங்க காலம், கடைச்சங்க நூல்,

கடைச்சங்கப் புலவர், கண்கொட்டாமல்,

கண்ணிமைப்பொழுதில், கண்ணும் கருத்தும்,

கல்வி அளிக்க, கல்வி வளர்ச்சி,

அறிவு வளர்ச்சி, கல்வி ஸ்தாபனங்கள்,

கலாசார ஸ்தாபனம், சுதந்திர ஸ்தாபனம்,

செய்தி ஸ்தாபனம், நிர்வாக ஸ்தாபனம்,

பல்வேறு ஸ்தாபனங்கள், கஷ்ட நஷ்டம்,

காரியதரிசி, காங்கிரசு,

காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் ஸ்தாபனம்,

அகில இந்திய, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி,

அகில இந்தியக் காங்கிரஸ் சபை, கிராம மக்கள்,

கொஞ்சநஞ்ச மல்ல. சட்ட அறிவு,

சத்தியாக்கிரகம், சமூக சீர்திருத்தவாதி,

சாதாரணம், அசாதாரணம்,

சுட்டிக்காட்டியுள்ளார், தடியடிப்பிரயோகம்,

துப்பாக்கிப் பிரயோகம், தத்துவம்,

தத்துவ ஞானம், அஞ்ஞானம்,

அனுபவ ஞானம், பர ஞானம்,

மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம்,

3

தவழ்ந்து, மகிழ்ந்து,

நிகழ்ச்சி, நெகிழ்ச்சி,

புகழ்ச்சி, மகிழ்ச்சி,

துவேஷம், நடையுடை பாவனைகள்,

நடுவாந்தரத்திலே, நம்பியிராமல்,

நம்பிக்கைத் துரோகம், நஷ்ட ஈடு,

நாணயச் செலாவணி, நியம கர்த்தா,

நியமம், நியமனம்,

கண்ணியமான, பிராணாயாமம்,

நீர்ப்பாசனம், பிரதான நோக்கம்,

புள்ளிவிவரங்கள், பூர்வாங்கம்,

பொருளாதார, போகிற போக்கில்,

மாற்றி அமைக்க, மனஸ்தாபம்,

மனஸ்தாபங்கள், விசேஷ ஊக்கம்,

விசேஷ கவனம், வேலையில்லாத் திண்டாட்டம்,

வேண்டுகோள், ஜனத்தொகை.

பயிற்சி - 55

சுருக்கெழுத்தில் எழுதுக

சென்னை ராஜ்ய அமைச்சர் ஒருவருடைய பிரசங்கத்தை வைத்துக் கொண்டு நேற்றைய செய்தித் தாளில் அடியிற்கண்டவாறு தலையங்கம் எழுதப்பட்டு இருக்கிறது. அதில் குறிப்பிட்டிருப்பதை இங்கே தருகிறோம்.

“கூட்டுறவுச் சங்கம் ஒரு பொது ஸ்தாபனம். அரசாங்கத்தார் அதை அங்கீகரித்து இருக்கிறார்கள். அவற்றை எந்த அளவுக்கு மக்கள் உபயோகப்படுத்திக் கொள்கிறார்களோ அந்த அளவுக்கு அவற்றினால் நல்ல அநுகூலம் அவர்களுக்குக் கிடைக்கும். அந்த நிர்வாக ஸ்தாபனம் திறமையாக நடக்க ஜனங்கள் விசேஷ ஊக்கம் காட்ட வேண்டும். அதன் நிர்வாகத்தில் மக்களுக்குப் பொறுப்புண்டு; உரிமையுண்டு; கடமையுண்டு. ஆனபடியால் அதில் ஊழல் அதிகமானால் அதன் தலைவர், காரியதரிசி போன்ற நிர்வாகிகளை மாற்றியமைக்க அதன் அங்கத்தினர்களுக்கு அதிகாரமும் உண்டு. ஆனபடியினால் மக்களது ஏகோபித்த அபிப்பிராயம் எதையும் தற்காலத்தில் அலட்சியம் செய்வதற்கு இல்லை. ஏகமனதாய் அவர்கள் ஒரு முடிவு செய்தால் அதை ஒட்டுமொத்தமாக யாவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். தனிப்பட்டோர் ஆதிக்கம் எதுவும் நடக்காது” என ஸ்ரீ ராமசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில் அபிப்பிராய பேதம் எதுவும் நமக்கு இல்லை. ஆனால் கிராமப்புறங்களில் கல்வி வளர்ச்சி மிகமிக அதிகம் இல்லாமையினால் சங்கங்களை எப்படி அமைத்துக் கொள்வது எனப் பலருக்குத் தெரிவதேயில்லை. ஆகையால் அறிவு வளர்ச்சிக்கு ஆரம்பப் பாடசாலைகளையே நம்பியிராமல் செய்தி ஸ்தாபனங்களின் மூலம் அறிவைப் பரப்ப வேண்டும். இயற்கையாகவே மக்களுக்குப் பகுத்தறிவு அதிகம். சன்மார்க்க சங்கம் இல்லாத ஊர்களே இருக்காது. கடைச் சங்க காலத்திலிருந்த நிலைமைக்கும் இன்றுள்ள நிலைமைக்கும் எத்தனையோ வித்தியாசம் இருக்கலாம். மெய்ஞ்ஞானம் பரவியிருந்த இந்த நாட்டிலே விஞ்ஞான அறிவு இப்பொழுது தான் பரவத் தொடங்கி இருக்கிறது. வாலிபர்கள் எங்கே பார்த்தாலும் சங்கங்களை அமைக்கிறார்கள். விவசாயச் சங்கமும், தொழிலாளர் சங்கமும் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகின்றன. பிரசாரத்தின் மூலம் இந்தக் கூட்டு வாழ்க்கை வளம் பெறச் செய்ய வேண்டும்.

அதைத் தவிர நாட்டிலே இன்னொரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது என்பதற்குப் புள்ளிவிவரங்கள்

இருக்கின்றன. அதிசீக்கிரத்தில் இதைப் போக்கவும் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும் அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கனவேயே சர்க்கார் இது சம்பந்தமாக எடுத்து இருக்கும் காரியங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அதை நாம் மறுக்க இல்லை. ஓராசிரியர் ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்துவதே இதற்காகத்தான். பொது ஸ்தாபனங்களை நடத்துவதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இருந்தாலும் பொது ஸ்தாபனங்கள் ஒன்றினால் தான் இதிலுள்ள சிக்கல்கள் பல நீங்க வசதி ஏற்படும். முதியோர் சங்கம் அமைத்துக் கொண்டும் பாடுபடலாம். எதற்கும் ஸ்ரீ ராமசாமி வெளியிட்டிருக்கும் வேண்டுகோளின்படி மனித வர்க்கம் மேன்மை அடையப் பலதரப்பட்ட துறைகளிலும் சங்கங்கள் ஏற்பட்டு மக்களது சக்தி ஒன்றுபட வழி வேண்டும் என்பதில் நமக்குள் ஆட்சேப சமாதானத்திற்கு இடம் இல்லை என்றே நம்புகிறோம்.

குறி விளக்கம்





பாடச் சுருக்கம்

1. சுருக்கம் அமைக்கும்பொழுது சுருக்கி எழுதப்படும் குறித்தொடர் பார்த்தவுடன் வார்த்தை தோன்றக்கூடிய வகையிலும் வேறு பொருளுடைய வார்த்தை தோன்ருத வகையிலும் இருக்கும்படி அமைய வேண்டும்.

2. ஆரம்ப உயிர்க்குறிகளை விலக்கியோ, சேர்த்தோ, குறித்தொடரிலுள்ள கோடுகளில் வார்த்தைகளைக் கண்டு பிடிப்பதற்கு இன்றியமையாத கோடுகளை மாத்திரம் வைத்துக்கொண்டோ, சுருக்கம் அமைக்கப் படும்.

3. இரண்டு வார்த்தைகளைச் சேர்க்கும்பொழுது முதல் வார்த்தையின் கடைசி மெய்க்குறியே, இரண்டாவது வார்த்தையின் ஆரம்ப மெய்க்குறியாக இருந்தால் இரண்டில் ஒன்று விலக்கி எழுதப் படும்.

4. வார்த்தைகளின் நடுவில் வரும் ‘ ழ் ’ என்பது சில இடங்களில் விலக்கி எழுதப்படும்.

5. வார்த்தைகளின் நடுவில் வரும் ‘ ச/ஸ ’ சுழியை அடுத்து உடனே ‘ த ’ வந்தால் வாகுள்ள இடங்களில் ‘ த ’ விலக்கி எழுதப்படும்.

[விதிகள் : 235 - 239]

அத்தியாயம் 23

பிரத்தியேகச் சுருக்கங்கள்
(பகுதி - 2)

(240) தமிழில் ஒரு வார்த்தையோடு முன்னே, பின்னே சில சொற்களோ விகுதிகளோ சேர்ந்து பல புது வார்த்தைகள் உண்டாகின்றன. உதாரணமாக 'அதிகாரம்' என்பதிலிருந்து, 'அதிகாரி, அதிகாரவர்க்கம், சர்வாதிகாரி, உதவி அதிகாரி, சுங்க அதிகாரி' என்பன போலப் பல வார்த்தைகள் உண்டாகின்றன. 'அதிகாரம்' என்பதன் குறித்தொடரைப் பிரதானமாக வைத்துக்கொண்டு மற்ற வார்த்தைகளையும் முடியும் அளவு சுருக்கி எழுதினால்தான், எழுதிய குறித்தொடரை எளிதில் படிக்க முடியும். உ - ம்.

அதிகாரம், அதிகார/ரி, அதிகார வர்க்கம்,

சர்வாதிகாரி, உதவி அதிகாரி, சுங்க அதிகாரி,

மேலேயுள்ளது போல் ஒரு வார்த்தையின் (தனிக்குறிச் சொற்கள், சுருக்கம் உள்பட) குறித்தொடரை, முன்னே, பின்னே அப்படியே வைத்துக் கொண்டு அதனை ஒட்டி வருகின்ற வார்த்தைகளுக்கும் குறித்தொடர் எழுதப்படும். பின்னே வரும் பயிற்சிகளைக் காண்க.

பயிற்சி - 56
கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

அங்கு, அங்கே,

அங்கேயே, அங்கோ,

அங்கும், அங்குத்தான்,

அங்கெல்லாம், அங்காகிலும்,

அங்குள்ள, அங்குமிங்கும்,

அங்ஙனம், ஆங்காங்கு.

எங்கு, எங்கிலும்,

எங்கே, எங்கேயோ,

எங்காகிலும், எங்காயினும்,

எங்கெல்லாம், எங்கேனும்,

எங்கெங்கு, எங்கெங்கேயோ,

பயிற்சி - 57

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

அடிக்கடி, அடிப்படை,
அடிப்படையாக, அடிப்படையான,
அடிப்படையில், அடியோடு,
அடுத்தபடி, அடுத்தபடியாக,
அடுத்தாற்போல, அடுத்தடுத்து,

அடைந்த/ து, அடைந்தபடியால்,
அடைந்தபடியினால், அடைந்துவிட்டோம்,
அடைந்துவிட்டால், அடைந்துவிட,
அடைந்துவிடில், அடைந்துவிடும்,
அடைந்தாலும், அடைந்திருந்தால்,

அடைய, அடையாதிருந்தால்,
அடையவேண்டும், அடையவேண்டாம்,
இடைவிடாது, இடைவிடாமல்,
இடைவிடாமற் போனால், இடையிடையே,

அதற்கு, அதற்கப்பால்,
அதற்கப்புறம், அதற்காக,
அதற்காகவும், அதற்காகிலும்,
அதற்கான, அதற்கெல்லாம்,
அதற்கேற்ப, அதற்கேற்றபடி,
அதற்கேற்றவாறு, அதற்குத்தக்கபடி.

பயிற்சி - 58

கீழ்க் கண்டவற்றை எழுதிப் படிக்க

அதற்கும், அதற்கு மாறாக,
அதற்குமேல், அதற்கு மேலாக,
அதற்குள், அதற்குள்ளாக,

அதிகார வர்க்கம், அதிகார வர்க்கத்தினர்,
அதிகாரம், எ/யதேச்சாதிகாரம்,
எழுத்ததிகாரம், சர்வாதிகாரம்,
சொல்லதிகாரம, அதிகாரிபேரில்,
அதிகாரி, அரசாங்க அதிகாரி,
உதவி அதிகாரி, உயர்தர அதிகாரி,
எ/யதேச்சாதிகாரி, சர்வாதிகாரி,
சர்க்கார் அதிகாரி, கிராம அதிகாரி,
துணை அதிகாரி, நிர்வாக அதிகாரி,
பிரதம நிர்வாக அதிகாரி, போலீஸ் அதிகாரி.

அதில், அதிலிருந்து,
அதிலே, அதிலுள்ள.

அத்துடன், அதனுடன்,
அதனுடைய, அதன்படி,
அதன்பிறகு, அதன்பேரில்,
அதன்மூலம், அதன்விளைவாக.

அதனல், அதனல்தான்,
அதனலும், அதனல் எல்லாம்,
அதனலே, அதனலேயே.

பயிற்சி - 59

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

அத்தகைய,	அத்தகையோர்,
அது,	அதல்ல,
அதாகிலும்,	அதாவது,
அதில்லை,	அதெப்படி,
அதெப்படி முடியும்,	அதெல்லாம்,
அது சம்பந்தமாக,	அதுதான்,
அதுபோல்,	அதுமாதிரி,
அதுவரை,	அதுவரையில்,
அதுவும்,	அதுவுமொரு,
அதுவே,	அதே சமயத்தில்,
அதே நேரத்தில்,	அதேபோல்,
அதே மாதிரி,	ஆதலால்.

அதைத்தவிர,	அதையாகிலும்,
அதையே,	அதையும்,
அதையொட்டி,	அதைச் செய்கையில்,
அதைச் செய்தாகிலும்,	அதைச் செய்யக் கூடாது,
அதைப் போன்ற,	அதைப் போன்றதொரு.

அந்தஸ்து,	சம அந்தஸ்து,
பிரஜா அந்தஸ்து,	ஜனநாயக அந்தஸ்து.

பயிற்சி - 60

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

அப்படி, அப்படித்தான்,
அப்படிப்பட்ட, அப்படியானல்,
அப்படியாயினும், அப்படியும்,
அப்படியேனும், அப்படிச் செய்தாகிலும்,
அப்படிச் செய்யக் கூடாது, அப்படிச் செய்ய வேண்டும்.

அப்பொழுது/போது, அப்பொழுதாவது,
அப்பொழுது தான், அப்பொழுதும்,
அப்பொழுதா, அப்பொழுதே,
அப்பொழுதோ, அப்பொழுதாகிலும்,
அப்பொழுதாயினும், அப்பொழுதேனும்,
அப்பொழுதெல்லாம், அப்பொழுதுள்ள,
அப்போதைய, அப்போதைக்கப்போது.

அபிப்பிராய, அபிப்பிராயம்,
ஏகோபித்த அபிப்பிராயம், சொந்த அபிப்பிராயம்,
தப்பு அபிப்பிராயம், தனிப்பட்ட அபிப்பிராயம்,
பொது ஜன அபிப்பிராயம், அபிப்பிராயங்கள்,
அபிப்பிராயப்படுகிறோம். அபிப்பிராயத்திற்கிசைந்து,
அபிப்பிராயத்தின்படி, அபிப்பிராயப்படுகிறார்கள்,
அபிப்பிராய பேதம், அபிப்பிராய பேதங்கள்,
அபிப்பிராய பேதத்தினல், அபிப்பிராய மாறுபாடுகள்.

பயிற்சி - 31

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

அரசியல், அரசியல் அனுபவம்,
அரசியல் அனுபவமிக்க, அரசியல் சீர்திருத்தம்,
அரசியல் சூத்திரம், அரசியல் துறையில்,
அரசியல் நிர்ணயசபை, அரசியல் லட்சியங்கள்,
அரசியல் வாழ்வில், அரசியலார்,

அரசு, அரசினர்,
குடியரசு, பேரரசு,
முடியரசு. வல்லரசு.

அறிக்கை, கூட்டு அறிக்கை,
சுற்றறிக்கை, நிர்வாக அறிக்கை,

அன்பு, அன்பார்ந்த,
அன்புடையீர், அன்புள்ள,
அன்பு கூர்ந்து, அன்பு மிக்க,

அனுபவம், அனுபவமிக்க,
அனுபவித்து, அனுபவசாத்தியம்,
அனுபவசாலி. அனுபவபூர்வமாக.

பயிற்சி - 62

கீழ்க் கண்டவற்றை எழுதிப் படிக்க

ஆலோசனை, சதியாலோசனை,

தீர்க்காலோசனை, தீர ஆலோசனை,

புனராலோசனை, மந்திராலோசனை.

விஷயாலோசனை, ஆலோசனை செய்ய வேண்டும்.

இரு/இருக்க, இருக்கத்தான்,

இருக்கலாம், இருக்கலாகாது,

இருக்கலாம் என்று, இருக்கவேண்டாம்,

இருக்க வேண்டும், இருக்காதிருந்தால்,

இருக்காது, இராது,

இருக்கிறார், இருக்கிறார்கள்.

இருக்கிறோம், இருக்கும்,

இருக்கும்பொழுது, இருக்குமானால்,

இருக்குமென்று, இருக்குமென்றால்,

இருக்கிறது/கின்றன, இருக்கமாட்டார்கள்,

இருக்கமாட்டார்களென்று, இருக்கமாட்டான்,

இருக்கமாட்டேன், இருக்கமாட்டோம்.

இருந்த/து, இருந்தார்,

இருந்தால், இருந்தாலும்,

இருந்திருந்தால், இருந்திருக்கிறது/கின்றன,

இருந்துகொண்டு, இருந்து வந்திருக்கிறது/கின்றன,

இருந்து வருகிறதாயினும், இருந்து வருகிறது,

இருந்து வருகிறதேனும், இருந்து வரும்.

பயிற்சி - 63

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

இருப்பதற்கு, இருப்பதாக,
இருப்பதால், இருப்பதில்,
இருப்பதனுல், இருப்பதே,
இருப்பதை, இருப்பினும்.

இறக்குமதியாளர், உழைப்பாளர்,
உற்பத்தியாளர், ஏற்றுமதியாளர்,
சாகுபடியாளர், வாக்காளர்.

உடன், உடன்பட்டு,
உடன்பட்டது, உடன்பட்டாலும்,
உடன்பட்டிருந்தால், உடன்படாதிருந்தால்,
உடன்படாது, உடன்படாமற்போனுல்,
உடன்படிக்கை, உடன்பாடு,
உடனடியாக, உடனே,
உடனேயே, உடனுக்குடன்.

உணர்ச்சி, அடிமை உணர்ச்சி,
அவசர உணர்ச்சி, கடமை உணர்ச்சி,
சுதந்தர உணர்ச்சி, நல்லுணர்ச்சி,
புத்துணர்ச்சி, பொறுப்பு உணர்ச்சி,
ஜாதிமத உணர்ச்சி, ஜாதி வித்தியாச உணர்ச்சி.

பயிற்சி - 64

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

--------எல்லா, --------எல்லாம்,

--- எல்லோரும், --- எல்லோராலும்,

---------பலர், ---------- பலராலும்,

- ----சிலராலும், பெரும்பாலோர்.

------ஏற்பட்ட/பட்டு, ------- ஏற்பட்டது,

------ ஏற்பட்டால், ---- ஏற்பட்டாலும்.

------ஏற்பட/படு/பாடு, ------ ஏற்படாது,

------ ஏற்படும், ----- ஏற்படுமென்று,

ஏற்படுமென, ----- ஏற்படும்படி,

----- ஏற்படுவது, ------ ஏற்பாடானது,

------ஏற்பாடே, ---- ஏற்பாடுகள்,

----- ஏற்பாடு செய்ய வேண்டும், ---- ஏற்பாடுதான்,

------ஏற்பாடும், ------- ஏற்பாடின்றி.

----- ஏற்படுத்த/தி/து, ------ ஏற்படுத்தலாம்,

------ ஏற்படுத்திக்கொள்ள வேண்டும், ---- ஏற்படுத்தினர்,

--- --ஏற்படுத்தினால், ஏற்படுத்துவதன் மூலம்,

------ஏற்படுத்துவது மட்டுமல்ல, --- ஏற்படுத்துவது.

பயிற்சி - 65

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

ஒரு,
ஒரு சமயத்தில்,
ஒரு நாளும்,
ஒருவகையில்,
ஒருவராக,
ஒருவருக்கு,
ஒருவருக்கொருவர்,
ஒருவரோடொருவர்,
ஒருவிதமாக,
ஒரேமாதிரியாக,

ஒரு சந்தர்ப்பத்தில்,
ஒருபொழுதும்,
ஒருநிமிஷம்,
ஒருவர்,
ஒருவருக்காக,
ஒருவரும்,
ஒருவரையொருவர்,
ஒருவாறு,
ஒருவிதத்தில்,
ஒருபடியாக.

ஒவ்வொரு/வோர்,
ஒவ்வொரு நாளும்,
ஒவ்வொருவரும்,
ஒவ்வொன்றாக,

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்,
ஒவ்வொரு நிமிஷமும்,
ஒவ்வொன்று/றாய்,
ஒவ்வொன்றிலும்.

ஒன்றி/று,
ஒன்றின்,
ஒன்றுபட/படு/பட்ட,
ஒன்றுண்டு,
ஒன்றுண்டெனில்,

ஒன்றில்,
ஒன்றினால்,
ஒன்றும்,
ஒன்றுண்டானால்,
ஒன்றுண்டெனினும்.

பயிற்சி - 66

கீழ்க் கண்டவற்றை எழுதிப் படிக்க

இரண்டொரு,
இரண்டில் ஒன்று,
ஒன்றின் மேல் ஒன்று,
ஒன்றையொன்று,
ஒன்றன்பின் ஒன்றாய்,

இரண்டொன்று,
ஒன்றின்கீழ் ஒன்று,
ஒன்றுக்கொன்று,
ஒன்றோடொன்று,
ஒன்றிரண்டு.

காரியதரிசி,
கூட்டுக் காரியதரிசி.
பொதுக் காரியதரிசி,

உதவிக் காரியதரிசி,
பிரதமக் காரியதரிசி,
சங்கக் காரியதரிசி.

காலம்,
உதயகாலம்,
சென்ற காலம்,
எதிர்காலம்,
பண்டைய காலம்,
பிற்காலம்,
காலஞ்சென்ற,
காலதாமதமின்றி,
காலவரையறை,
காலவித்தியாசம்,

ஆதிகாலம்,
சங்க காலம்,
தற்காலம்,
நெடுங்காலம்,
பழங்காலம்,
வருங்காலம்,
காலதாமதம்,
காலவரை,
காலாகாலத்தில்,
காலங்கடந்து.

சட்டம்,
சட்டங்கள்,
சட்டசபை.

அவசரச் சட்டம்,
சட்டங்களின்படி,
சட்டசபையினர்.

பயிற்சி - 67

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

சட்டசபை அங்கத்தினர், சட்டசபை மெம்பர்,
சட்டசபை உறுப்பினர், சட்ட சம்பந்தமாக,
சட்டதிட்டம், சட்டதிட்டங்களின்படி,
சட்டத்தால், சட்டத்தில்.

சிறந்த ஏற்பாடு, சிறந்ததொரு,
சிறந்த வகையில், சிறந்த முறையில்,
தலை சிறந்த, மிகச் சிறந்த.

செய்/செய்ய, செய்கிறதாக,
செய்கிறது, செய்கிறோம்,
செய்கிறார்கள், செய்தால்,
செய்தாலும், செய்தேன்,
செய்வது, செய்வதும்,
செய்வதனால், செய்வதால்,
செய்வதில், செய்வதில்லை,
செய்வது என்று, செய்வதற்கு,
செய்வதானது, செய்வதாக.

செய்யமாட்டார்கள், செய்யலாம்,
செய்யவேண்டும், செய்யவேண்டுமென்று,
செய்ய வேண்டாம், செய்யாதே,
செய்யாது, செய்யவும்,
செய்யும், செய்வோம்.

பயிற்சி - 68

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

செய்த/ து, செய்திருக்கிறார்கள்,

செய்திருக்கவேண்டும், செய்திருக்கவேண்டாம்,

செய்திருப்பது, செய்திருப்பதும்,

செய்திருப்பதால், செய்திருப்பதில்,

செய்திருப்பதனால், செய்திருப்பதாக,

செய்து வந்தால், செய்து வருகிறார்கள்,

செய்து விடுகிறார்கள், செய்து விடுகிறோம் என்று.

தத்துவம், அரசியல் தத்துவம்,

ஆத்ம தத்துவம், சமய தத்துவம்,

தலைமுறை தத்துவம், பிரதிநிதித்துவம்,

பொருளாதார தத்துவம், மனோ தத்துவம்,

முதலாளித்துவம், விஞ்ஞான தத்துவம்.

தேச, தேசம்,

தேசங்கள், தேசத்தார்,

தேசத்தில், தேசபக்தி,

தேசபக்தன், தேசமக்கள்,

தேசமெங்கிலும், தேசவுடைமை,

தேசவுடைமையாக்க வேண்டும், தேசாபிமானி,

உபதேர்தல்,

தேர்தல், பொதுத்தேர்தல்.

பயிற்சி - 69

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

தொழில், தொழில்கள்,
தொழிலதிபர்கள், தொழில் கோர்ட்டு,
தொழில் தகராறு, தொழில் துறையில்,
தொழில் வளர்ச்சி, தொழிற்சங்கம்,
தொழிற்சங்கக் காரியதரிசி, தொழிற்சங்கப் பிரதிநிதி,
தொழிற்சாலை, தொழிலாளர்,
தொழிலாளி, தொழிலாளி வர்க்கத்தினர்.

குடிசைத்தொழில், கைத்தொழில்,
கைத்தொழில் போர்டு, கைத்தொழிற்சாலை.

நம்பிக்கை, அதிக நம்பிக்கை,
அவ நம்பிக்கை, நன்னம்பிக்கை,
திட நம்பிக்கை, புது நம்பிக்கை,
முழு நம்பிக்கை, குருட்டு நம்பிக்கை.

நாள், நாள்தோறும்,
நாள் பூராவும், நாளடைவில்,
நாளாவட்டத்தில், நாளுக்கு நாள்,
நாளது மாதம், நாளது வரையில்.

நியாய/மாய், நியாயப்படி,
நியாய புத்தியுள்ள, நியாய விரோதமாக.

பயிற்சி - 70

கீழ்க் கண்டவற்றை எழுதிப் படிக்க

நியாய விரோதமான, நியாயஸ்தலம்,

நியாயம், நியாயமானதாய்,

நியாயமானது, நியாயமானதும்.

நியாயமானதென்று, நியாயமானதை,

நியாயமானபடி, நியாயமானவை,

நியாயமுள்ள, நியாயமுள்ள இடத்தில்,

நியாயாதிபதி, நீதிபதி.

நிர்வாக/கி, நிர்வாகங்கள்,

நிர்வாக ஊழல், நிர்வாக சபையில்,

நிர்வாகச் சீர்திருத்தம், நிர்வாகத் திறமை,

நிர்வாகத் துறையில், நிர்வாகம்,

ஸ்தல நிர்வாகம், நிர்வாக முறையில்,

நிர்வாக இயந்திரம், நிர்வாக சாதனம்.

பயன், நல்ல பயன்,

நற்பயன், பயனுள்ள வகையில்.

பொது, பொதுவுடைமை,

பொதுக்கூட்டம், பொதுச் சுகாதாரம்,

பொது நலன், பொது நன்மை,

பொதுப்படையாக, பொதுப்படையான,

பொது மக்கள், பொது விவாதம்,

பொதுவாக, பொதுவான.

பயிற்சி - 71

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

பொதுஜனங்கள், பொதுஜன அமைதி,

பொதுஜன கவனம், பொதுஜன அபிப்பிராயம்.

வருஷம், வருஷத்தில்,

சென்ற வருஷத்தில், வருஷத்திற்கு வருஷம்

வருஷாவருஷம், வருஷந்தோறும்,

வருஷத்திற்கு, வருஷாந்திரம்.

வரை, வரையில்,

கூடிய வரையில், கடைசி வரையில்,

வரையிலும், வரைக்கும்,

கூடிய வரைக்கும், கூடிய வரையிலும்

வை/வைத்த/வைத்து, வைக்க வேண்டும்,

வைக்க வேண்டாம், வைக்காதிருந்தால்,

வைக்காமற்போனால், வைக்கிறார்கள்,

வைக்கிறோம், வைக்கும்பொழுது,

வைத்திருக்கும்பொழுது, வைத்திருந்தால்,

வைத்திருப்பதாக, வைத்திருப்பதால்,

வைத்துக் கொண்டு, வைத்துக் கொண்டாலும்,

வைத்துக்கொள்ள வேண்டும். வைத்துக் கொள்ளும் பொழுது.

பயிற்சி - 72
சுருக்கெழுத்தில் எழுதுக

மொத்த ஜனத்தொகையை எடுத்துப் பார்த்தால், அநாதைக் குழந்தைகளின் தொகை நாளுக்குநாள் பெருகி வருகின்றது எனத் தெரிந்து கொள்ளலாம். சமூகத்தில் இப்படிப்பட்டவர்களுடைய எண்ணிக்கை அதிகப்படுவது தேசப் பொது நலனுக்கு எந்தக் காலத்திலும் உகந்தது அல்ல. வாழ்க்கைத் துறையில் அநாதைச் சிறுவர்கள் மற்றவர்களைப் போலச் சம அந்தஸ்துப் பெற்று, வாழ வழிவகை இருக்க வேண்டும்.

நாட்டில் வெகு வேகமாகப் பரவி வரும் வேலையில்லாத் திண்டாட்டம் அநாதைக் குழந்தைகளின் எண்ணிக்கைப் பெருக்குக்கு ஒரு காரணமாக இருக்கலாமென்று வைத்துக் கொண்டாலும், ஆதி காலத்தில் இருந்த சமுதாயக் கட்டுப்பாடுகள் உடைத்தெறியப்படுவதும், நெடுங்காலமாக இருந்துவரும் நம் பழக்கவழக்கங்கள் மாறுபாடு அடைவதும் முக்கியமான காரணமாகும் எனப் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அநாதைக் குழந்தைகளின் பிற்கால வாழ்க்கையைத் தேசத்தலைவர்கள் கருத்தில் வைத்துக் கொண்டு தற்காலத்தில் ஆங்காங்கே பல அநாதை விடுதிகளை ஏற்படுத்தி வருவதும் வரவேற்கத் தக்கது. மேனாடுகளில் இம்மாதிரியான அநாதை ஆசிரமங்கள் நிறைய உள்ளன. அநாதைக் குழந்தைகளுக்கு எல்லாம் அவர்கள் அங்கே உணவு அளிப்பதோடு மட்டும் நின்றுவிட இல்லை. அவர்களுக்குக் கல்வி கற்பித்து, வருங் காலத்தில் தங்களுடைய ஜீவனத்தைத் தாங்களே பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் கைத்தொழில்கள் பலவும் அவர்களுக்கு அங்கே கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

தேசத்தில் குடிசைத்தொழில் அதிகம் பெருகப் பெருகத்தான் ராஜ்யம் பூராவும் பரவிக் கிடக்கின்ற மக்களுக்கு எல்லாம் பிழைப்பு ஏற்படுமென அகில இந்தியக் கைத்தொழில் போர்டு சிபார்சு செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. இதைத் தொழிலதிபர்கள் கவனிக்கவேண்டும். இது வெறும் குருட்டு நம்பிக்கை அல்ல. அனுபவ சாத்தியமற்ற யோசனையும் அல்ல. அவர்களுடைய அபிப்பிராயத்திற்கிசைந்து இந்தக் கொள்கையில் அதிக நம்பிக்கை வைத்து நாம் பாடுபட்டால் சீரான முன்னேற்றம் உடனடியாக ஏற்படும் என்பதே எங்களது ஏகோபித்த அபிப்பிராயம். இதில் யாரும் தப்பு அபிப்பிராயம் கொள்ள இடமே இல்லை. இந்தப் பிரச்சினையை அதிகார வர்க்கம் அணுகும் முறையே மக்களது உள்ளத்தில் புது நம்பிக்கை

அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். செல்வமோ, வறுமையோ நம்மிடம் இருப்பதை நேர்மையாக நாம் விநியோகிக்க வேண்டும். வறுமையைப் பங்கிட்டுக் கொண்டால் அதன் கொடுமை குறையும். மக்களின் உடைந்த இதயங்கள் ஒன்றுபட்டால் செல்வத்தைப் பெருக்க நாம் ஒற்றுமை யாக உழைக்க வழி ஏற்படும்.

அநாதைகளின் எண்ணிக்கை பெருகுவதனுல் நாட்டின் பொதுச் சுகாதாரம் ஒரு வகையில் பாதிக்கப்படுவதும் கண்கூடு. கிரிமினல் குற்றங்கள் அதிகப்படுவதும் இயற்கையே. நம் நாட்டிலுள்ள ஆலயங்கள் எல்லாம் அநாதைகளின் இருப்பிடங்களாக விளங்கின. அறநிலையங்கள் எல்லாம் அவர்களது புண்பட்ட உள்ளங்களுக்கு ஆறுதல் அளிப்பனவாகத் திகழ்ந்தன. ஆனுல் மேனுட்டு நாகரிகம் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. ஆகவே இனி அந்நாடுகளைப் போலவாவது அநாதை விடுதிகள் எங்கே பார்த்தாலும் ஏற்படுத்தப்படவேண்டும். ஏழை மாணவர் களுக்கு இலவசக் கல்வி அளிப்பதும், தேக புஷ்டியுள்ள உணவைப் பிற்பகலில் அவர்களுக்குக் கொடுப்பதும் இன்றியமையாதவை. பொது ஸ்தாபனங்கள் நிதி திரட்டி, அதிலிருந்து அநாதைக் குழந்தைகளுக்கு விடுதிகள் ஏற்படுத்தலாம். குழந்தைகள்தாம் இந்நாட்டின் வருங்காலச் செல்வங்கள். ஆகவே அவர்கள் ஆரோக்கியமாக வாழ நல்ல போஷாக் குள்ள உணவுகளைப் பணம் படைத்தவர்கள் இனமாக அளிக்கலாம். வருஷப் பிறப்பன்று குழந்தைகளுக்குப் பால் விநியோகிக்கவேண்டு மென்று ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் இதை அடிப்படையாகக் கொண்டது தான். வருஷம் பூராவும் இந்தமாதிரியாகச் செய்யலாம். துணிமணிகள், பாடப் புஸ்தகங்கள் யாவும் வாங்கிக் கொடுக்க நிதி திரட்டலாம். அநாதைக் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கவும், குடிசைத் தொழில்கள் கற்றுக் கொடுக்கவும் வழி வகுக்கலாம். சமூக சீர்திருத்தவாதிகள் பொதுஜன கவனத்தைப் பிரசாரத்தின் மூலம் இந்தப் பக்கம் திருப்பவேண்டும். இது பற்றிப் பல நூல்கள் பிரசுரிக்கப்படவேண்டும். பொது ஜன அபிப்பிராயம் இதற்குச் சாதகமாகத் திரண்டு விட்டால் அரசாங்கமும் செய்ய வேண்டிய வசதிகளைச் செய்யும்.

உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை பணக்காரன் என்று இருக்கும் இன்றைய சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைத் தகர்த்து, 'எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாரதியார் பாடியது போன்ற ஒரு சமுதாயத்தைச் சிருஷ்டிக்க வேண்டும்.

குறி விளக்கம்







பாடச் சுருக்கம்

தமிழில் ஒரு வார்த்தையோடு முன்னே, பின்னே சில சொற்களோ, விகுதிகளோ சேர்ந்து பலப் புது வார்த்தைகள் உண்டாகின்றன. அம்மாதிரியான இடங்களில் ஒரு வார்த்தையின் குறித்தொடரைப் பிரதானமாக வைத்துக்கொண்டு மற்ற வார்த்தைகளின் குறித் தொடரைச் சுருக்க முடிந்தால் சுருக்கிப் படிப்பதற்கு வசதியாகச் சுருக்கங்கள் அமைக்கப்படும்.

[விதி : 240]

அத்தியாயம் 24

அடைமொழிகள்

(241) ஒரு வார்த்தைக்கு முன்னே பின்னே சில வார்த்தைகள் சேர்ந்து அவ்வார்த்தையின் பொருளைச் சிறப்புறச் செய்யும். அத்தகைய இடங்களில் மூல வார்த்தைகளின் குறித்தொடர் மாறுமல், அவற்றுக்கு முன்னே, பின்னே வருகின்ற அடைமொழிகளை மாத்திரம் வாகாகச் சுருக்கி எழுதினால் வேகம் அதிகமாகும். எழுதியவற்றை எளிதில் படிக்க முடியும். அவை எப்படி எழுதப்படுகின்றன என்பதைக் கீழே பார்க்க.

ஆரம்பத்தில் ஒரு வார்த்தைக்கு முன் வருபவை

(242) 'தன்' என்பதற்கு ஒரு புள்ளி தனியாக அதன் பின்னே வரும் கோட்டின் தலைமேல் வைக்கப்படும். உ-ம்.

தன்மதிப்பு,  தன்னடக்கம்,  தன்மானம்.

(243) 'சுய/ஸ்வய' என்பதற்கு 'ச/ஸ' சுழி தனியாக அதன் பின்னே வரும் கோட்டின் முன் இரண்டாம் இடத்தில் எழுதப்படும். உ-ம்.

 சுயமதிப்பு,  சுயகௌரவம், சுயபுராணம்.

(244) 'தன் சுய/ஸ்வய' என்பதற்கு 'ச/ஸ' சுழி தனித்து அதன் பின்னே வரும் கோட்டின் தலைமேல் 'தன்' புள்ளி வைக்கப்படும் இடத்தில் எழுதப்படும். உ-ம்.

 தன் சுயமதிப்பு, தன் சுய அந்தஸ்து, தன் சுயகௌரவம்.

(245) 'விச்வ/விச்வா/விச்வே' என்பதற்கு 'ஸ்வ/சுவ' சுழி தனித்து அதன் பின்னே வரும் கோட்டின் தலைமேல் 'தன்' புள்ளி வைக்கப்படும் இடத்தில் எழுதப்படும். உ-ம்.

 விச்வநாதன்,  விச்வாமித்திரன்,  விச்வேச்வரன்.

(246) 'உத்/உத்த/உத்தி' என்பதற்கு ஒரு சிறு கோடு தனியாக அதன் பின்னே வரும் கோட்டின் தலைமேல் எழுதப்படும். உ-ம்.

 உத்தியோகம், உத்திரவு, உத்திராடம்.

ஆனால் நடுவில் வந்தால் அதைக் காட்ட அதற்குப் பின்னே வரும் கோடு முன்னதை ஒட்டினாற்போலப் பிரித்து எழுதப்படும். உ - ம்.

சர்க்கார் உத்திரவு, அரசாங்க உதவி.

(247) 'புண்ணிய' என்பதற்கு 'ண' அதன் பின்னே வரும் கோட்டோடு சேர்த்தே எழுதப்படும். உ - ம்.

புண்ணிய பூமி, புண்ணிய பாவம்.

(248) 'புஷ்ப/புஷ்பக' என்பதற்கு 'ப' தனியாக அதன் பின்னே வரும் கோட்டுக்கு முன்னால் எழுதப்படும். உ - ம்.

புஷ்ப மாலை, புஷ்பக விமானம்.

(249) 'சந்திர' என்பதற்கு 'ச்ச' தனியாக அதன் பின்னே வரும் கோட்டுக்கு முன்னால் எழுதப்படும். உ - ம்.

சந்திரமதி, சந்திரமௌலி.

(250) 'மகா/மஹா' என்பதற்கு 'ம' தனியாக அதன் பின்னே வரும் கோட்டுக்கு முன்னால் எழுதப்படும். உ - ம்.

மகா நாடு, மகா நதி, மகா பாவி.

பயிற்சி - 73

கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

தன்னிலை, தன்மானம்,

தன்மொழி, தன்முயற்சி,

தன் நம்பிக்கை, தன் கௌரவம்,

தன்னொழுக்கம், தன் சுயகதையை,

தன் சுயபுத்தி, தன் சுயபுராணம்,

தன் சுய மரியாதை, தன் சுயமூளை,

சுயகாரியப்புலி, சுயமரியாதை,

சுய நலம், சுயதேவை,

சந்திரகுலம், சந்திரஹாரம்,

சந்திரமண்டலம், சந்திரகாந்தி,

சந்திரசேகரன், புஷ்பமாரி,

புண்ணியசாலி, புண்ணியக்ஷேத்திரம்,

தடை உத்திரவு, புண்ணியகோடி,

புண்ணியவான், புண்ணியஸ்தலம்,

பரஸ்பர உதவி, மகா சக்தி,

மகாபலிபுரம், மகாவித்துவான்,

மகாபாரதம், மகாதேவன்,

மகாஜனங்கள், புண்ணிய காலம்.

முடிவில் ஒரு வார்த்தைக்குப் பின் வருபவை

(251) 'பொழுது/போது' என்பதற்கு 'ப' அதன் முன் வரும் கோட்டோடு சேர்த்தோ அல்லது வெட்டியோ எழுதப்படும். உ-ம்.

கேட்கும்போது, சொல்லும்பொழுது,

கேட்டபோது, இருக்கும்பொழுது.

(252) 'பற்றி' என்பதற்கு 'பர்' அதன் முன் வரும் கோட்டோடு வாகாகச் சேர்க்க வசதியுள்ள இடங்களில் சேர்த்து எழுதப்படும். உ-ம்.

அதுபற்றி, அதைப்பற்றி.

(253) 'ன்/ம்' பொருட்டு என்பதற்குப் பாதியாக்கப்பட்ட 'பர்' அதன் முன் வரும் கோட்டோடு வாகாகச் சேர்க்க வசதியுள்ள இடங்களில் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

-------அதன்பொருட்டு,--------  கேட்கும்பொருட்டு.

(254) 'ன்/ம்' பரியந்தம் என்பதற்குப் பாதியாக்கப்பட்ட 'பர்' ரோடு 'ம்' சுழி 'ன்' கொக்கிப் பக்கமே சேர்த்து, அதன் முன்வரும் கோட்டோடு வாகாகச் சேர்க்க வரும் இடங்களில் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

கேட்கும் பரியந்தம்,---- --- சொல்லும் பரியந்தம்.

(255) 'முடியாது' என்பதற்குப் பாதியாக்கப்பட்ட 'ய' அதன் முன் வரும் கோட்டோடு வாகாகச் சேர்க்க வரும் இடங்களில் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

---------சொல்ல முடியாது,------  கேட்க முடியாது.

பயிற்சி - 74
கீழ்க்கண்டவற்றை எழுதிப் படிக்க

--- கொண்டிருக்கும்பொழுது,---  கேட்டுக்கொள்ளும்பொழுது,

 கேட்க முடியாது,----------  பார்க்க முடியாது,

----------  ---தர முடியாது,-------- யோசிப்பதுபற்றி,

பாடுகிறதுபற்றி,__  யோசிக்கும் பொருட்டு,

--------  பார்க்கும்பொருட்டுத்தான்,  வாசிக்கும்பொருட்டு,

--- அடிக்கும்பொருட்டு,-------  வருகிற பரியந்தம்,

-------- பார்க்கிற பரியந்தம்,  யோசிக்கிற பரியந்தம்,

 ---- இரங்கும்பொழுது,  இமைப்பொழுது.

பயிற்சி - 75
சுருக்கெழுத்தில் எழுதுக

"ராமநாதா, நீ அதைப்பற்றிக் கேட்கும்பொழுது எனக்கு அதை நாள்தோறும் சொல்வது பற்றிக் கவலை இல்லை. ஆனால் இதை நான் சொல்லி முடிக்கும் பரியந்தம் நீ தினப்படி வரவேண்டும். நான் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது நீ கவனிக்காவிட்டால் மறுபடியும் அதை என்னால் சொல்ல முடியாது. எதையும் நீ லட்சியம் செய்யாமல் அலட்சியமாக இருக்கும்பொழுது என்னாலும் சொல்ல முடியாது தான். ஆகவே கவனத்தை எப்பொழுதும் நீ இங்கே வைப்பாய். நீ படித்துக் கொண்டிருக்கும்பொழுது உனக்கு யாரும் துன்பம் செய்ய மாட்டார்கள். ஒருவன் விடாமல் எழுதிக் கொண்டிருக்கும்பொழுதே சீக்கிரத்தில் வெற்றி கிடைப்பது இல்லை. ஆகவே நீ இன்றைய தினம் மிகவும் கஷ்டப்பட்டே உழைக்க வேண்டும். எதைப்பற்றியும் நீ கலங்க வேண்டாம். நீ இப்படி இதைத் தீவிரமாய்ச் செய்வது பற்றி யாரும் ஒன்றும் குற்றம் சொல்ல மாட்டார்கள். மேலும் அவர்களால் எதையும் சொல்லவும் முடியாது. கடைசியில் நீயே வெற்றி பெறுவாய். இப்பொழுது நான் சொல்வதை அப்படியே எழுதிப் படி."

"நமது தேசம் ஒரு புண்ணிய பூமி. இதில் பல மகாநதிகள் இருக்கின்றன. அதனால் புஷ்பச் சோலைகளுடன் கூடிய புண்ணிய க்ஷேத்திரங்கள் அனேகம் இருக்கின்றன. புண்ணியசாலிகள் தங்கள் சங்கடம் போகப் புண்ணிய நீரில் சங்கற்பம் செய்து ஸ்நானம் செய்வது நம் நாட்டின் சம்பிரதாயம். சந்திரமண்டலத்தை ஆராய்ச்சி செய்ய மேல் நாட்டில் புதியதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் மகாமேரு சிகரத்தைக் கண்டு பிடிக்க மேல் நாட்டார் இந்தியா வந்திருக்கிறார்கள். அங்குத்தான் மகாதேவன், மகாசக்தியோடு வாசம் செய்கிறதாகச் சொல்லப்படுகிறது. அதைக் கண்டுபிடிக்க அரசாங்க உதவி அவசியம். சமீபத்தில்தான் நேபாள வீரன் டேன்சிங் தன் சுய நம்பிக்கையால் இமயமலை ஏறி எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த அதிசயத்தை நாம் பார்த்தோம். மேலும் மேலும் பல கோஷ்டிகள் வந்து கொண்டேயிருக்கின்றன. இதற்கான ஒரு சங்கமே அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டு அரசாங்கங்கள் பல இதற்கு உபகாரம் செய்ய முனைந்துள்ளன. நமது அரசாங்கத்தாரின் உதவி வேறு வெளிநாட்டாருக்கு இப்பொழுது கிடைக்கிறது. எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு தான் அவர்கள் இத்துறையில் தீவிரமாய் வேலை செய்கிறார்கள். அவர்களது உழைப்பு வெற்றி பெற மகாசக்தியோடு கூடிய மகாதேவன் அருள் பாலிப்பாராக"

குறி விளக்கம்





பாடச் சுருக்கம்

1. ஒரு வார்த்தைக்கு முன்னே பின்னே சில வார்த்தைகள் சேரும் போது மூல வார்த்தைகளின் குறித்தொடர் மாருமல், அவற்றுக்கு முன்னே பின்னே வருகின்ற அடைமொழிகள் மாத்திரம் வாகாகச் சுருக்கி எழுதப்படும்.

2. ஆரம்பத்தில் வார்த்தைக்கு முன் வருபவை :

(1) 'தன்' என்பதற்கு ஒரு புள்ளியும், 'தன் சுய/ஸ்வய' என்பதற்கு 'ச/ஸ' சுழியும், 'விச்வ/விச்வா/விச்வே' என்பதற்கு 'ஸ்வ/சுவ' சுழியும், 'உத்/உத்த/உத்தி' என்பதற்கு ஒரு சிறு கோடும் தனியாக அதனதன் பின்னே வரும் கோட்டின் தலைமேல் எழுதப் படும். 'உத்/உத்த/உத்தி' என்பது நடுவில் வந்தால் அதற்குப் பின்னே வரும் கோடு பிரித்து முன்னதை ஒட்டினற்போல எழுதப் படும்.

(2) 'சுய/ஸ்வய' என்பதற்கு 'ச/ஸ' சுழி தனியாக அதன் பின்னே வரும் கோட்டின் முன் இரண்டாம் இடத்தில் எழுதப்படும்.

(3) 'புண்ணிய' என்பதற்கு 'ண' பின்னே வரும் கோட்டோடு சேர்த்து எழுதப்படும்.

(4) 'புஷ்ப/புஷ்பக' என்பதற்கு 'ப' வும், 'சந்திர' என்பதற்குச் 'ச்ச' வும், 'மகா/மஹா' என்பதற்கு 'ம' வும், தனியாகப் பின்னே வரும் கோட்டுக்கு முன்னல் எழுதப்படும்.

3. முடிவில் ஒரு வார்த்தைக்குப் பின் வருபவையும், அவற்றுக்கான குறிகளும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை முன் வரும் கோட்டோடு வாகாகச் சேர்க்க வரும் இடங்களில் சேர்த்து எழுதப் படும்.

"பொழுது/போது" – 'ப'; "பற்றி" – 'பர்';
"ன்/ம் பொருட்டு" – பாதியாக்கப்பட்ட 'பர்';
"ன்/ம் பரியந்தம்" – பாதியாக்கப்பட்ட 'பர்' ரோடு 'ம்' சுழி, 'ன்' கொக்கி பக்கம் சேர்த்து.

[விதிகள் : 241 - 255]

அத்தியாயம் 25

பிரத்தியேகச் சுருக்கங்கள்

(பகுதி - 3)

(256) சில வார்த்தைகள் அடிக்கடி வேறு பல வார்த்தைகளுக்கு முன்னே, பின்னே சேர்ந்து வரும். இம்மாதிரியான வார்த்தைகளிலுள்ள சில மெய்க் குறிகளை விலக்கி மற்றவற்றை முன்னே, பின்னே வரக் கூடிய வார்த்தை களோடு சேர்த்து எழுதினால் சுலபமாகப் படிக்க முடியும்; வேகமும் அதிக மாகும். அவை எப்படி எழுதப்படுகின்றன என்பதைக் கீழே பார்க்க.

ஆரம்பத்தில் ஒரு வார்த்தைக்கு முன் வருபவை

(257) 'சர்வ' என்பதில் வரும் 'வ' விலக்கி எழுதப்படும். (பிரிவு - 17) உ - ம்.

---------- சர்வ தேசங்கள். -------------- சர்வ சாதாரணம்.

(258) 'பஞ்சாயத்து' என்பதற்கு ----- என்பது தனித்தோ, சேர்த்தோ எழுதப்படும். (பிரிவு - 18) உ - ம்.

------- பஞ்சாயத்து போர்டு, --------- பஞ்சாயத்து சபை.

முடிவில் ஒரு வார்த்தைக்குப் பின் வருபவை

(259) 'வசதி, வாய்ந்த, வாழ்க்கை' போன்றனவற்றில் வரும் 'வ' விலக்கி எழுதப்படும். (பிரிவு - 13, 15, 16) உ - ம்.

 ரொக்க வசதி, ---------- ------ பாசன வசதி,

-------  சக்தி வாய்ந்த, -----------  பொறுப்பு வாய்ந்த,


---------- அரசியல் வாழ்க்கை, ------  அன்பு வாழ்க்கை.

(260) 'உரிமை' என்பதில் வரும் 'உரி' விலக்கி எழுதப்படும். (பிரிவு - 3) உ - ம்.

--------- அடிப்படை உரிமை, --  ----- பிறப்புரிமை.

(261) 'பிரச்சினை' என்பதில் வரும் 'பிர' விலக்கி எழுதப்படும். (பிரிவு - *10*) உ - ம்.



------------ நமது பிரச்சினை, ---------- நெசவாளர் பிரச்சினை.

(262) 'தலைவர்' என்பதில் வரும் 'தலை' விலக்கி எழுதப்படும். (பிரிவு - *8*) உ - ம்.

--------- அரசியல் தலைவர். ---------------- மன்றத் தலைவர்.

(263) 'பட்சம்' என்பதில் வரும் 'ப' விலக்கி எழுதப்படும். (பிரிவு - *9*) உ - ம்.



---------- அதிக பட்சம், ------------------- தருந்த பட்சம்.

(264) 'அம்சங்கள்' என்பதில் வரும் 'அம்' விலக்கி எழுதப்படும். (பிரிவு - *1*) உ - ம்.



--------- விசேஷ அம்சங்கள், --------------- பல அம்சங்கள்.

(265) 'அநுசரித்து' என்பதில் வரும் 'அநு' விலக்கி எழுதப்படும். (பிரிவு - *2*) உ - ம்.

---------- அதை அநுசரித்து, ---------- காலப்போக்கை அநுசரித்து.

(266) 'பிரேரணை' என்பதில் வரும் 'பிரே' விலக்கி எழுதப்படும். (பிரிவு *11*) உ - ம்.



---------- அவசரப் பிரேரணை, --------- வெட்டுப் பிரேரணை.

(267) 'கணக்கு' என்பதில் வரும் 'க' விலக்கி எழுதப்படும். (பிரிவு - *6*) உ - ம்.



-------- நூற்றுக் கணக்கு, ---------- ஆயிரக் கணக்கு.

(268) 'இயக்கம்' என்பதில் வரும் ஆரம்ப உயிர்க்குறி விலக்கி எழுதப் படும். சேர்த்து எழுதும் சௌகரியத்திற்காகச் சிறிய அரைவட்டம் 'ய' மேலோ கீழோ எழுதப்படும். (பிரிவு - 5) உ - ம்.

புரட்சி இயக்கம்,  தொழிலாளர் இயக்கம்.

(269) 'உள்ள/உள்ளது' என்பதற்கு மெய்க்குறி 'ள்ள' வாகுக்கேற்பச் சேர்த்து எழுதப்படும். உ - ம்.

 ஏற்பட்டுள்ள/து, மேலுள்ள/து, நியாயமுள்ள/து.

(270) 'உத்தியோகஸ்தர்' என்பதற்கு 'ஸ்தர்' நீண்டசுழி முன்வரும் கோட்டோடு சேர்த்து எழுதப்படும். உ - ம்.

சர்க்கார் உத்தியோகஸ்தர், அரசாங்க உத்தியோகஸ்தர்.

(271) 'சாஸ்திரம்' என்பதற்கு 'ஸ்தர்' நீண்ட சுழி முன்கோட்டோடு சேர்க்கப்பட்டு, 'ம்' சுழியும் சேர்த்து எழுதப்படும். (பிரிவு - 7) உ - ம்.

 வான சாஸ்திரம்,  வேத சாஸ்திரம்.

(272) 'அல்லாதார், இல்லாதார்' என்பதற்கு முறையே என்பது அதற்கு முன்னே வரும் கோட்டை வெட்டியோ, ஒட்டியோ எழுதப்படும். (பிரிவு - 4) உ - ம்.

 நிலம் இல்லாதார், உறவினர் அல்லாதார்.

(273) 'பூர்வமாக, பூர்வமான' என்பதற்கு முறையே என்பது முன் கோட்டோடு சேர்த்து எழுதப்படும். (பிரிவு - 12) உ - ம்.

 ஆராய்ச்சி பூர்வமாக,  அதிகார பூர்வமான.

பயிற்சி - 76

இவற்றைப் பல முறை எழுதிப் பழகுக

(பிரிவு-1)

இருக்கவேண்டிய அம்சங்கள், சில அம்சங்கள்,

சிலவற்றில், சிலவற்றை,

சிலவற்றைத் தவிர, சிலவற்றுள்,

பல அம்சங்கள், பலவற்றில்,

பலவற்றை, பலவற்றைத் தவிர,

பலவற்றுள், முக்கிய அம்சங்கள்,

யோக்கியதாம்சங்கள், விசேஷ அம்சங்கள்.

(பிரிவு-2)

அதை அநுசரித்து, காலத்தை அநுசரித்து,

காலதேச வர்த்தமானங்களை அநுசரித்து, காலப்போக்கை அநுசரித்து,

தற்காலத்தை அநுசரித்து எதிர்காலத்தை அநுசரித்து,

சட்டத்தை அநுசரித்து, சட்டதிட்டங்களை அநுசரித்து,

சட்டத்திற்கு அநுசரணையாக, சட்டபூர்வமான,

சட்டபூர்வமாக, அதற்கு அநுசரணையாக.

(பிரிவு-3)

அடிப்படை உரிமை, அனுபோக உரிமை,

சமத்துவ உரிமை, சொத்து உரிமை,

பிரஜா உரிமை, பிறப்புரிமை,

வாக்குரிமை, வோட்டுரிமை,

ஜனநாயக உரிமை ஜீவாதார உரிமை.

(பிரிவு-4)

அருள் இல்லாதார், அன்பு இல்லாதார்,

கருணை இல்லாதார், செல்வம் இல்லாதார்,

நிலம் இல்லாதார், பொருள் இல்லாதார்.

(பிரிவு-5)

தொழிலாளர் இயக்கம், பொது ஜன இயக்கம்.

(பிரிவு-6)

ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான,

கோடிக்கணக்கான, நூற்றுக்கணக்கான,

நூற்றுக்கணக்கில், மொத்தக் கணக்கு,

லட்சக் கணக்கில், லாப நஷ்டக் கணக்கு,

வண்டிக் கணக்கில், வரவு செலவுக் கணக்கு,

வரவு செலவுக் கணக்கில், வருஷக் கணக்கில்.

(பிரிவு-7)

தத்துவ சாஸ்திரம், தத்துவ சாஸ்திரி,

மனோதத்துவ சாஸ்திரம், மனோதத்துவ சாஸ்திரி,

தர்ம சாஸ்திரம், பூகோள சாஸ்திரம்,

வான சாஸ்திரம், விஞ்ஞான சாஸ்திரம்.

(பிரிவு-8)

அரசியல் தலைவர், அரசியல் தலைவர்கள்,

கூட்டுறவு சங்கத் தலைவர், சபைத் தலைவர்,

தொழிற்சங்கத் தலைவர், துணைத் தலைவர் அவர்களே,

நகரசபைத் தலைவர், மன்றத் தலைவர் அவர்களே.

(பிரிவு-9)

அதிக பட்சம், இரண்டாம் பட்சம்,

உத்தம பட்சம், உயர்ந்த பட்சம்,

கிருஷ்ண பட்சம், குறைந்த பட்சம்.

சுக்ல பட்சம், பாரபட்சம்.

(பிரிவு-10)

உலகப் பிரச்சினை, சமுதாயப் பிரச்சினை,

அரசியல் பிரச்சினை, நிலப் பிரச்சினை,

நெசவாளர் பிரச்சினை, பெரிய பிரச்சினை,

ஒழுங்குப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை.

(பிரிவு-11)

அவசரப் பிரேரணை, ஒழுங்குப் பிரேரணை,

ஒத்திவைப்புப் பிரேரணை, வெட்டுப் பிரேரணை.

பட்ஜெட் பிரேரணைகள், உரிமைப் பிரேரணை,

(பிரிவு-12)

ஆக்க பூர்வமாக, ஆராய்ச்சி பூர்வமான,

உத்தியோக பூர்வமாக, சரித்திர பூர்வமான,

அதிகார பூர்வமாக, அனுபவ பூர்வமாக.

(பிரிவு-13)

இட வசதி, குடிதண்ணீர் வசதி,

சகல வசதிகளும், சுகாதார வசதி,

தக்க வசதி, தகுந்த வசதி,

தண்ணீர் வசதி, நீர்ப்பாசன வசதி,

நீர்ப்பாசன வசதியுள்ள/து, பண வசதி,

பாசன வசதி, பொருளாதார வசதி,

போக்குவரத்து வசதி, மின்சார வசதி,

ரொக்க வசதி, வாழ்க்கை வசதிகள்,

ரோடு வசதி, வீட்டு வசதி,

வேண்டிய வசதிகள், ஜாகை வசதி.

(பிரிவு-14)

ஆகியவற்றில், ஆகியவற்றை,

ஆகியவற்றைத்தவிர, எல்லாவற்றிலும்,

முதலியவற்றில், முதலியவற்றை,

முதலியவற்றைத்தவிர, முதலியவற்றுள்,

வேண்டாதவற்றில், வேண்டாதவற்றை.

வேண்டாதவற்றைத்தவிர, வேண்டாதவற்றுள்,

வேண்டியவற்றில், வேண்டியவற்றை,

வேண்டியவற்றைத்தவிர, வேண்டியவற்றுள்.

(பிரிவு-15)

சக்தி வாய்ந்த, தகுதி வாய்ந்த,

திறமை வாய்ந்த, நம்பிக்கை வாய்ந்த,

அதிகாரம் வாய்ந்த, அனுபவம் வாய்ந்த.

(பிரிவு-16)

அரசியல் வாழ்க்கை, அரசியல் வாழ்வு,

அன்பு வாழ்க்கை, நகர வாழ்வு,

நகர வாழ்க்கை, இன்ப வாழ்க்கை,

துன்ப வாழ்க்கை, இருண்ட வாழ்வில்,

கூட்டு வாழ்க்கை, துன்ப வாழ்வில்.

(பிரிவு 17)

சர்வ கலாசாலை, சர்வ சாதாரணம்,

சர்வ சாதாரணமாக, சர்வ சாதாரணமானது,

சர்வ சுதந்தரம், சர்வ தேசங்கள்,

சர்வ தேசப் பிரச்சினை, சர்வ நாசம்.

(பிரிவு-18)

பஞ்சாயத்துக் கோர்ட்டு, பஞ்சாயத்துச் சபை,

பஞ்சாயத்துத் தேர்தல், பஞ்சாயத்துப் பிரதேசம்.

பயிற்சி - 77

சுருக்கெழுத்தில் எழுதுக

" நமது பிரச்சினைகள் எல்லாவற்றிலும் மிக முக்கியமானது பொருளாதாரப் பிரச்சினைதான். அரசியல் அனுபவம் மிக்க தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடி இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கத் தீர்க்காலோசனை செய்ய வேண்டும். இந்த நாட்டில் எதேச்சாதிகாரத்தை விரும்புகிறவர்கள் வேண்டுமானால் அனுபவசாத்தியமற்ற யோசனைகளைக் கூறலாம். அதிகார வர்க்கத்தினர் சர்வாதிகாரம் செய்கிறதாகப் புகார் கூறுகிறவர்கள் இன்றையதினம் பொதுஜன அபிப்பிராயத்தைக் கொஞ்சம் கூட உணர இல்லை. ஆனால் மக்களின் மனோபாவம் எப்படி இருக்கிற தென்பதை என்னால் அறிந்து கொள்ளமுடியும். நான் சொல்வதையே எல்லோரும் அங்கீகரிக்க வேண்டுமென்று ஒருபொழுதும் வற்புறுத்த வில்லை. ஆதிக்கியம் வேண்டாமென்றுதான் நாம் ஆங்கில ஆதிபத்தி யத்தை ஒழித்தோம்" என இந்தியப் பிரதமர் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். அவர் மேலும் சொன்னதாவது :—

" ஒரு காரியத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும்பொழுது பல காரியங்களில் கவனம் செலுத்த முடியாது. அதேபோல் இந்த வருஷம் பெருத்த கஷ்டங்களை எல்லாம் நாம் சமாளிக்க வேண்டியிருந்தது. துரதிருஷ்டவசமாக இயற்கையும் நம்மைச் சோதித்தது. அதனால் ஏற்பட்ட துன்பம் கொஞ்சநஞ்சம் அல்ல. ஒரு பக்கத்தில் பஞ்ச நிவாரண வேலைகளும், மற்றொரு பக்கத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய வசதிகளும் ராஜ்யத்தின் பல்வேறு பாகங்களில் நடக்கின்றன. இவற்றைப்பற்றியெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். நம் நாட்டில் ஏராளமான மக்கள் சுகாதார வசதியின்றியும், கல்வி வசதியின்றியும், பொருளாதார வசதியின்றியும் தவிக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவி வருகிறது. அவர்களுக்கு நாம் தாராளமாக உதவ வேண்டும். விவசாயிகளின் சுபிட்ச வாழ்வே நமது முக்கியமான நோக்கமாக இருந்து வந்திருக்கிறது. இதற்காகவே ஜமீன்தாரி முறை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அதிருஷ்டவசமாகப் பொதுஜன அபிப்பிராயம் இதற்கு அநுசரணையாக இருந்தது. கண் கொட்டாமல் சர்க்காரின் போக்கைக் கவனித்து வருகிறவர்கள் கண்ணிமைப் பொழுதில் எதையும் சாதிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். பயனுள்ள வகையில் யார் என்ன யோசனை சொன்னாலும் அதற்கேற்றபடி நாங்கள் நடக்கத் தயார். துரதிருஷ்டவசமாக நாம் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வதில்லை. தப்பு அபிப்பிராயத்தைச் சிலர் இந்தச்

சமயத்தில் மக்களிடையே பரப்புவதில் பயன் இல்லை. காலதேசவர்த்தமானங்களை அநுசரித்து மக்கள் சதியாலோசனை செய்பவர்களோடு ஈடுபடாது எதையும் புனராலோசனை செய்ய வேண்டும்."

குறி விளக்கம்





பாடச் சுருக்கம்

1. அடிக்கடி வேறு பல வார்த்தைகளுக்கு முன்னே பின்னே சேர்ந்து வரும் வார்த்தைகளிலுள்ள சில மெய்க்குறிகளை விலக்கி, மற்றவை முன்னே, பின்னே வரக்கூடிய வார்த்தைகளோடு சேர்த்து எழுதப் படும்.
2. கீழே அடிக்கடி வரும் வார்த்தைகளும் அவற்றில் விலக்கப்படும் மெய்க்குறிகளும் கொடுக்கப்பட்டுள்ளன :—

1. சர்வ, வசதி, வாய்ந்த, வாழ்க்கை,	‘ வ ’	விலக்கப்படுகிறது.
2. உரிமை	‘ உரி ’	„
3. பிரச்சினை	‘ பிர ’	„
4. தலைவர்	‘ தலை ’	„
5. பட்சம்	‘ ப ’	„
6. அம்சங்கள்	‘ அம் ’	„
7. அனுசரித்து	‘ அனு ’	„
8. பிரேரணை	‘ பிரேர ’	„
9. கணக்கு	‘ க ’	„
10. இயக்கம்	‘ ஆரம்ப உயிர்க்குறி இ ’	„

3. ‘ பஞ்சாயத்து ’ என்பதற்கு என்பது தனித்தோ சேர்த்தோ எழுதப்படும்.

4. ‘ உள்ள/உள்ளது ’ என்பதற்கு ‘ ள்ள ’ சேர்த்து எழுதப்படும்.

5. ‘ உத்தியோகஸ்தர் ’ என்பதற்கு ‘ ஸ்தர் ’ நீண்ட சுழியும், ‘சாஸ்திரம்’ என்பதற்கு ‘ ஸ்தர் ’ நீண்ட சுழியோடு ‘ ம ’ சுழி சேர்க்கப்பட்டும் அவற்றுக்கு முன் வரும் கோட்டோடு சேர்த்து எழுதப்படும்.

